# வள்ளுவரின் உள்ளம்

நாமக்கல் கவிஞர்

TNSDA
04823

5 JUNI 1975

இன்ப நிலயம்

# வள்ளுவரின் உள்ளம்

2ஆம் உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
கலைக்காட்சிக் குழு
சென்னை

நாமக்கல் கவிஞர்

இன்ப நிலையம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

இரண்டாம் பதிப்பு: ஏப்ரல், 1956.
மூன்ரும் பதிப்பு: ஆகஸ்டு, 1963.
உரிமை பதிவு செய்யப்பெற்றது.

4823
5 JUN 1975

**விலை ரூ. 1-75**

894.8111109

ராஜம் பிரிண்டர்ஸ், சென்னை-5.

# பதிப்புரை

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்கு இதுவரை பலர் உரை எழுதி யுள்ளனர். அந்த உரைகளில் சில இக்காலக் கருத்துகளுக்கு மாறுபட்டவையாக இருக் கின்றன.

நாமக்கல் கவிஞர் அவர்கள் திருக்குறளுக்கு இக்காலக் கருத்துகளுக்கும் ஏற்றவாறு புது உரை எழுதியுள்ளார்கள். அந்த உரை அறிஞர் கள் பலராலும் பாராட்டப் பெற்றுள்ளன.

கவிஞரவர்கள் திருக்குறளுக்கு புது உரை காண நேர்ந்ததற்கு உரிய காரணங்களை விரி வான விளக்கத்துடன் **'வள்ளுவரின் உள்ளம்'** என்ற இந்நூலில் எழுதியுள்ளார்கள். இதை வெளியிடும் நல்வாய்ப்பளித்த கவிஞரவர்களுக்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரியதாகும்.

**சோம. சுவாமிநாதன்**

**10-1-54**

இன்ப நிலையம்.

## நாமக்கல் கவிஞர் எழுதிய
## நூல்கள்

திருக்குறள் புது உரை
திருவள்ளுவரும் பரிமேலழகரும்
வள்ளுவரின் உள்ளம்
திருவள்ளுவர் திடுக்கிடுவார்
தமிழ் மொழியும் தமிழரசும்
தேசபக்தர் மூவர்
தமிழ்த் தேன்
கீர்த்தனங்கள்
தமிழன் இதயம்
சங்கொலி
கவிஞன் குரல்
இசைத் தமிழ்
மாமன் மகள்
அவளும் அவனும்
மலைக்கள்ளன்
காந்தி அஞ்சலி
திருக்குறள் கருத்துரை

# வள்ளுவரின் உள்ளம்

உலகத்தின் தலைசிறந்த இலக்கியங்களுள் ஒன்று நம்முடைய திருக்குறள். காலம், இடம், நிறம், மதம் என்ற வேறுபாடுகளைக் கடந்து எங்கெங்கும் உள்ள எல்லா மனிதருக்கும் எக்காலத்திலும் பயன் தரக்கூடிய அறிவுரை நிரம்பிய அறநூல் திருக்குறள். மனித வர்க்கத்தின் இயற்கையமைப்பில் எந்தக் காலத்திலும் மாறுதல் இல்லாதனவாகிய தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால், திருக்குறள் என்றென்றும் அழிவில்லாதிருக்கும். அது மட்டுமின்றி எப்போதும் இளமையும் புதுமையும் உள்ளதாகவே இருக்கும். மனித சமூகத்துக்கு இன்றியமையாத எல்லா நல்லறிவையும் இப்படித் தொகுத்து வகுத்துத் தந்துள்ள ஒரு நூல் வேறு எந்த மொழியிலும் இல்லை யென்று உலகத்தின் பேரறிஞர்கள் எல்லாரும் ஒருமுகமாகப் போற்றுகின்றார்கள் என்பது திருவள்ளுவர் தமிழ் மக்களுக்கு வைத்துச் சென்ற அழியாத செல்வம்.

அத்தகைய திருவள்ளுவர் தோன்றிய காலம் கி. பி. முதல் நூற்றாண்டில் என்று சில ஆராய்ச்சிக்காரரும், கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் என்று வேறு சில ஆராய்ச்சிக்காரரும் சொல்லுவர். எது எப்படியானாலும் திருவள்ளுவர் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு

களுக்கு முன்னால் வாழ்ந்தவர் என்பது எல்லாரும் ஏற்றுக் கொள்ளுகிற உண்மை. இரண்டாயிரம் ஆண்டுகள் என்றால் இலேசான காலமா! இந்த இரண்டாயிரம் வருடங்களாகத் தமிழ் மக்கள் திருக்குறளை எவ்வளவு பயபக்தியோடு பாதுகாத்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு, திருக்குறள் பாக்களில் பாடபேதம் என்றோ இடைச்செருகல் என்றோ ஒன்றும் இல்லாததே போதிய சான்றாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப் பட்டவை என்று சொல்லப்படுகிற திருக்குறளின் மூலப் பிரதிச் சுவடிகள் இன்னும் பல அங்கங்கே இருக்கின்றன. அவைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று எந்த வித பேதமும் இல்லாமல் இருக்கின்றன. பிற்காலத்திய பிரதிகளில்தான் சிற்சில பேதங்கள் காணப்படுகின்றன. அந்தப் பேதங்களும் கூடக் குறட் பாக்களில் அல்ல. பாக்களின் வரிசைக் கிரமத்திலும் சில அதிகாரங்களின் பெயர்களிலும் மட்டும்தான் பேதங்கள் காணப்படுகின்றன.

ஆகவே திருக்குறளின் அறம் (380), பொருள் (700), இன்பம் (250) என்ற மூன்று பகுதிகளிலும் உள்ள 1330 குறள் பாட்டுகளும் எந்தவிதமான பாட பேதமும் இல்லாமலேதான் எல்லா ஏட்டுப் பிரதிகளிலும் காணப்படுகின்றன.

திருக்குறள் மூலப் பாட்டுகளில் பாட பேதம் உண்டாக்கும் முயற்சிகளெல்லாம் இந்த நூற்றாண்டில் ஆங்கிலம் கற்ற சில தமிழ் அறிஞர்கள் செய்த குற்றமே. அக்குற்றம் ஆங்கில மொழியின் பிழையல்ல. இந்த ஆங்கிலம் படித்த தமிழர்கள் தாங்கள் அந்த ஆங்கிலமொழி இலக்கியங்களில் படித்து அனுபவித்த 'சமத்துவம்', 'சகோதரத்துவம்', 'ஜன நாயகம்', 'பெண்களின் உரிமை' முதலான புதுமைக் கருத்துகளைத் திருக்குறளில் புகுத்த விரும்பியதால் திருவள்ளுவரின் நோக்கையும் திருக்குறளின் போக்கையும் தெரிந்து கொள்ள முடியாமல் திருக்குறட் பாக்களுக்குப் பாட பேதம் கற்பிக்கத் துணிந்து விட்டார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து பரவி வந்திருக்கிற தமிழ் சமு

தாயத்தின் பண்புகளைப் படமெழுதிக் காட்டுவன திருக்குறள் முதலான இலக்கியங்களே. அவற்றில் இக்காலத்தியல்புக்கு விரும்பத்தகாதன என்று கருதக்கூடிய பகுதிகள் இருக்கலாம். அல்லது அந்தப் பகுதிகள் நமக்கு விளங்காமலும் இருக்கலாம். அதற்காக நிச்சயமான ஆதாரமில்லாமல் எவ்வளவு திறமையான பாட பேதத்தைப் புகுத்தினாலும் அது வியக்கத்தக்க சாமர்த்தியமானாலும் சத்தியமாகாது. 'திருவள்ளுவர் அப்படித்தான் சொல்லியிருப்பார், இப்படி சொல்லியே இருக்கமாட்டார்' என்று வெகு அழுத்தமாகப் பாட பேதம் கற்பிக்கிறவர்களையும் இக்காலத்தில் காணலாம். ஆனால், நமக்கு முன்னாலிருந்த தமிழர்கள் திருக்குறளைத் திருவள்ளுவர் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்ற அந்தப் பாடத்திலேயே அதன் பொருளை உணர்ந்து அனுபவித்துப் போற்றி வந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் பாட பேதங்களைக் கருதியிருக்கக் காரணமில்லை.

இப்போதுள்ள சமுதாயத்தில் காணப்படுகிற சீர்கேடுகளைக் கருதியோ இனிமேல் வரவேண்டுமென்று விரும்புகிற சீர்திருத்தங்களைக் கருதியோ திருக்குறளை ஆராய்வது சரியல்ல. காலப்போக்கில் தாமாகவே மாறிப் போகிற பழக்க வழக்கங்களையோ அல்லது காலம் கருதித் தாமாகவே மாறவேண்டிய அரசியல் சட்ட திட்டங்களையோ நினைத்துக்கொண்டு எழுதப்பட்டதல்ல திருக்குறள். இப்போது, அப்போது என்றில்லாமல் எப்போதும் மனித சமூகத்தின் நல்வாழ்விற்கு வழிகாட்ட நிற்கும் பொது அறிவே திருக்குறள். எக்காலத்துக்கும் பயனளிக்கும் அந்தப் பொது அறிவை உணராமல் அப்போதைக்கப்போது காணப்படுகிற குழப்பங்களை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு திருக்குறளிற்குப் பொருள் காண முயன்றவர்கள் குறள் பாட்டுக்களின் மூலத்தையே மாற்றிவிட முனைந்துவிட்டார்கள். மூலத்தை மாற்ற முயலாதவர்களும் திருவள்ளுவர் நினைத்திருக்கவே முடியாத பொருள்களைத் திருக்குறளில் புகுத்தி அவரவர்கள் விரும்பியபடிக்கெல்லாம் திரித்துரைக்கத் தலைப்பட்டு விட்டார்கள்.

இவர்களுக்குள் குறட்பாக்களின் மூலத்தை மாற்ற முயன்றவர்களையும் இனி முயலுகின்றவர்களையும் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் மூலத்தை மாற்றுவதற்கு ஏட்டுப் பிரதிகளும் இடங் கொடுக்க மாட்டா. உலகமும் ஒத்துக்கொள்ளாது. அப்படி முயன்றவர்கள் எல்லாரும் படுதோல்வியுற்று அவமதிப்பிற்கே ஆளானார்கள். அதற்கு உதாரண மாகப் பாண்டித்துரைத் தேவர் காலத்தில் ஒரு ஐரோப்பியர் திருக்குறள் பாக்கள் சிலவற்றை மாற்றி அச்சிட்டு அவமானமடைந்ததைக் கேட்டிருக்கிறோம். அதாவது தென்னாட்டில் மிகப் பெரிய உத்தியோகத்தி லிருந்த ஒரு ஆங்கிலேயர் தமிழ் மொழி மிகவும் இனிமை யானது என்பதைக் கேள்விப்பட்டு அதை மிக்க ஆர்வத் தோடு கற்றுக்கொண்டார். திருக்குறளையும் படித்து அதிலுள்ள மிக உயர்ந்த கருத்துக்களைப் பாராட்டி அனுபவித்தார். தமிழில் உள்ள நல்ல இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுள்களாகவே இருந்ததையும் கண்டு இன்புற்றார். தம்முடைய தாய் மொழியாகிய ஆங்கி லத்தில் காணமுடியாத எதுகை, மோனை முதலிய அழகுகள் தமிழ்ப் பாட்டுகளில் இருப்பதைக் கண்டு வியந்தார். அப்படிப்பட்டவர் திருக்குறளைப் படித் தறிந்தபின் மிக நல்ல அறிவுரைகள் அடங்கிய திருக் குறளிலுள்ள பாட்டுகள் மற்ற தமிழ்ப் பாட்டுகளில் உள்ளதுபோல் எதுகை, மோனை இல்லாதிருப்பதைக் கண்டு மிகவும் வருத்தப்பட்டார். திருவள்ளுவர் மிக உயர்ந்த அறிவாளியாக இருந்தாலும் பாட்டுகளை எதுகை மோனையோடு அமைக்கத் தெரியாமலோ அல்லது கவனக் குறைவினாலோ அப்படி எழுதிவிட்டார் போலும் என்றும் பரிதாபப்பட்டு, தான் அந்தக் குறையை நீக்கிக் குறட்பாக்களை எதுகை மோனை அமையத் திருத்தினால் அது தமிழுக்குப் பெரிய சேவை செய்ததாகுமெனக் கருதினார். உடனே பல குறள்களை எதுகை மோனைகள் அமைய மாற்றி எழுதி அவற்றிற்கு ஆங்கிலத்தில் உரையும் எழுதி சுமார் இரண்டாயிரம் பிரதிகளும் அச்சடித்துவிட்டார். அவர் மாற்றி எழுதி அச்சிட்ட மாதிரி எப்படியென்றால்,

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்பதை

அகர முதல வெழுத்தெல்லா மாதி
உகர முதற்றே உலகு

என்ற மாதிரி. இப்படி அச்சடிக்கப்பட்ட அந்தப் புத்தகத்தைத் தன்னுடைய உத்யோக செல்வாக்கின் எல்லைக்கு உட்பட்ட பல பேருக்குக் காட்டினராம். அவர்களிற் பெரும்பாலாரும் துரையவர்களுடைய தமிழறிவை மிகவும் மெச்சினர்களாம். அப்படி மெச்சின வர்கள் திருக்குறளை ஆராய்ந் தறிந்தவர்களாக இருந் திருக்க முடியாதென்றாலும் அவர்களெல்லாம் தமிழ்ப் படித்தவர்கள். அவர்களுக்குள் திருக்குறளை ஓரளவு நன்ருகப் படித்தவர் களும் இருந்திருக்கலாம். அவர்கள் துரை செய்தது சரியல்லவென்று நினைத்திருந்தாலும் துரைமகனரின் உயர்ந்த உத்யோக பதவியைக் கருதி, தங்களுடைய உண்மையான கருத்தை வெளியிடாமல் இச்சகமாக மெச்சியும் இருக்கலாம். எப்படியோ இவர்கள் மெச்சிவிட்டதில் மகிழ்ந்து மயங்கிவிட்ட துரை தாம் செய்த காரியம் மிகவும் சிறந்த திருப்பணியென்றே தீர்மானித்துக்கொண்டு அந்தப் புத்தகத்தைத் தமிழ்ப் புலவர்களுடைய சங்கத்திலேயே அரங்கேற்றிவிட வேண்டுமென்று ஆசைகொண்டார்.

அக்காலத்தில் தமிழ்ப் புலமைக்குப் பேராதரவாக விளங்கியவர்கள் திரு. பாண்டித்துரை தேவரும் அவருடைய தமயன் திரு. பொன்னுசாமித் தேவருமாவர். திரு. பாண்டித் துரைத் தேவர்தான் பிற்காலத்திய 'தமிழ்ச் சங்கம்' என்ற தமிழ்ப் புலவர்கள் சங்கத்தை உண்டாக்கியவர். பாண்டித்துரைத் தேவரும், பொன்னுசாமித் தேவரும் மிகச் சிறந்த தமிழ் அறிஞர்கள். அவர்களைப் பற்றியும் அவர்கள் நடத்திவந்த 'தமிழ்ச் சங்கத்'தைப்பற்றியும் கேள்விப்பட்டிருந்த இந்த ஆங்கிலேய அதிகாரி, தம் முடைய புதுமாதிரித் திருக்குறள் புத்தகத்தைப் பற்றி திரு. பாண்டித்துரைத் தேவருக்குத் தெரியப்படுத்தி அதை அரங்கேற்றுவதற்காக திரு. பாண்டித்துரைத்

தேவரை தாம் சந்திக்க வேண்டும் என்றும் கடிதம் எழுதினார். திரு. பாண்டித்துரைத் தேவர் ஒரு சிற்றரசர் போன்ற பெருநிலக்கிழார். மிகுந்த செல்வமும் செல்வாக்கும் உள்ளவர். அரசாங்கத்தாரால் மிகவும் மதிக்கப் பெற்றவர். ஆங்கிலமும் கற்றவர். ஜில்லாவிற்கே தலைமை அதிகாரியான ஒரு ஆங்கிலேயர் தம்மைச் சந்திக்க விரும்பினதை உடனே வரவேற்று ஒரு நாளையும் நேரத்தையும் குறிப்பிட்டு துரையவர்களுக்கு அழைப்பு அனுப்பினார்.

குறிப்பிட்ட நாளில் நியமித்த நேரத்தில் துரையவர்கள் திரு. பாண்டித்துரைத் தேவருடைய அரண்மனைக்கு வந்தார். முன் ஏற்பாடுகளுடன் துரையவர்களை வரவேற்கக் காத்திருந்த பாண்டித்துரைத் தேவரும் அவருடைய தமயன் பொன்னுச்சாமித் தேவரும் பிறரும் வெகு மரியாதையோடு வரவேற்று உபசரித்தனர். உபசரிப்புகள் முடிந்தபின் துரையவர்கள் தாம் அச்சடித்த திருக்குறள் புத்தகத்தில் சிலவற்றை எடுத்து திரு. பாண்டித்துரைத் தேவரிடமும், திரு. பொன்னுச்சாமித் தேவரிடமும் இன்னும் இரண்டொருவரிடமும் கொடுத்தார். வாங்கினவர்கள் எல்லாரும் வெகு ஆவலோடு அப்புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிப் படித்துப்பார்க்க ஆரம்பித்தார்கள்.

மற்றவர்களெல்லாம் படித்தோ படிக்காமலோ புத்தகத்தில் உள்ளதைப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால், பொன்னுசாமித்தேவர் மட்டும் அதை விரித்துப் பார்த்த இரண்டொரு நிமிஷத்துக்குள் அதை மூடிவிட்டு துரையவர்களைப் பார்த்துப் பெரு மூச்சு விட்டுக்கொண்டு வெகுநேரம் மௌனமாக இருந்துவிட்டு, மறுபடியும் புத்தகத்தை விரித்து அதற்கு விலை ஏதேனும் போடப்பட்டிருக்கிறதா வென்று பார்த்தார். விலை அச்சடித்திருப்பதைப் பார்த்தபின் துரையவர்களைப் பார்த்து,

**“ எத்தனை பிரதிகள் அச்சடித்தீர்கள் ?” என்றார்.**

**“ இரண்டாயிரம் பிரதிகள் ” என்றார் துரை.**

"எவ்வளவு பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன?"

"சுமார் ஐநூறு பிரதிகள் இருக்கலாம்."

"மீதி ஆயிரத்து ஐநூறையும் நான் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு உடனே அரண்மனைக்குள் சென்றார்.

பாலவனத்தம் ஜமீன் பாண்டித்துரைத் தேவருடையது. அந்த ஜமீனுக்குச் சொந்தக்காரரான ஒரு உறவினர் பாண்டித்துரைத் தேவரை ஸ்வீகாரப் புத்திரனாகக் கொண்டதனால் அவருக்கு உரிமையாயிற்று. என்றாலும் பாண்டித்துரையின் உடன் பிறப்புத் தமயனான பொன்னுச்சாமித் தேவரே அந்த ஜமீனை ஆண்டுவந்தது போல் காரியங்கள் நடந்து வந்தன. அதனால் கஜானாவுக்கும் பொறுப்பாளியான பொன்னுச்சாமித் தேவர் உள்ளே போய் துரையவர்களுக்கு ஆயிரத்து ஐநூறு பிரதிகளுக்காகக் கொடுக்கவேண்டிய தொகை பூராவையும் எடுத்துக் கொண்டு வந்து துரையிடம் கொடுத்து,

"உடனே யாரையாவது அனுப்பி அந்தப் புத்தகத்தின் பிரதிகள் மிச்சமாக உள்ள எல்லாவற்றையும் எடுத்து வரச் செய்யுங்கள்" என்றார்.

துரையவர்களுக்கு மிகுந்த களிப்பும் வியப்பும் உண்டாகிவிட்டது. தாம் நினைத்ததற்கு மிகவும் அதிகமாகவே தம்முடைய புத்தகத்திற்குச் சிறப்பிருப்பதாக எண்ணிக் கொண்டு வாங்கின பணத்தைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு,

"மீதியுள்ள பிரதிகளையெல்லாம் நீங்களே வாங்கிக் கொண்டதற்கு மிக்க நன்றியுடன் வந்தனமளிக்கிறேன். ஆனால் புத்தகங்களை வாங்கிக்கொண்டது மட்டும் போதாது. நான் வந்த காரியம் புத்தகங்களை விற்பதற்கல்ல. இந்தப் புத்தகத்தைத் தாங்கள் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றிப் பாராட்டவேண்டும்" என்றார்.

"தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்ற வேண்டாம். இங்கேயே இப்போதே அரங்கேற்றி விடுகிறேன். எல்லாப்

பிரதிகளையும் உடனே இங்கே கொண்டுவரச் செய்யுங்கள்" என்று பொன்னுச்சாமித் தேவர் துரிதமாகச் சொன்னார்.

அதைக்கேட்ட பாண்டித்துரைத் தேவரும் மற்றும் அங்கிருந்த எல்லாரும் பொன்னுச்சாமித் தேவர் அப்படிச் சொன்னதின் மர்மத்தை அறிய முடியாமல் திகைத்தார்கள். உடனே புத்தகங்கள் விரைவில் வந்து சேர வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. துரையும் அங்கேயே இருந்தார்.

புத்தகங்களெல்லாம் வந்து சேர்ந்தன. அவை வந்து சேருவதற்கு முன்னால் பொன்னுச்சாமித் தேவர் தம்முடைய வேலைக்காரர்களிடம் சொல்லி வைத்திருந்தபடி அந்தப் புத்தகங்கள் அரண்மனையின் ஒரு புறத்தில் திறந்த வெளியாக இருந்த இடத்தில் அடுக்கப்பட்டன. ஏன் புத்தகங்கள் அப்படி வெளியிடத்தில் அடுக்கப்படுகின்றன வென்பதை அறியாமல் அந்தத் துரையவர்களும் மற்றவர்களும் மலைத்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் புத்தகக் குவியலின்மேல் ஒரு டின் மண்ணெண்ணெய் கொட்டப்பட்டது. எண்ணெய் கொட்டப்படும் போதே பொன்னுச்சாமித் தேவர் துரையைப் பார்த்து "இதோ உங்கள் புத்தகத்தை அரங்கேற்றுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே தயாராகத் தம் கையில் வைத்திருந்த தீக்குச்சியைக் கிழித்து அந்தப் புத்தகக் குவியலுக்கு நெருப்பு வைத்து விட்டார்.

அதைக் கண்ட துரைக்குக் கடுங்கோபமுண்டாகித் தம்மை அப்படி அவமானப்படுத்தியதைச் சும்மா விடப் போவதில்லை என்று பலவிதமான கடுமொழிகளில் சபதம் செய்து ஆரவாரித்தார். அவருடைய ஆர்ப்பாட்டங்களை அடக்க வெகு நேரமாயிற்று. அதற்குள் அந்தப் புத்தகங்கள் அனைத்தும் வெந்து சாம்பலாகிவிட்டன. அந்த வேடிக்கையைப் பார்க்க ஏராளமான மக்கள் கூடி விட்டார்களாம்.

வெகு நேரம் கூச்சல்போட்டுக் குமுறிக்கொண்டிருந்த ஆங்கிலேய அதிகாரியின் ஆத்திரங்கள் ஒரு

வாறு அடங்கிய பின் பொன்னுச்சாமித் தேவர் துரையவர்களை அணுகி,

“துரையவர்களே! கோபித்துக் கொள்ளவேண்டாம். நீங்கள் செய்த வேலை தமிழ் அறிஞர்களையும் தமிழ்த்தாயையும் மிகவும் அவமானப்படுத்துகிற காரியம். இனி இந்த மாதிரிக் காரியங்களில் தலையிடவேண்டாம். உங்களுடைய வேதமாகிய ‘பைபிளை’ நான் என் இஷ்டம் போல் மாற்றி அச்சிட்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்?” என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே துரையவர்கள் சொல்லாமல் அங்கிருந்து போய் விட்டார்.

பிறகு அந்தத் துரை, தாம் ஒரு ஆங்கிலேயர் என்ற செல்வாக்கைக்கொண்டு சென்னை கவர்னர் மூலமாகப் பொன்னுச்சாமித் தேவருக்கும் அவர் அதிகாரம் நடத்திய பாலவனத்தம் ஜமீனுக்கும் தீங்கு செய்ய முயன்றதாகவும் கவர்னரிடத்தில் பாண்டித்துரைத் தேவருக்கிருந்த செல்வாக்கால் அது முடியவில்லையென்றும் சொல்லப்படுவதுண்டு.

இந்த நிகழ்ச்சியைப்பலபேர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். புத்தகங்களிலும் வெவ்வேறு விதமாக அச்சடிக்கப்படுகிறது. மேலே எழுதியிருப்பது, பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு மதுரை நண்பரிடத்தில் நான் கேள்விப்பட்ட நினைவிலிருந்து சொல்லப்படுகிறது. நிகழ்ச்சியின் நுணுக்கங்கள் எப்படியிருந்தாலும் சாரம் ஒன்றேதான். அது என்னவென்றால் திருக்குறளுக்குப் பாடபேதம் உண்டாக்க முயன்றது மிகவும் பலமாகக் கண்டிக்கப்பட்டது என்பது தான். எனவே திருக்குறளுக்குப் பாட பேதங்கள் இல்லையென்பதை நிச்சயமாகக் கொள்ளலாம். அதனால் பாட பேதங்களைப் பற்றிய விசாரத்தை விட்டுவிட்டு பொருள் பேதங்களைப் பற்றி ஆராய்வோம்.

‘மூலத்துக்குப் பாட பேதம் இல்லை’ என்று சொல்லுவதைப்போல் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல, மூலத்துக்குப் பொருள் பேதம் இல்லை’ என்பது.

ஏன் எனில் தமிழ்மொழி மிகப் பரந்த சொல்லாட்சியும் பொருளாட்சியும் உள்ளது. அன்றியும் தமிழுக்கே தனிச் சிறப்பான புணர்ச்சி விதிகளாலுண்டாகும் சந்தி விகாரம் முதலியன ஒரு சொற்ருெடரை வெவ்வேறு விதங்களில் பிரித்து ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறு பட்ட பொருள்களைக் கொள்ள இடங்கொடுக்கும். அப் படிப் பதம் பிரிப்பதில் எப்படி ஒரு சொற்ருெடர் முற் றிலும் நேர்மாருன பொருளைக் கொடுக்க முடியும் என்ப தற்கு ஒரு எளிய உதாரணம் பார்ப்போம் :

'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தின் முதற் குறள்,

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
ருனமிழ்த மென்றுணரற் பாற்று

என்பது. இதை எப்படிப் பிரித்துப் பொருள் கொள்ளு கிருேம் என்ருல்; வான்+நின்று+உலகம்+வழங்கி+ வருதலால்+தான்+அ மி ழ் த ம்+என்று+உணரல்+ பாற்று—என்று பிரித்து, அதற்கு வான்=மழை, நின்று=பெய்வதிலிருந்து, உலகம்=இந்த உலகத்தி லுள்ள உயிர்கள், வழங்கி வருதலால்தான்=ஜீவித்து வருவதனுலே தான், அமிழ்தம் என்று=அந்த மழை அமிர்தம் என்று, உணரல் பாற்று=நினைக்க வேண்டிய தன்மையுடையது. இதைக் கூட்டிப் படித்தால்—மழை பெய்வதிலிருந்து உலகத்திலுள்ள உயிர்கள் ஜீவித்து வருவதனுல்தான் அந்த மழை அமிர்தம் என்று நினைக்க வேண்டிய தன்மையுடையது. இதுதான் இந்தக் குறளின் சரியான பொருள்.

இனி இந்தக் குறளிலுள்ள ஒரு சொற்ருெடரை முன்மாதிரி பிரிக்காமல் வேறு விதமாகப் பிரித்தால் எப்படிப் பொருள் முற்றிலும் எதிர்மறையாகிவிடுகிறது என்பதைப் பாருங்கள்; வானின் றுலகம்—என்ற சொற்ருெடரை முன்னே வான்+நின்று—என்று பிரிக் கப்பட்டது. இப்போது அதையே வான்+இன்று— என்று பிரிக்கப்பட்டது. இப்போது அதையே வான்+ இன்று—என்று பிரிப்போம். புணர்ச்சி இலக்கணம் அதை இப்படியும் பிரிக்கப் பூரண அனுமதியளிக்

கின்றது. இப்போது 'வான்+இன்று'—என்பதற்குப் பொருள் 'மழை இல்லாமல்' என்றாகிறது. அப்படியானால் இந்தக் குறளுக்கு அர்த்தம்—மழை இல்லாமல் உலகத்திலுள்ள உயிர்கள் ஜீவித்து வருவதனால்தான் அந்த மழையில்லாமை அமிர்தம் என்று நினைக்க வேண்டிய தன்மையுடையது—என்றாகிறது அல்லவா? இப்படிப் பிரித்துக் காட்டியிருப்பது, எப்படி ஒரு சொற்றொடரை வெவ்வேறு விதமாகப் பதம் பிரிப்பதால் முற்றிலும் மாறுபட்ட உரைகள் காணலாம் என்பதற்கு மட்டும் தான் உதாரணம். இப்படிப் பல குறள்களிலுள்ள பதங்களைப் பலபேர் பல விதமாகப் பிரித்து அவரவர்கள் விருப்பப்படி பொருள் சொல்லத் தமிழ் மொழியில் இடமிருக்கிறது. அதனால்தான் குறளின் மூலத்துக்குப் பாட பேதம் உண்டாக்க முயல்கின்றவர்களைக் கண்டித்து வாயடக்க முடிவதைப்போல் பொருள் பேதம் சொல்லுகிறவர்களை உடனே கண்டித்து வாயடக்க முடிவதில்லை.

ஆனால் எத்தனைபேர் எவ்வளவு சாமர்த்தியமாகப் பதம் பிரித்து எத்தனை விதமான பொருள் சொன்னாலும் குறளின் கர்த்தாவாகிய திருவள்ளுவர் ஒரு குறளுக்குக் குறிப்புள்ள ஒரு பொருளைத்தான் கருதியிருப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நிரந்தரமாகிய அறங்களை வகுத்து, மனித சமுதாயத்தில் தனி மனிதனுடைய வாழ்க்கை விதிகளை வரையறுத்துச் சொல்லவென்றே ஆக்கப்பட்ட அற நூலில் அதன் ஆசிரியர் ஒரு குறளுக்கு இரண்டு பொருள்களோ மூன்று பொருள்களோ எண்ணியிருக்க மாட்டார். இக்காலத்தில் ஒரே குறளுக்குப் பல பேர் பல பொருள்களைச் சொல்லத் துணிவதற்குக் காரணம் 'திருவள்ளுவர் கருதிய உரை இதுதான்' என்று அறுதியிட்டுச் சொல்லுவதற்கு ஆதாரமாக அவர் கருதிய உரையை நமக்கு விளக்கக்கூடிய உரைப் பிரதிகள் கிடைக்காது போனதுதான்.

திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றிய சபையில் நிச்சயமாக அவர் அவருடைய குறள்களுக்கு உரை சொல்லித்தான் இருப்பார். அரங்கேற்றிய அதே நாளில்

தம்முடைய 1330 குறள்களுக்கும் பொருள் சொல்லி யிராவிட்டாலும் முக்கியமான சில பகுதிகளுக்காவது அன்றைய தினத்தில் உரை சொல்லித்தான் இருப்பார். பிறகு கொஞ்சம்—கொஞ்சமாக எல்லாக் குறள்களுக்கும் சபைகளிலோ அல்லது தம்முடைய மாணவர்களி டையோ அல்லது அவரை ஆதரித்தவராகச் சொல்லப் படுகிற ஏலேலசிங்கருக்கோ எல்லாக் குறள்களுக்கும் உரை சொல்லித்தான் இருக்கவேண்டும். அவராகவே எல்லாக் குறள்களுக்கும் விளக்கம் சொல்லியிருப்பார் என்று நினைப்பதுதான் நியாயம். அப்படி அவரே சொல்லியிராவிட்டாலும் அவருடைய சீடர்களோ மற்ற வர்களோ அவரை இரந்து கேட்டாவது உரை சொல்லச் செய்திருப்பார்கள். அல்லாவிட்டாலும் திருக் குறளுக்குச் சிறப்புப்பாயிரமாக அமைந்துள்ள பாராட்டு களைப் பாடிய இறையனுர் முதலாக ஔவையார் ஈருகச் சொல்லப்படுகிற 53 புலவர்களிற் சிலராவது திரு வள்ளுவரை அவருடைய நூலுக்கு அவர் கருதிய உரை யைக் கேட்டிருக்க மாட்டார்களா? திருவள்ளுவர் தாம் செய்த குறள்களுக்குத் தாம் கருதிய உரைகளைச் சொல் லித்தான் இருப்பார். அந்த உரையைச் சில பேராவது ஏடுகளில் எழுதிக்கொண்டுதான் இருப்பார்கள். அக் காலத்திலிருந்த புலவர்களெல்லாம் வியந்து புகழ்ந்து சிரமேற்கொண்டு வணங்கிய நூலாகிய அத்திருக்குற ளுக்குச் சிலர் எழுதிக்கொண்ட உரையைப் பல பேர்கள் பிரதிகள் எடுத்துக் கொண்டுதான் இருப்பார்கள். அந்தப் பிரதிகளில் ஒன்ருவது நமக்குக் கிடைக்க வில்லை. அதற்குக் காரணம் திறக்குறள் தோன்றியபின் கழிந்துள்ள இரண்டாயிரம் ஆண்டுகளில் வாழையடி வாழையாகத் திருக்குறள் மூலத்தைப் பிரதியெடுத்து வைத்துப் பாதுகாப்பதே வெகு பாடாகப் போய்விட்ட தால் உரைகளின் பிரதி யெடுப்பது முற்றிலும் அற்றுப் போயிருக்கவேண்டும். 1330 குறள்களை மட்டுமே பிரதி யெடுத்துக்கொள்ளப் பெரு முயற்சி வேண்டும். அப்படி யிருக்கும்போது 1330 குறள்களுக்கும் பதவுரையும் பொழிப்புரையும் கருத்துரையும் விளக்கமும் இலக்கணக் குறிப்புகளும் பனை ஏட்டில் எழுத்தாணி கொண்டு

எழுதுவதென்றல் இலேசான காரியமா? அப்படி எழுதினலும் அது எவ்வளவு பெரிய சுவடிக் கட்டாக இருக்கும்! அப்படியும் எழுதிவைக்கப்பட்டிருந்த எத்தனை உரைப் பிரதிகள் கரையானுக்கு இரையாயினவோ! அல்லது மக்கி உதிர்ந்து போயினவோ! அநேகம் பழந்தமிழ் நூல்களின் மூலங்களேகூட நமக்குக் கிடைக்காமல் கரையான் தின்றே மக்கிப்போயோ மறைந்து விட்டன என்பதை நமது தமிழ்த் தாத்தா உயர்திரு. உ. வே. சாமிநாத ஐயரவர்களுடைய ஆராய்ச்சிகளால் அறிவோம். அப்படியிருக்க தெய்வத் திருவாக்கென்று உலகமெல்லாம் வணங்குகிற இந்தத் திருக்குறளின் உரை கிடைக்காவிட்டாலும் மூலமாவது சிதைவின்றிக் கிடைத்திருப்பது தமிழ்த் தாயின் தவம்தான்.

எனவே, திருவள்ளுவர் வெளியிட்ட அவர் கருத்துகளைக் காட்டக்கூடிய அவர் காலத்து உரை நமக்குக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட உரைப் பிரதி ஒன்ருவது கிடைத்திருந்தால் இப்போது நினைத்தவர்கள் நினைத்தபடி உரை சொல்லத் துணியமாட்டார்கள்.

## 2. பிற்காலத்து உரைகள்

எனவே, திருவள்ளுவர் வாழ்ந்திருந்த காலத்தில், அவரே சொல்லிப் பிறர் கேட்டு எழுதிவைத்திருந்த உரையின் ஏட்டுப் பிரதிகளெல்லாம் திருவள்ளுவர் காலத்துக்குப்பின் சில நூற்றுண்டுகளில் மறுபடியும் புது ஏடுகளில் எழுதிவைக்கும் உழைப்பே மேற்கொள்வாரில்லாமல்—மக்கி மறைந்தொழிந்தன. திருவள்ளுவர் சொன்ன உரைக் கருத்துகளடங்கிய ஏட்டுப் பிரதிகளோ, அல்லது திருவள்ளுவரே எழுதச் செய்திருந்த உரையின் ஏட்டுப் பிரதிகளோ மறைந்த பின்னும் திருவள்ளுவர் காலத்திய உரைகளை வாய்மொழியாகப் பாடம் சொல்லி வந்த பரம்பரைப் பண்டிதர்கள் இருந்திருப்பார்கள். அப்படிப்பட்ட பண்டிதர் பரம்பரைகளும் சில நூற்றுண்டுகளில் மறைந்தொழிந்தன. இப்படியாகத் திருக்குறளுக்குத் திருவள்ளுவர் காலத்தில்

வெளியிடப்பட்ட உரையை அறியக்கூடியதும் அனுமானிக்கக் கூடியதுமான அறிகுறிகள் யாவும் அழிந்து போன பிற்பாடு, திருவள்ளுவர் காலத்துக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் திருக்குறளுக்கு உரை எழுத ஆரம்பித்தார்கள். இத்துணை காலமும் திருக்குறளின் மூலம் மட்டும் அப்போதைக்கப்போது புதுப்புது ஏடுகளிற் பதியப்பெற்று பாட பேதமில்லாமல் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு வாய் மொழியாக அங்கங்கே பலபேர் பலவிதமாக உரை சொல்லிக்கொண்டுதான் வந்திருப்பார்கள்.

ஆனாலும் முதல் முதல் திருக்குறளுக்கு எழுத்தாலாகிய உரை கண்டவர் தருமர் என்பவர் என்று சொல்லப்படுகிறது. தருமருக்குப்பின் மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்ற எட்டுப்பேர் திருக்குறளுக்குத் தனித் தனியே உரை எழுதியுள்ளார்கள். இவற்றுள் மணக்குடவர் உரை ஒன்றே பூரணமாக வெளிவந்திருக்கிறது. மற்றவர்கள் எழுதிய உரைகளில் சில பேருடைய உரைகளே ஸ்ரீ தருமபுர ஆதினத்தார் வெளியிட்டுள்ள 'திருக்குறள்—உரைவளம்' என்ற அருமையான ஆராய்ச்சி நூலில் காணக்கிடைக்கின்றன. இவற்றுள் சிலவற்றை இதற்கு முன் ஆராய்ச்சிக்காரர்கள் அறிந்திருக்கலாம் என்றாலும், பரிமேலழகருக்கு முன்னால் திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளைத் தேடி ஆராய்ந்து இப்படித் திரட்டித் தொகுத்த பெருமை தருமபுர ஆதீனத் தமிழ்த் துறைத் தலைவர் வித்துவான் ஸ்ரீ ச. தண்டபாணி தேசிகருக்கே உரியது. இப்பெருந் தமிழ்த் திருப்பணியைச் செய்வித்த தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்குத் தமிழுலகம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

கிடைத்த மட்டிலும் அச்சிடப்பட்டிருக்கிற உரைகளை நுணுக்கமாக ஆராய்ந்தால் பரிமேலழகருக்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே திருக்குறள் உரைகள் எப்படிச் சிதைவடைந்திருக்கின்றன என்பது தெரியவரும்

உரை இல்லாமல் வெறும் மூலம் மட்டும் உள்ள ஏட்டுப் பிரதிகளில் பாட பேதங்களோ வரிசைக் கிரமத்தில் மாறுதல்களோ அதிகம் இல்லாமலிருக்க, இந்த உரையாசிரியர்கள் எழுதியுள்ளனவற்றில் மட்டும் சில பாட பேதங்களும் பல வைப்பு முறையின் இடபேதங்களும் காணப்படுகின்றன. இந்த உரையாசிரியர்கள் ஒவ்வொருவரும் குறள்களின் அடுக்கு வரிசையை வெவ்வேறு விதமாக அமைத்திருக்கிறார்கள். இந்த வரிசைச் சிதைவு ஒவ்வொரு அதிகாரத்திலும் காணப்படுகின்றன. ஏறத்தாழ எல்லா அதிகாரங்களிலும் அந்தந்த அதிகாரத்தின் முதற் குறள் அந்த அதிகாரத்தின் பெயர் எந்த விஷயத்தைக் குறிக்கிறதோ அந்த விஷயத்தின் எல்லையை வரையறுக்கத் தக்கனவாகவே, மூலங்கள் மட்டும் உள்ள ஏட்டுப் பிரதிகளில் உள்ளன. அதற்கென்றே அது முதலில் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட முதற் குறளை இந்த உரையாசிரியர்களில் ஒருவர் கடைசியிலும், இன்னொருவர் நடுவிலும், மற்றொருவர் வேறொரு இடத்திலும் வைத்து உரை எழுதியிருக்கிறார்கள். உதாரணமாக 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தின் முதற்குறள்,

"வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென் றுணரற் பாற்று"

என்பது. இந்தக் குறள் மழை பெய்ய வேண்டியதன் இன்றியமையாத் தன்மையைக் குறிக்கிறது. மழை பெய்வதனால்தான் உலகத்தில் உயிர்கள் பிழைத்திருக்க முடிகிறது. அதனால் மழைதான் உயிருண்டாக்கும் அமிர்தம் என்று கருதவேண்டும் என்று மழையின் பயனை எல்லை கட்டிச் சொல்லுகிறது. இதற்குப் பின்னலிருக்கிற ஒன்பது குறள்களும் மழையின் இந்த உயிர் வளர்க்கும் குணத்தை விளக்க வந்தவை என்பது மிக நன்றாகத் தெரிகிறது. அதனால் இந்தக் குறள் தான் மழை என்பதைப் பற்றிச் சொல்லுகின்ற இந்த அதிகாரத்தின் முதற் குறளாக இருக்கத்தக்கது என்பதில் தடையில்லை. இந்த முதற்குறளை மேற்சொன்ன உரையாசிரியருள் மணக்குடவரும் காளிங்கரும் அதிகாரத்தின் கடைசிக் குறளாக

வைத்திருக்கிருர்கள். பரிதி என்பவர் இதை ஒன்பதாவது குறளாக வைத்திருக்கிருர். இதேவிதமாக அநேக அதிகாரங்களிலும் இவர்கள் குறள்களை அடுக்கி வைத்திருக்கிற வரிசைக்கிரமம் ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுபட்ட முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி வந்தது? இவர்கள் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு விதமாக மூலப் பிரதிகள் கிடைத்திருக்குமா?

குறள்களின் அடுக்குமுறையில் மட்டுமன்றி குறள்களுக்கு உரை சொல்லுவதிலும் ஒருவருக்கொருவர் பல இடங்களில் மிகவும் மாறுபடுகின்றனர். அது மட்டுமன்றி ஒவ்வொருவரும் வெவ்வேறு சமயச் சார்புகளைப் புகுத்திப் பொருள் செய்கின்ருர்கள். காலம், இடம், நிறம், சமயம், ஜாதி முதலானவற்றை யெல்லாம் கடந்து நிற்கின்ற சத்தியங்களைச் சொல்லுகின்ற திருவள்ளுவரின் கருத்துகளுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத் முறையில் இந்த உரையாசிரியர்கள் அவரவர்கள் மனம் போனபடி அவரவர்கள் காலம், இடம், சமயம் முதலியவற்றை ஓட்டிய முறையிற் பொருள் செய்திருக்கிருர்கள். மேலும் இவர்களிற் சிலர் திருக்குறளின் அர்த்தங்களை விளங்க வைக்காமல் விஸ்தாரமான இலக்கண நுணுக்கங்களில் இறங்கி இலக்கணம் கற்ற பண்டிதர்களையும் பயமுறுத்துகின்ருர்கள்.

இதற்கெல்லாம் காரணம், 'திருவள்ளுவர் கருதிய உரை இதுதான்' என்று அதிகாரத்தோடு சொல்லக்கூடியதாக, வள்ளுவர் காலத்திய உரைப் பிரதி ஒன்றேனும் இல்லாது போனதுதான். இந்த உரையாசிரியர்களின் சரித்திரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. ஆனலும் இவர்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் வெவ்வேறு இடங்களிலும் காலங்களிலும் இருந்தவர்கள் என்று ஊகிக்க இடமிருக்கிறது. இவர்களுக்கு முன்னுல் எழுதப்பட்ட உரை எதுவும் இல்லாததால் இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே அவரவருக்குத் தோன்றியபடியும் அவரவர் விரும்பியபடியும் அவரவர் காலத்தில் வழக்கிலிருந்த கோட்பாடுகளை ஓட்டியும் உரை எழுதியிருக்கிருர்கள் என்ருல் அது தவருகாது.

இவர்கள் எழுதிய உரைகள் தமிழறிஞர்கள் கூடிய சபையிலோ அல்லது அரசவையிலோ அரங்கேற்றப்பட்டு மக்களிடம் பரவியிருந்தனவாகத் தெரியவில்லை. ஆனால் அவரவர்கள் வசித்த இடத்தைச் சுற்றியிருந்த சிறு சிறு தொகுதியினருக்குச் சொல்லப்பட்டு அங்கங்கே போற்றப்பெற்று வந்திருப்பதாகத் தெரிகின்றது.

## 3. பரிமேலழகர்

மேற்சொன்ன ஒன்பது உரையாசிரியர்களுக்குப் பின் தோன்றியவர் பரிமேலழகர். பரிமேலழகர் என்பது இவர் பாண்டியனுடைய சபையில் ஒரு வெண்கலப் பரியின்மேல் அமர்ந்துகொண்டு தமது திருக்குறள் உரையை அரங்கேற்றியதனால் உண்டான காரணப் பெயர் என்று சொல்லப்படுகிறது. இவருடைய இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை. இவருடைய சரித்திரமும் தெரியவில்லை. ஆனால் இவரைக் குறித்த பாடல்களில் இவர் காஞ்சீபுரத்திலும் ஒக்கை என்ற ஒரு ஊரிலும் பாண்டியன் தலைநகரமாகிய மதுரையிலும் இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. இவர் காஞ்சீ புரத்திலுள்ள உலகளந்த பெருமாள் கோயில் அருச்சகர் குலத்தைச் சேர்ந்தவரென்றும், அதனால் இவர் வைணவரென்றும் சொல்லப்படுகிறது. வேறு சிலர் இவரைச் சைவர் என்று சாதிக்கிறார்கள். இவருடைய வரலாறுகள் எப்படியிருந்தாலும் இவர் வடமொழியிலும் தென்மொழியிலும் மிகச் சிறந்த பாண்டித்யம் உடையவரென்பதை இவர் திருக்குறளுக்குச் செய்திருக்கிற உரை தெளிவாகக் காட்டுகின்றது. அன்றியும் இவர் திருக்குறளுக்குத் தம்முடைய மனம் போனபடி உரை செய்யாமல் அரும்பாடுபட்டு ஆராய்ந்து உரை எழுதியிருக்கிறார் என்பதும் தெரிகின்றது. இவர் உரை எழுதுவதற்கு முன், தமிழறிஞர்களுக்குள் 'திருக்குறளுக்கு ஒரு நல்ல உரை இல்லையே' என்ற ஏக்கம் இருந்து வந்ததைக் கண்டு, இவர் இந்த உரையை எழுதும் உழைப்பை மேற்கொண்டிருக்கிறார். அந்த முயற்

சிக்குப் பாண்டிய மன்னன் ஆதரவளித்து, அவ்வுரை பாண்டியன் சபையில் அரங்கேற்றப் பெற்றதாக இருக்க வேண்டுமென்பதை அனுமானிக்கலாம்.

பரிமேலழகர், அவருக்கு முன்னுல் எழுதப்பட்ட மேலே சொன்ன ஓன்பது உரைகளையும் ஆராய்ந்து அவற்றிலுள்ள குறைகளை நீக்கித் தம்முடைய உரையை எழுதினதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா யிருக்க முடியாது. ஏன் எனில் அந்த ஓன்பது பேரு டைய உரைகளை வைத்துக்கொண்டு அவற்றை ஓட்டிய தாக இவர் உரை எழுத முயன்றிருந்தால், திருக் குறளின் மூலப் பாட்டுகளை அடுக்கவேண்டிய வைப்பு முறையை நிச்சயிப்பதற்கே மூளை குழம்பிப் போயிருப் பார். பின் உரை பேதங்களையும் பாட பேதங்களையும் சரிப்படுத்துவதெப்படி? அதனுல் இவருக்கு முன்னுல் எழுதப்பட்டிருந்த எல்லா உரைகளையும் இவர் பார்த் திருக்கலாம் என்ருலும், அவற்றை யெல்லாம் ஓதுக்கி வைத்துவிட்டு முற்றிலும் சொந்தமுறையில் புது ஆராய்ச்சிகள் நடத்திக் கண்டறிந்த உண்மைகளைக் கொண்டுதான் தம்முடைய உரையை எழுதியிருக்க வேண்டும். இவருடைய காலம் இன்றைக்குச் சுமார் 650 ஆண்டுகளுக்கு முன்னுல் ஆகையினுல் அந்தக் காலத் தில் திருவள்ளுவர் காலத்திலிருந்து வாழையடி வாழையாகப் பிரதிகள் எடுக்கப்பட்டு வந்த சரியான மூலப் பிரதிகளை வைத்துக் கொண்டுதான் இவர் மூலத்தை எழுதியிருக்கிருர். அதனுற்ருன் இவருடைய உரையில் குறள்களின் வரிசைக்கிரம வைப்பு முறை அவ்வளவு பொருத்தமாக அழகுற அமைந்திருக்கிறது. இவர் இரண்டொரு இடங்களில் பிறர் கொண்ட பொருள் பேதங்களைக் குறிப்பிடுகின்ருர். ஆனுல் பாட பேதங்களையோ வைப்பு முறை பேதங்களையோ இவர் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. அதனுல் இவர் கொண்ட மூலப் பிரதிகளில் பாட பேதங்களோ வைப்பு முறை பேதங்களோ இருந்ததில்லை என்றுதான் தெரி கின்றது. மேலும் காஞ்சீபுரத்துக்காரராகிய இவர் மது ரையில் வசித்து, அங்கே பாண்டியனுடைய அரசவை யில் தமது திருக்குறள் உரையை அரங்கேற்றினுர் என்

பதிலிருந்து, இவர் தம்முடைய ஆராய்ச்சிகளைச் செய்ய வென்றே தெற்கே வந்து வசித்திருக்க வேண்டு மென்றும் ஊகிக்கலாம். எனவே இவருடைய உரை மிக மிகவும் பாடுபட்டுச் செய்த ஆராய்ச்சியின் பயனே யாகும். அப்படி அவர் காலத்திருந்த திருக்குறள் ஏட்டுப் பிரதிகளைத் தேடி ஆராய்ந்து திறக்குறளின் மூலத்தின் பரிசுத்தத்தைப் பாதுகாத்து, அவருக்கு முன்னால் உரை செய்தவர்கள் உண்டாக்கியிருந்த குழப் பங்களை யெல்லாம் போக்கி, மிகச் சிறந்ததோர் உரை யையும் தந்ததனால் பரிமேலழகர் உரை மற்றெல்லா உரைகளிலும் மிகவும் உயர்ந்ததாக வரவேற்கப்பட்டது. அப்படி வரவேற்ற அக்காலத்துத் தமிழறிஞர்களின் ஒரு முகமான பாராட்டு தான் :

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ---நூலிற்
பரித்த உரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்த உரையாமோ தெளி

என்ற வெண்பாவாக வெளியிடப்பட்டது. இந்தப் பாட்டில் பரிமேலழகருக்கு முன்னால் செய்யப்பட்டிருந்த எல்லா உரைகளையும் இகழ்ந்து நீக்குவதான குறிப்பு தென்படுகின்றதல்லவா? அதனால் பரிமேழகர் உரை அரங்கேறிய பின், மற்ற உரைகள் மதிப்பாரற்று மங்கி மறைந்தன போலும். அதனாற்றான் அந்த உரைகளிற் பலவும் போற்றி வைப்பாரின்றிச் சிதைந்து போயின. கருத்து வேற்றுமைகள் எப்படி இருந்திருக்கின்றன என் பதைப் பார்ப்பதற்காகவேனும் அவற்றைப் பிற்காலத் தில் தேடினபோது அவற்றிற் சிலவே கிடைத்திருக் கின்றன. அந்த சிலவும் பூரணமாகக் கிடைக்காமல் அவற்றின் சிற்சில பகுதிகளே கிடைத்துள்ளன. அந்தச் சிற்சில பகுதிகளிலும் பல குறள்களின் உரைகள் இல் லாமல் இருக்கின்றன. மூன்று பேர்களுடைய உரைகள் கிடைக்கவே இல்லை.

ஆனால் அந்த ஒன்பது பேர்களுடைய உரைகளில் மணக்குடவருடைய உரைமட்டும் சிதைவின்றிக் கிடைத்

திருக்கிறது. அதற்குக் காரணம் மணக்குடவர்உரை பல விதத்தில் பரிமேலழகருடைய உரைக்கு நிகராக இருப்பதுதான். அதனுற்றான் அதனைப் பரிமேலழகருடைய உரை வெளிவந்த பின்னும் போற்றி வைத்திருக்கிறார்கள். அன்றியும் தமக்கு முன்னால் இருந்த பல உரைகளையும் ஆராய்ந்ததாகக் கருதப்படுகிற பரிமேலழகரே மணக்குடவர் உரையை மட்டும் பாராட்டியும் இருந்திருக்கலாம். அதனால் மணக்குடவர் உரையை மட்டும் மக்கள் பாதுகாத்து வந்திருக்கிறார்கள் எனினும் பொருந்தும். மேலும் மணக்குடவர் பரிமேலழகருடைய காலத்துக்கு முற்பட்டவரானதால், பல உரைகளையும் ஆராய்ந்த பரிமேலழகர், மணக்குடவருடைய உரை தம்முடைய கருத்துக்களுக்கு ஒத்ததாக இருந்ததைக் கண்டு மணக்குடவருடைய உரையைத் தழுவியே பல குறள்களுக்குத் தாமும் உரை கண்டிருக்கிறார் என்றாலும் பொருந்தும்.

## பரிமேலழகர் உரை

எப்படியிருப்பினும் பரிமேலழகர் உரை மற்றெல்லா உரைகளினும் மிகமிகச் சிறந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. பரிமேலழகர் தோன்றியிராவிட்டால் திருக்குறள் மூலமும் வைப்பு முறையும் மிகவும் சீர் கெட்டுப் போயிருக்கும். நல்ல உரையும் இல்லாது போயிருக்கும். ஆதலால் தமிழுலகத்தின் நன்றி நிறைந்த வணக்கத்துக்குரியவர் பரிமேலழகர்.

ஆனாலும் அவரும் கூட திருவள்ளுவரின் உள்ளத்தை உணர்ந்து உரை காணவில்லை என்பது மிகவும் உண்மை. சாதிச் சண்டைகளையும் சமயப் பிணக்குகளையும் மொழி வேற்றுமைகளையும் மனதில் வைத்துக் கொண்டு தங்கள் தங்கள் கருத்துக்களைத் திருக்குறளில் புகுத்த முயலும் இக்காலத்தவர்போல் உரை செய்தவர் அல்ல பரிமேலழகர். தமிழ் மரபையும் தமிழ் இலக்கியங்களையும் தமிழ்ப் பண்புகளையும் தழுவித்தான் மிகுந்த நுண்ணறிவுடன் உரை செய்திருக்கிறார். எனினும் எக்

காலத்துக்கும் எந்நாட்டிற்கும் எம் மதத்தினருக்கும் ஏற்புடைத்தான சக்திகளை மட்டுந்தான் திருவள்ளுவர் கருதியிருக்கிறார் என்பதைப் பரிமேலழகரும்கூடப் பார்க்க முடியவில்லை. திருவள்ளுவர் காலத்துக்குச் சுமார் 1350 ஆண்டுகளுக்குப் பின்னால் தோன்றியவர் பரிமேலழகர். அவருக்கு முன்னாலிருந்த உரையாசிரியர்களாகிய ஒன்பது பேர்களுக்குமே, திருவள்ளுவர் காலத்தில் சொல்லப்பட்ட உரை என்னவென்பது அறிய முடியாததாகப் போயிருக்க, இவர் எப்படி அறிவார்? இவருக்கு முன்னாலிருந்த உரையாசியர்கள் மூலத்திலும் குறள்களின் அடுக்குமுறைகளிலும் கருத்து வேற்றுமைகளிலும் உண்டாக்கி விட்டிருந்த குழப்பங்களை நீக்குவதற்கே இவர் அரும்பாடுபட்டிருக்க வேண்டும். அதனால் அப்போதிருந்த சூழ்நிலைகளைக் கடந்து திருவள்ளுவர் எதைக் கருதியிருப்பார் என்பதில் பரிமேலழகர் கவனம் செலுத்த முடியவில்லை போலும். செலுத்தியிருந்தால் வடமொழியிலும் மிக்க வல்லவராகிய பரிமேலழகர் திருவள்ளுவர் வடமொழியிலுள்ள நல்லறிவுகளை எப்படித் தமது குறளில் குழைத்துக் கொடுத்திருக்கிறார் என்பதைக் கண்டிருப்பார்.

பண்டையத் தமிழர்கள் பிறமொழிகளை மிகவும் விரும்பிக் கற்றவர்கள். எந்த மொழியையும் அவர்கள் வெறுத்ததில்லை. அதுவும் வடமொழியை நெடுங்காலமாகத் தமிழர்கள் தமக்கு மிக நெருங்கிய உறவாகவே நேசித்து வந்திருக்கிறார்கள்; தமிழ்ப் பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாக விளங்கும் திருவள்ளுவரும் வடமொழியில் ஆழ்ந்த கல்வியுடையவராக இருந்திருக்க வேண்டும் என்பதைத் திருக்குறளே காட்டுகின்றது. திருக்குறள் தனித்தமிழ் நூல்தான். அது வேறு எந்த ஒரு மொழியிலுள்ள எந்த நூலையும் பின்பற்றி எழுதப்பட்டதல்ல. ஆனால் வடமொழி நூல்களிலுள்ள நல்லறிவுகளை வடித்தெடுத்து அங்கங்கே தமது திருக்குறளில் கூட்டியிருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை. வடமொழிக்கும், திருக்குறளுக்கும் சம்பந்தமில்லை என்பது சத்தியத்துக்கு ஒத்ததல்ல.

பரிமேலழகர் தமது உரையில் பல இடங்களில் வட மொழி வழக்குகளைச் சுட்டுகின்றார். ஆனால் வெகு முக்கியமான பல இடங்களில் வள்ளுவர் கூறியிருக்கிற வடமொழி ஞானத்தைக் கவனிக்காததால் வள்ளுவர் கருத்துக்கும் தத்துவங்களுக்கும் முற்றிலும் விரோத மான உரைகளைச் செய்திருக்கிறார். இதன் உண்மை அடியேன் எழுதியிருக்கிற 'திருக்குறள் புது உரை'யில் 'தவம்' என்ற அதிகாரத்திலுள்ள எல்லாக் குறள்களுக் கும், பரிமேழலர் உரைக்கு முற்றிலும் மாறுபட்ட எனது உரை தெளிவாகக் காட்டும். அந்த 'தவம்' என்ற அதிகாரம் முழுதையும் இங்கே விரித்துரைப்பது இச்சிறு நூலின் நோக்கமுமல்ல; அதற்கு இடமும் போதாது. எனினும்வடமொழி அறிவைப் புறக் கணித்து விட்டதால்தான் இந்த 'தவம்' என்ற அதி காரத்துக்கு வள்ளுவர் கருதிய உரையைப் பரிமேலழகர் காண முடியவில்லை. ஏன் எனில் 'தவம்' என்பதைப் பற்றிய நூல்கள் அனைத்தும் வடமொழியில்தான் உள்ளன. 'தவம்' என்ற சொல்லே 'தபஸ்' என்ற வட மொழிச் சொல். முதலில் 'தவசு' என்றுதமிழ்ச்சொல்லாக வழக்குக்கேற்ப 'தவம்' என்று ஆயிற்று. தவம், யோகம், ஆன்ம ஞானம் என்பனவற்றின் இலக்கணங்களை விளக்கக்கூடிய நூல்கள் தமிழில் இல்லை. இவற்றைப் பற்றி வடமொழி நூல்களில் உள்ள அறிவையே தமிழர் களும் தமதாகக்கொண்டு அனுபவித்து வந்திருக்கிறார் கள். அதேமாதிரி வடமொழியிலுள்ள ஒரு கருத்தைத் திருவள்ளுவர் ஒரு தமிழ்ச் சொல்லால் குறிப்பிடுகிறார். அந்தச் சொல் வருகிற குறளுக்குச் சரியான பொருள் காண முடியாமல் பரிமேலழகரும் தடுமாற்றமான ஏதேதோ சொல்லுகின்றார். அவருக்கு முன்னால் இருந்த உரையாசியர்கள் தடுமாற்றத்தையும் கண்டிப் பதுபோல் குறிக்கின்றார். அந்தக் குறள் பொருட்பாலில் 'அங்கம்' என்ற பகுதியில் 'அமைச்சு' என்ற அதிகாரத் தில் உள்ளது. அந்தக் குறளாவது ;

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு

இதைப் பதம் பிரித்தால்: வன் கண்; குடிகாத்தல்; கற்றறிதல், ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு—என்று பிரிகிறது. இந்தக் குறளுக்குப் பரிமேலழகருடைய உரை என்னவென்றால், (இ—ள்) வன்கண்=வினை செய்தற்கு கண் அசைவின்மையும், குடிகாத்தல்=குடிகளைக் காத்தலும், கற்றறிதல்=நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன வறிதலும், ஆள் வினை=முயற்சியும், ஐந்துடன் மாண்டது அமைச்சு= மேற்சொல்லிய அவ்வங்கங்களைந்துடனே திருந்தவுடை யானே அமைச்சனாவான்—என்பது பரிமேலழகரின் பத உரை. இதில் 'ஆள்வினையோடு' என்பதிலுள்ள 'ஓடு' என்ற பதம் விடுபட்டிருக்கிறது. ஏன் எனில் இவர் செய்திருக்கிற தவறான உரைக்கும்கூட அந்த 'ஓடு' என்ற சொல்லின் கூட்டும் பொருள் இடைஞ்சலாக இருக்கிறது. இவர் பிரித்திருக்கிறபடியே இந்தக் குறளில் வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை என்ற நான்கே விஷயங்கள் தாம் சொல்லப்பட்டிருக் கின்றன. அப்படியிருக்க மேற்சொல்லிய 'அவ்வங்களைந் துடனே' என்றால் அந்த ஐந்து அங்கங்கள் எங்கே? 'ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு' என்றதில் 'ஆள்வினையோடு' என்பதிலுள்ள 'ஓடு' என்ற சொல் 'ஆள் வினை'யை எதனோடு சேர்க்கிறது? அதன்பின் இருக்கிற 'ஐந்துடன்' என்பதிலுள்ள 'உடன்' என்ற சொல் எவை, எதனுடன் சேர்க்கிறது? 'ஓடு' என்பது பயனற்ற அசைச்சொல் போல நீக்கப் பட்டிருக்கிறது. 'உடன்' என்ற சொல் இக்குறளிற் சொல்லப்பட்டுள்ள நான்கே விஷயங்களை 'அவ்வங்கங் களைந்துடனே' என்றுகூட்டுகின்றது. நான்கே நான்கைச் சுட்டிக் காட்டி விட்டு 'அவ்வைந்தும்' என்பது எப்படிப் பொருந்தும்? இது எப்படியிருக்கிறதென்றால் 'ராமன், பாலன், கண்ணன், சோமன் ஆகிய ஐந்து பேரும் வந்தார்கள்' என்பது போலத்தான் இருக்கிறது. இப்படி மிகவும் குழப்பமாக உரை செய்ய வேண்டியிருந்தது பரிமேலழகருக்கே சமாதானமில்லாமல் அந்தக் குழப் பத்தை தெளிவிப்பதுபோல் பத உரைக்குக் கீழே விசேட உரை எழுதி விளக்க முயல்கின்றார். விசேட

உரை இந்தக் குழப்பத்தை இன்னும் அதிகமாகக் கலக்கி விடுகின்றது. அந்த விசேட உரையைப் பாருங்கள் :

"எண்ணொடு நீண்டது அவ்வைந்தெனச் சுட்டு வருவிக்க இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது. அவையும் இவற்றோடு கூடியே மாட்சிமைப்படவேண்டுதலானும், அவற்றிக்கு ஐந்தென்னும் தொகை பெறுதற்கும், இனி, இதனை எண்டெண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் 'குடி காத்தல்' என்பதனைக் குடிப்பிறப்பும் அதனை ஒழுக்கத்தால் காத்தலும் எனப் பகுப்பாரும், 'கற்றறிதல்' என்பதனைக் கற்றலும் அறிதலும் எனப் பகுப்பாரும், 'கற்றறிதல்' என்பதனைக் கற்றலும் அறிதலும் எனப் பகுப்பாரும் உளர். உடன்' என்பதனை முற்றுமைப் பொருட்டாக்கியும், 'குடி' என்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப" என்பதுதான் விசேட உரை விளக்கம்.

இதை மிகவும் கவனித்துப் பார்த்தல் வேண்டும். இதில் 'இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு' தொகுத்துக் கூறியது, என்கிறார். 'மேற் கூறியவற்றோடு' என்பது எவற்றை? அந்த 'மேற்கூறியவை ஒருக்கால், இக்குறளுக்கு மேற்குறளில் கூறப்பட்டவையாக இருக்குமோ என்றால் இதற்கு முந்திய குறளிலும் நான்கு விஷயங்கள் தாம் சொல்லபபடுகின்றன. இக்குறளுக்கு முந்திய குறளாவது :

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு

என்பது இதில் கருவி, காலம், செய்கை, செய்யும் அருவினை என்ற நான்கே சொல்லப்படுகின்றன. இந்த நான்கை மட்டும் வைத்துக்கொண்டு 'ஐந்துடன்' என்று எப்படிக் கூட்டமுடியும்? ஒருக்கால் இந்தக் குறளிலுள்ள நான்கையும் ஒரே தொகையாக வைத்துக் கொண்டு அடுத்த குறளிலுள்ள நான்கையும் தனித் தனியாக எண்ணிக்கொண்டு 'இந்த நான்கினோடு மேற்

கூறிய ஒன்றையும் கூட்டி ஐந்துடன்' என்று சொல்லுகிறரோ என்று பார்த்தால் அது இன்னும் பொருத்தமற்றதாகிறது. ஏனெனில் 'மேற்கூறியவற்றேடு தொகுத்துக் கூறியது' என்பதிலுள்ள 'மேற் கூறியவற்றேடு' என்பது பன்மைச் சொல்லாக இருப்பதால் முன் குறளில் சொல்லப்பட்டன ஒரு தொகையாவது எப்படி?

ஆதலால், எப்படியெல்லாம் இழுத்து வளைத்துப் பொருள் கொண்டாலும் இந்த 'ஐந்துடன்' என்ற பதத்திற்குப் பொருள் இந்த உரையில் கிடைக்கவில்லை.

இனி, பரிமேலழகருக்கு முன்னுலிருந்த உரையாசிரியர்களிற் சிலர் ஐந்து என்ற தொகையுண்டாக்குவதற்காகக் 'குடிகாத்தல்' என்பதைக் 'குடி+காத்தல்' என்றும் இன்னும் சிலர் 'கற்றறிதல்' என்பதைக் 'கற்று +அறிதல்' என்றும் பிரித்திருக்கிருர்கள். அது தவறு என்று பரிமேலழகரே கண்டிக்கிருர், 'குடி காத்தல்,' 'கற்றறிதல்' என்ற இரண்டையும் பகாப்பதங்களாகத் தான் திருவள்ளுவர் வைத்திருக்கிருர் என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. ஐந்து என்ற எண்ணிக்கையைச் சரிக்கட்ட வேறு வழி தெரியாமல் இவர்கள் இந்த இரண்டு பதங்களில் ஒன்றைப் பகுக்க முயன்றிருக்கிருர்கள். அப்படிப் பகுப்பதானுல் இந்த இரண்டில் எதைப் பகுப்பது ? இரண்டையும் பகுக்கலாம். இரண்டுக்கும் ஒரே நியாயம்தான். அப்படி இரண்டையும் பகுத்தால் ஐந்து என்பது ஆறு என்றல்லவா ஆகிவிடும் ? ஆதலால் இந்தச் சொற்களைப் பகுக்கவே இடமில்லை.

அப்படியானுல் இந்த 'ஐந்துடன்' என்ற பதத்திற்குப் பொருள்தான் என்ன ? அதைத் தேடிப் பிடிப்போம். இந்த 'ஐந்து' என்ற சொல் வெவ்வேறு சூழ்நிலையின் வெவ்வேறுன ஐந்து விஷயங்களைக் குறிக்கும். உலோகங்களை பற்றிப் பேசும்போது ஐந்து என்பது இரும்பு, தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம் என்ற பஞ்சலோகங்களைக் குறிக்கும். 'ஐந்தெழுத்து' என்றுல் ந-ம-சி-வா-ய என்ற பஞ்சாட்சரங்களைத்தான் குறிக்கும்.

'ஐந்து அங்கம்' என்ருல் வாரம், திதி, கரணம், யோகம், நட்சத்திரம் என்ற பஞ்சாங்கத்தைத்தான் குறிக்கும். 'ஐந்து காவியம்' என்ருல்—சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலே, வளேயாபதி, குண்டலகேசி—என்பன வற்றைத்தான் குறிக்கும். 'ஐந்து தந்திரம்' என்ருல்—மித்ரபேதம் சுகிர்லாபம், சந்திவிக்ரகம், லப்தஹானி, அசம்பிரேக்ஷிய காரியத்துவம்—என்ற பஞ்ச தந்திரங் களேத்தான் குறிக்கும். இப்படி இன்னும் பல சொற் களோடு சேர்ந்து பல்வேறு விஷயங்களேக் குறிக்கும் 'ஐந்து' என்ற பதம் வேறு சொற்களோடு சேராமல் தனியே இருக்குமானுல் அது எந்த இடத்தில் எந்தச் சூழ்நிலேயில் சொல்லப்படுகிறதோ அதற்குத் தக்கபடி பொருள் தரும். உதாரணமாக, 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில் :

ஐந்தவித்தா ணுற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரேனே சாலுங் கரி

என்ற குறளில் 'ஐந்து அவித்தான்' என்பதில் 'ஐந்து' என்பது தனியே நிற்கிறது. இங்கே 'ஐந்து' என்றது எந்த ஐந்தை? இந்தக் குறள் வைக்கப்பட்டிருக்கிற அதிகாரமும் சூழ்நிலேயும் இங்கே 'ஐந்து' என்பது ஐந்து இந்திரியங்களாலுண்டாகும் ஐந்து ஆசைகளேத் தான் குறிக்கின்றது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அதே போல,

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்விேனயோ
டைந்துடன் மாண்ட தமைச்சு

என்ற குறளில் 'ஐந்து' என்பது இங்கே தனித்து நிற்கிறது. இந்த குறள் சொல்லப்பட்ட 'அமைச்சு' என்ற அதிகாரத்தையும் இது வைக்கப்பட்டிருக்கிற சூழ் நிலேயையும் உய்த்துணர்ந்தால் இந்த 'ஐந்து' என்ன என்பது தாஞகவே தோன்றும். இந்தக் குறளிலுள்ள பதங்களே அப்படியே அடுக்கிப் பதஉரை செய்தால் :

காரியத்தில் உறுதி, குடிகளேக் காத்தல் (அல்லது தன் குடிப்பிறப்பைக் காத்து நடத்தல்) கல்வி யறிவு

உடையவனாக இருத்தல், விடாமுயற்சி, இவற்றோடு ஐந்தும் சேர்ந்த சிறப்புடையவன் அமைச்சன்—என்பது தான் நேரான பொருள் அல்லவா? இது யாரைப் பற்றிச் சொல்லப்படுகிறது? மந்திரியைப் பற்றி. மந்திரியின் இன்றியமையாத திறமை எது? மந்திரி என்பவன் வெகு தந்திரியாக இருப்பதே அவன் சிறப்பு. இந்தச் சூழ்நிலையில் எந்த ஐந்துடன் சிறந்தவனாவான், அதுதான் ஐந்து தந்திரம்—பஞ்ச தந்திரம். இப்போது இந்தக் குறளின் பொருளைப் பார்ப்போம்.

'காரியத்தில் உறுதி, குடிப்பிறப்பின் பெருமையைக் காத்தல், கல்வியறிவு, விடாமுயற்சி, இவற்றோடு பஞ்ச தந்திரங்களும் உடைய சிறப்புடையவர்களே மந்திரிகள்' என்ற சரியான பொருள் கிடைக்கிறது. ஆனால் இதைத் தான் வள்ளுவர் கருதினாரா என்ற ஐயம் எழலாம். ஆம்; இதைத்தான் திருவள்ளுவர் கருதியிருக்கிறார் என்பதை அடுத்த குறள் உறுதிப்படுத்துகிறது. அதில் பஞ்ச தந்திரங்களில் முக்கியமான மூன்று தந்திரங்களைத் தமிழ் சொற்களால் குறிப்பிடுகின்றார். அந்த அடுத்த குறள்,

> பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
> பொருத்தலும் வல்ல தமைச்சு

இதற்குப் பொருள்; (தம்முடைய அரசனுக்குப் பகையாக ஒன்று சேர்ந்திருப்பவர்களை) ஒருவரை விட்டொருவர் பிரிந்துவிடச் செய்தலும், தம்முடன் நட்பாக உள்ளவர்கள் தம்மைவிட்டுப் பிரிந்து போகாதபடி அவர்களுடைய உறவைப் பாதுகாத்துக் கொள்வதும், தம்மை விட்டுப் பிரிந்து தமக்குப் பகையாகி விட்டவர்களை மீண்டும் உறவாக்கிக் கொள்வதும் ஆகிய உபாயங்களைச் செய்யத் திறமையுள்ளவர்களே மந்திரிகளாகத் தகுந்தவர்கள்—என்பது. இவற்றுள் 'பிரித்தல்' என்பது 'மித்ரபேதம்' என்றதைக் குறிப்பது. 'பேணிக் கொளல்' என்பது 'சுகிர்லாபம்' என்றதைக் குறிப்பது. 'பிரிந்தார்ப் பொருத்தல்' என்பது 'சந்தி விக்ரகம்' என்பதைக்

குறிப்பது. முக்கியமான இந்த மூன்று அரசியல் தந்திரங்களையும் சொல்லிப் 'பஞ்ச தந்திரம்' என்றதைச் சுட்டியிருக்கிறார் திருவள்ளுவர். இந்தப் பஞ்ச தந்திரம் தமிழ் வழக்கலல. அது வடமொழி அரசியல் அறிவு. இந்த ஐந்து தந்திரங்களையும் விரும்பத்தகாத சூழ்ச்சிகளெனப் பேசுவாரும் உண்டு. ஆனால் அவைகள் செய்யத்தகாத காரியங்களாகக் கருதப்பட்டவையல்ல. தம்முடைய அரசாங்கத்தையும் நாட்டையும் பாதுகாத்துக்கொள்ள மந்திரிகள் அறிந்திருக்க வேண்டிய நல்லறிவாகத்தான் கொள்ளப்பட்டுள்ளன. பிறநாடுகளைக் கெடுப்பதற்காக அல்லாவிட்டாலும் தம்முடைய நாட்டின்மீது பிறர் இவற்றைக் கையாள முடியாதபடி காத்துக்கொள்ளவேனும் மந்திரிகள் இவற்றை அறிந்தவர்களாக இருக்கவேண்டும். மந்திரிகளுக்கு இன்றியமையாத மற்ற அறிவுகளோடு இந்த ஐந்தும் சேர்ந்திருப்பது நல்லது என்ற கருத்துடன்றான், திருவள்ளுவர் இன்றியமையாமல் இருக்க வேண்டிய எட்டு விஷயங்களை முதலிற் சொல்லிவிட்டு அவற்றுடன் இந்தப் பஞ்சதந்திரத் திறமையும் இருப்பது சிறந்த அமைச்சு என்கிறார். இதை, 'ஆள் வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு' என்ற சொற்றொடர் தெளிவாகக் காட்டுகின்றது. இப்போது அந்த எட்டு முக்கியமான விஷயங்களையும் இந்த 'ஐந்துடன்' சேர்த்துப் பார்ப்போம்: ('அமைச்சு' என்ற அதிகாரத்தின் முதல் இரண்டு குறள்களும் சேர்ந்து): கருவியும், காலமும் செய்கையும், செய்யும் அருவினையும் வன்கண், குடி காத்தல், கற்றறிதல், ஆள்வினையோடு ஐந்து (தந்திரங்களும்) உடன் (சேர்ந்து) மாண்டது அமைச்சு—என்ற மிகத் தெளிவான கருத்தைத் தருகின்றன. ஆதலால் பரிமேலழகரும் அவருக்கு முற்பட்ட உரையாசிரியர்களும் 'பஞ்ச தந்திரம்' என்ற வடமொழிப் பதத்திலுள்ள 'பஞ்ச என்ற சொல்லை 'ஐந்து' என்ற தமிழ்ச் சொல்லால் குறிப்பிட்ட திருவள்ளுவரின் கருத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. அதனால்தான் 'ஐந்துடன்' என்பதைப்பற்றி அவ்வளவு குழப்பம்.

இப்படித் தேடிப்பிடிக்க வேண்டியனவாக மறைந்திருக்கும் கருத்துக்களடங்கிய குறள்கள் ஒருபுறமிருக்கட்டும். பல குறள்களுக்குத் திருவள்ளுவர் கருதியிருக்கவே முடியாத பொருள்களையும் உரையாசிரியர்கள் புகுத்தி யிருக்கிறார்கள். திருவள்ளுவர் எந்தக் கருத்துடன் எந்தக் குறளை எழுதியிருக்கிறாரோ அந்தக் கருத்தை அறிந்து அந்தக் குறள்களுக்குப் பொருள் சொன்னால்தான் அது திருக்குறளுக்கு உரை செய்வதாகும். அப்படி இல்லாமல் அவரவர்கள் தங்களுடைய சொந்தக் கருத்துக்களையோ கொள்கைகளையோ புகுத்திப் பொருள் செய்வது திருவள்ளுவருடைய பெருமைக்குத் தீங்கு செய்வதாகும். இப்படித் திருவள்ளுவர் எண்ணியிருக்க முடியாத பொருள்களைப் புகுத்துகின்றவருள் ஒரு சாரார் ஆராய்ந்து பார்க்காமல் வெறும் அறியாமையால் செய்கின்றவர்கள். அவர்கள் மனமாரத் தவறு செய்கிறவர்கள் அல்ல. இன்னொரு சாரார் தம்முடைய கோட்பாடுகளைப் புகுத்தித் திருவள்ளுவரும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார் என்று பிறர் நம்பவேண்டுமென்று செய்கிறவர்கள். இவர்கள் மனமாரத் தவறு செய்கின்றவர்கள்.

இந்த இரண்டு வகையான உரையாசிரியருள் ஆராய்ந்து பார்க்காத அறியாமையால் திருள்ளுவர் நினைத்திருக்க முடியாத பொருள் செய்திருப்பதற்கு ஒரு உதாரணம் பார்ப்போம்:

'துறவறம்' என்ற பகுதியில் 'தவம்' என்ற அதிகாரத்தில்,

> கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
> னாற்ற றலைப்பட் டவர்க்கு.

என்பது ஒரு குறள்.

இந்தக் குறளின் வசன நடை: நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு கூற்றம் குதித்தலும் கைகூடும் என்பது.

இதற்குப் பொருள் : தவத்தின் வலிமை மிகுந்தவர்களுக்கு எமனைக் கடத்தலும் கைகூடும்—என்பது. இங்கே சொல்லப்படுகிற 'கூற்றலும் குதித்தலும்' என்ற 'எமனைக் கடத்தலும்' என்பது என்ன? இந்தக் குறளுக்கு மணக்குடவர் தந்துள்ள உரை :

'கூற்றத்தைத் தப்புதலும் கைக்கூடும் தவத்திஞகிய வலிமையைக் கூடினார்க்கு என்றவாறு..........இது மார்க்கண்டேயன் தப்பினாற்போல் என்றது.'

பரிதி என்ற உரையாசிரியர் தந்துள்ள உரை :

'தலை எழுத்து முடிந்த நாள்வர அப்போது கூற்றுவனையும் வெல்லலாம் தவத்திற் பெரியோர்க்கு என்றது......அதற்கு, நந்திகேசுவர தேவனையும் மார்க்கண்டேயனையும் கண்டு கொள்க'—என்பது.

காளிங்கர் என்ற உரையாசிரியரும் பரிதியாரின் உரை போலவே சொல்லியிருக்கிறார்.

எனவே, மேலே சொல்லப்பட்ட மூவருடைய உரைகளிலும் நாம் அறியக் கூடியது என்னவென்றால்: தவவலிமை மிகுந்தவர்கள் மார்க்கண்டேயனைப் போலும் நந்திகேசுவர தேவனைப் போலும் மரணமில்லாத சிரஞ்சீவிகளாக இருப்பதும் சித்திக்கும்—என்பது.

இனி, இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லுகிற உரையைப் பார்ப்போம் : "கூற்றம் குதித்தலும் கைகூடும் = கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம்; நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு = தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு.

"சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று; 'மன்னுயிரெல்லாந் தொழு' தலேயன்றி இதுவும் கைகூடுமென எச்சவும்மையாக வுரைப்பினு மமையும்" என்பது—பரிமேலழகர் உரை. இது தெளிவாக இல்லை. மரணமில்லாத சிரஞ்சீவிகளாக முடியாது என்று பரிமேலழகர்

கருதுகிறாரா அல்லது அதுவும் முடியும் என்று கருது கிறாரா என்பது விளங்கவில்லை. 'சிறப்பும்மை அது கூடாமை விளக்கிற்று' என்பதனால் மரணமில்லா திருக்க முடியாது என்று பரிமேலழகர் கருதுகிறார் என்ற தோற்றம் உண்டாகிறது. அடுத்தாற்போல் 'இதுவும் கைகூடுமென எச்சவும்மையாக உரைப்பினும் அமையும்' என்றதனால் 'மரணமில்லாதிருக்கவும் முடியும்' என்பதைப் பரிமேலழகர் ஒப்புக்கொள்ளுகிறார் என்றும் தோன்றுகிறது.

மேற்சொன்ன உரைகளைப் பின்பற்றியே இந்தக் குறளுக்குத் தமிழாசிரியர்கள் நெடுங்காலமாகப் பொருள் போதித்து வருகிறார்கள். அதனால் தவமுயற்சிகளால் மனிதன் மரணமில்லாமல் இருக்கமுடியும் என்று நம்பு கின்றவர்களும் இருந்து வருகிறார்கள். இந்த உரைகளை ஆதாரமாகக் கொண்டு, இந்தக் குறளையும் வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் பாடல்களில் சிலவற்றையும் வைத்துக்கொண்டு, மரணமில்லாத வாழ்வு பெற முயல்கின்றவர்களும், முயலச் செய்கின்ற வர்களும் இருக்கிறார்கள்.

இராமலிங்க சுவாமிகளின் பாடல்களில், மரண மில்லாத வாழ்வு பெற மனிதன் முயலவேண்டும் என்ற பொருள் கொள்ளக்கூடிய பாட்டுக்கள் இருக்கின்றன. இறவாத பெருவாழ்வு பெற முடியும் என்பதை வள்ளலார் நம்பினார் என்று கொள்ளவும் இடமிருக் கின்றது. ஆனால் அவர் எண்ணிய இறப்பில்லா வாழ்வு எது என்பது விளங்கவில்லை. ஒருக்கால் பிற வாதிருக்கக் கூடிய பேரின்பத்தை அடைந்தால் அது தான் இறவாமை என்பதை எண்ணினாரோ என்னவோ? பிறந்தாற்றானே இறக்கவேண்டும்? பிறவாமை பெற்று விட்டால் இறவாமையும் பெற்றவர்களாகிறார்கள். இதைத்தான் இராமலிங்க சுவாமிகள் எண்ணியிருக்க லாம் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. ஏனென்றால் இராமலிங்க சுவாமிகள் பிறந்த மனிதர்கள் இறந்தே போவார்கள்; இந்தப் பூத உடல் அழிந்தே போகும்

என்று பல பாடல்களில் எச்சரித்து அந்த அழிவு வருமுன் இறைவனை நாடிக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

‘கூடு விட்டுப் போயினபின் எதுபுரிவீர் எங்கே
குடியிருப்பீர்’

என்றும்

‘கூற்று வருங்கால் அதனுக்கெது புரிவீர் ஐயோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்ற விரும்பீரே’

—என்றும்

‘ஐவிளக்கும் மூப்பு மரண ஆதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ கொடிய முயற்றுலகீர்’

—என்றும்

‘ஐவகைய பூத உடம்பு அழித்திடில் என்புரிவீர்
அழியுடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்’

—என்றும்

‘பிணம் கழுவி எடுத்துப்போய்ச் சுடுகின்றீர்
இனிச் சாகும் பிணங்களே நீர்’

—என்றும்

இன்னும் இவற்றைப் போன்ற பல பாடல்களால் மனிதனுக்கு மரணம் வந்தே தீரும் என்பதை நினைப்பூட்டுகிறார்.

மேலும் இவர் ‘பிறவாதிருப்பதைத்தான்’ இறவாதிருப்பதாகச் சொல்லுகிறார் என்ற ஊகத்தை உறுதிப்படுத்துவதுபோல் ‘நல்ல மருந்திம் மருந்து’ என்ற கீர்த்தனைப் பாடல்களில்,

‘பிறப்பை ஒழிக்கும் மருந்து--யார்க்கும்
பேசப்படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கும் மருந்து--என்னுள்
என்றும் மதுரித் தினிக்கும் மருந்து’

என்கிறார்.

ஆதலால் இராமலிங்க சுவாமிகள் மக்கள் சாகாமல் இருக்கமுடியும் என்று சொன்னூர் என்பது வெறும் மயக்கம்தான்.

நிற்க சுருதி, யுக்தி, அனுபவம் என்னும் பிரமாணங்கள் மூலமாக உலகம் அறிந்துள்ள உண்மை 'இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பார் என்று எண்ணவோ திடமில்லை' என்பதுதான்.

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேற் கேடுமற்றுண்டோ

என்று கம்பன் சொல்லுகிருன். ஸ்ரீ சங்கராச்சாரியர் அருளிய 'பஜகோவிந்தம்' என்ற பாடல்களில்,

பிறந்த உயிர்கள் எல்லாம் நிச்சயம் பிணமாய்ப் போகும்
உறைந்து தாமரை இலைமேல் உருளும் நீர்த்துளியே போல
நிறைந்துள உலக ஜாலம் நிலையற்ற நீர்மைத்தாகும்

என்கிருர். இப்படிப்பட்ட சுருதிகள் எல்லாவற்றிற்கும் மேலான பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜ்ஜுனனுக்குச் சொல்லுகின்ருர் ;

அர்ஜ்ஜுனு ! பிறந்தவன் இறப்பது நிச்சயம்
இறந்தவன் பிறப்பதும் நிச்சயம். இது
தவிர்க்க முடியாத உண்மை, இதற்காக நீ
கவலைப்படுவது தகாது-என்று

இப்படியாகப் பிறந்த மனிதன் இறந்தே ஆக வேண்டும் என்பது விலக்கவே முடியாத விதியாக இருக்கும்போது, 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' என்பதற்குச் 'சாகாமல் இருக்கவும் முடியும்' என்ற பொருள் எப்படிப் பொருந்தும்? அதுவும் என்றென்றும் நிலைப்பனவாகிய உண்மைகளையே வடித்துக் கொடுத்திருக்கிற 'பொய்யாமொழிப் புலவர்' எனப்படும் திருவள்ளுவர் 'தவ வலிமை மிகுந்தவர்களுக்குச் சாகாமல் இருப்பதும் கைகூடும்' என்று சொல்லியிருப்பாரா?

திருவள்ளுவர் அப்படிச் சொல்லவில்லை. திருவள்ளுவர் அப்படிச் சொல்லியிருப்பதாக மக்களை மயங்கச் செய்வது உரையாசிரியர்களின் கவனக் குறைவால் உண்டான தவறு. திருவள்ளுவர் அப்படிச் சொல்லவில்லை என்பதற்கு என்ன ஆதாரம் என்றால் அதற்குத் திருவள்ளுவரே பதில் சொல்லுகிறார் :

மேற்சொன்ன குறள் துறவறத்தில் 'விரதம்' என்ற பகுதியில் இருப்பது. இதற்கு அடுத்த பகுதி 'ஞானம்' என்பது. 'ஞானம்' என்றால் 'மெய்யான அறிவு' என்று பொருள். அந்த 'ஞானம்' என்பதில் முதலில் அறிந்து கொள்ளவேண்டிய மெய்யறிவாக 'நிலையாமை' என்ற அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் செல்வம் நிலையாது, இளமை நிலையாது, உடல் நிலையாது என்று மிகத் தெளிவாகச் சொல்லுகிறார். அதில் உடல் நிலைக்காது என்பதைப் பற்றிய குறள்களைப் பாருங்கள்:

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

இதன் பொருள்: நேற்றிருந்த ஒருவன் இன்றைக்கு இல்லை என்னும் பெரிய உண்மையுள்ளது இந்த உலக வாழ்க்கை—என்பது.

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

இதன் பொருள்: ஒரு நாள் முழுதுக்குமேனும் உயிரோடிருப்பார்கள் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாத மனிதர்கள் நினைக்கிற நினைப்புகளோ ஒரு கோடி இரண்டு கோடியல்ல: பல கோடி நினைவுகள்—என்பது.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.

இதன் பொருள்: உடம்புக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் முட்டையின் ஓட்டினை விட்டு விட்டுப் பறவைக்

குஞ்சு பறந்து போய் விடுகிற அதேமாதிரிதான்—என்பது.

> உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு.

இதன் பொருள்: தூங்குவது போன்றது மரணம்; தூங்கி விழிப்பது போன்றது மறுபடியும் பிறத்தல்—என்பது. இந்தக் குறள் முன் சொல்லப்பட்ட 'பிறந்தவன் இறப்பான், இறந்தவன் பிறப்பான்' என்ற பகவத் கீதையின் கருத்தை ஒத்திருப்பது குறிக்கத் தக்கது.

இப்படியெல்லாம் சொல்லியிருக்கிற பொய்யா மொழிப் புலவர் 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' என்பதற்கு 'மரணமில்லாமல் இருக்கவும் முடியும்' என்ற பொருளை எண்ணியிருக்க முடியுமா? அப்படியானல் 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' என்பதற்குப் பொருள் தான் என்ன? அந்தப் பொருளை ஆராய்ந்தறிய 'தவம்' என்பதைப் பற்றிய சாஸ்திரங்களை ஆராய வேண்டும். அப்படி ஆராய்ந்தால் தவம் செய்தவன் நோக்கமும் உண்மையான தவசிகள் இப் பிறப்பில் அடையக்கூடிய சிறப்பும் இன்னதென விளங்கும். தவம் செய்வதன் நோக்கம் 'பிறவாமை' என்னும் முத்தி நிலையைப் பெறுவது. தவ ஒழுக்கங்களான விரதங்களைக் காத்து, மெய்ஞ்ஞானத்தை உணர்ந்து எல்லா ஆசைகளையும் விட்டொழித்தால் அதுவே முத்தி நிலை. ஆசைகளெல்லாவற்றையும் அறவே நீக்கிவிட்டவனுக்கு மறுபிறப்பில்லை என்பது சாஸ்திரங்களின் துணிபு. அதைத் திருவள்ளுவரும்,

> அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
> தவாஅப் பிறப்பீனும் வித்து

என்ற குறளில் சொல்லுகிருர். இதன் பொருள்: எல்லா உயிர்களுக்கும் எப்போதும் தப்பாமல் பிறப்பை உண்டாக்குகிற விதை ஆசைதான் என்று சொல்லப்படும்—என்பது.

இந்த ஆசையில்லாத தன்மை 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்குத்தான் உண்டாகும். அப்படி எல்லா ஆசைகளையும் விட்டொழித்தவர்க்கு ஆசைகளைப் பற்றியே வருகின்ற அச்சங்களும் துன்பங்களும் இருக்க மாட்டா.

இனி, 'கூற்றம்' என்பது 'மரணம்' அல்ல. பின் கூற்றம் என்பது மரண காலத்தில் ஒவ்வொருவருக்கும் உண்டாகிற மரண பயத்துக்கும் மரண அவஸ்தைகளுக்கும் உருவகம். ஆசைகளையெல்லாம் விட்டொழித்து 'நோற்றலின் ஆற்றல் தலைப்பட்ட' தவசிக்கு இந்த மரண பயமும் மரணவஸ்தையும் இருக்க மாட்டா. அத் தவசி மனமறிந்து தன் இச்சா மாத்திரத்தில் தன்னுடைய உயிரை உடலினின்றும் பிரித்துக் கொள்வான் என்பது தவத்தைப் பற்றிய சாஸ்திரங்களின் துணிபு. ஆதலால் தவ வலிமை மிகுந்தவர்க்கு எம பயமும் எமவாதனைகளும் இருக்க மாட்டா என்பதுதான் இக் குறளின் கருத்து.

திருவள்ளுவருடைய கருத்தை ஆராயாமல் வெறும் அறியாமையால் தவருன உரை செய்திருப்பதை விளக்குவதற்கு உதாரணமாக இந்தக் குறள் சொல்லப்பட்டது. இனி திருவள்ளுவருடைய கருத்தை அறிந்தே வேண்டுமென்று பொருளைத் திரித்து உரை செய்வதைப் பற்றி ஒரு உதாரணம் பார்ப்போம். இப்படி வேண்டுமென்றே திரித்துப் பொருள் கூறுகின்றவர்கள் பழங்காலத் தமிழர்களின் பல கொள்கைகளையும் மூடக்கொள்கைகளென்று ஏளனம் செய்து, பகுத்தறிவைக் கொண்டு விஞ்ஞான ரீதியில் உரை செய்ய முனைந்தவர்கள். இவர்கள் திருக்குறளைத் தமிழ் மொழியில் தள்ள முடியாத இலக்கியமாகப் பாராட்டினுலும் திருக்குறளில் திருவள்ளுவர் கருதிய அர்த்தங்களை ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஏன்என்னில் அப்படி ஏற்றுக்கொண்டால் அது வடமொழியிலுள்ள அறிவுகளையும் நம்பிக்கைகளையும் ஒப்புக்கொண்டதாகிவிடும் என்று கூசுகின்றவர்கள். திருக்குறள் பிறமொழி அறிவுகள் கலக்காத ஒரு தனித்தமிழ்

இலக்கியம் என்று மெய்ப்பிக்க வேண்டும் என்பது இவர்களுடைய இச்சை. மேலும் திருக்குறளுக்கு எழுதப் பட்டிருக்கிற எல்லா உரைகளிலும் மிகச் சிறந்து உரை செய்தவராகிய பரிமேலழகர் வட மொழியிலும் மிக்க வல்லவராகிய ஒரு பார்ப்பனர் என்பதனுல் அவர் வட மொழிப் பார்ப்பனீயத்தைப் புகுத்தவே இப்படி உரை செய்திருக்கிருர் என்று கற்பித்துக் காட்ட வேண்டும் என்பதே இவர்கள் காரியம். அதற்காக இவர்கள் தமிழ் இலக்கியங்களிலுள்ள ஆதாரங்களை யெல்லாம் புறக் கணித்துத் தமிழ் நாட்டில் நெடுங்காலமாக வழங்கி வருகிற கொள்கைகளுக்கும் குற்றம் கூறித் தமிழ் மரபுக்கு ஒரு சிறிதும் ஒவ்வாத முறையில் திருக்குறளின் பொருளைக் கூசாமல் திரித்துக் கூறுகின்ருர்கள். இவர்கள் தமிழிலக்கியங்களிலுள்ள அறிவெல்லாம் வட நாட்டு அறிவு என்று வாதிக்கின்றவர்கள். வட நாட்டு அறிவு தமிழ் நாட்டு அறிவின் மேல் படையெடுத்து வந்து தமிழர் அறிவை முற்றிலும் அழித்துவிட்டுத் தன்னறிவைப் பரப்பிவிட்டதாகச் சொல்லி மக்களை மயக்க முயல்கின்றவர்கள்.

திருவள்ளுவரின் கருத்தையும் தமிழ் இலக்கியங் களையும் தமிழ் மரபையும் இவர்கள் எப்படி அலட்சியம் செய்துவிட்டுத் திருக்குறளுக்கு உரை சொல்லுகிருர்கள் என்பதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். ஓரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லுவோம்.

> தெய்வம் தொழாஅள் கொழுநற் ரெழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை

என்பது வாழ்க்கைத் துணைவியான பெண்ணின் பெருமையைச் சொல்லும் குறள். இதன் பொருள்; பிற தெய்வம் எதையும் தொழமாட்டாள். தன் கணவனையே தெய்வமாகக் கருதித் தினந்தினம் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கு முன் கணவனைத் தொழுது விட்டுத்தான் மற்ற காரியங்களைச் செய்வாள். அப்படிப் பட்ட கற்புடைய பெண் 'பெய்' என்று சொன்னல் மழை பெய்யும்—என்பது. இந்த உரையைத்தான்

திருவள்ளுவர் கருதியிருக்கிறார் என்பது கண்கூடு. ஏன் எனில் கற்புடைய பெண்ணைக் காட்டிலும் உயர்ந்த பொருள் உலகத்தில் இல்லையென்பது வள்ளுவரின் வாக்கு. அதனை.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்

என்ற முந்தின குறளில் சொல்லிவிட்டார். இதன் பொருள்: கற்பு என்ற வலிமையுடைய பெண்ணைக் காட்டிலும் உயர்ந்த பொருள் என்ன இருக்கிறது?—என்பது.

ஆகையினால் திருவள்ளுவர் கருதிய பொருள் "வேறு தெய்வங்களைத் தொழாவிட்டாலும் தன் கணவனையே தெய்வமாகத் தொழுது எழுந்திருக்கும் பெண் 'பெய்' என்றால் மழை பெய்யும்" என்பதுதான். ஒரு பெண், அவள் எப்படிப்பட்டவளானாலும், பெய் என்று சொன்னால் மழை பெய்துவிடுமா? அது நடக்கக்கூடிய காரியமா? என்றெல்லாம் ஆராய்வதற்காகச் சொல்லப்பட்டதல்ல இது. கற்புடைய பெண் மிகவும் போற்றத் தகுந்த சக்தி வாய்ந்தவள் என்ற ஏற்றம் தருவதற்காக கவிதையாகச் சொல்லப்பட்டது. தமிழர்கள் கற்புடைய பெண்மைக்கு எவ்வளவு பெருமை தந்து வந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுவது இந்தப் பாட்டு.

ஒரு கவிஞன் வெறும் பகுத்தறிவையும் விஞ்ஞான உண்மைகளையும் மட்டும் வைத்துக்கொண்டு கவி பாடுவதில்லை. அவன் மனிதனுடைய பகுத்தறிவுக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும் அப்பாற்பட்டதாகி, எவராலும் என்னவென்று கண்டறிய முடியாதனவாகிய சக்திகளை நாடித்தான் கவி புனைகின்றான். கற்பனை மிகுந்த கவிஞனுடைய புனைந்துரைகளிலேதான் மனிதனுடைய புலன்களுக்கு எட்டாத உண்மைகள் புத்திக்கு மட்டும் புலப்படுகின்றன.

அதுமட்டுமல்ல. மனித சமுதாயத்தின், சமாதானத்தைக் காத்து வருவதும் இந்தப் புலன்களுக்கு எட்டாத

சக்திகளைப் பற்றி மக்களுக்குள்ள பயமும் பக்தியும்தான். எந்த நாட்டில் இந்த பயபக்தி மிகுந்திருக்கிறதோ அந்த நாட்டின் மக்களிடை சமாதானமும் மிகுந்திருக்கும். ஏனெனில் இந்த பயபக்தியே அவர்கள் தப்பான காரியங்களைச் செய்துவிடாதபடி அப்போதைக்கப்போது தடுப்பது. இந்த பயபக்தி குறைந்த நாடுகளில் அடிக்கடி குழப்பமுண்டாகி சமுதாயத்தில் சச்சரவுகளே மிகுந்திருக்கும் என்பது சரித்திர உண்மை.

அப்படிப்பட்ட பயபக்தியுடன் பாராட்டவேண்டிய தெய்வீக சக்தியுடையவள் கற்புடைய பெண் என்பது தமிழர்களின் நம்பிக்கை. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத மழை பெய்வதும் பெய்யாமற் போவதும் அந்தந்த நாட்டிலுள்ள பெண்களின் கற்பைப் பொறுத்ததே என்பதும் தமிழர்களின் நம்பிக்கை. அதைத்தான் வள்ளுவர் 'கொழுநற் றொழுது எழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்பதனுல் குறிப்பிடுகின்ருர். திருவள்ளுவர் அதைத்தான் குறிப்பிடுகிருர் என்பது திருவள்ளுவருடைய காலத்துக்குச் சம காலத்தில் எழுதப்பட்டதாகக் கணிக்கப்படுகிற சிலப்பதிகாரம் தெளிவாகக் காட்டுகின்றது. சிலப்பதிகாரம் திருக்குறளுக்குச் சற்றே பிந்தியது. அதனுல் திருவள்ளுவரே வெளியிட்டிருக்கக்கூடிய உரைகளை அறிந்திருந்த இளங்கோவடிகள் திருக்குறளிலுள்ள அதே சொற்றொடர்களை வைத்துப் பத்தினிப் பெண்களுக்குத் தெய்வீக சக்திகள் உண்டு என்கிருர். சிலப்பதிகாரம் கட்டுரைக் காதை என்னும் பகுதியிலுள்ள அந்த வெண்பா :

தெய்வம் தொழாள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால்--தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து.

இதன் பொருள் : வேறு தெய்வம் எதையும் தொழாமல் தன் கணவனையே தெய்வமாகத் தொழுகின்ற பெண், தெய்வமும் வணங்கத் தகுந்த தன்மையுடையவள்

என்பது திண்ணம். அப்படித் தெய்வத்துக்கும் தெய்வமாய் மண்ணுலகத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் ஆபரணம் போன்றவளாகிய கண்ணகி விண்ணுலகத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் விருந்தாளி—என்பது.

இதைத் தொடர்ந்து, தமிழ் இலக்கியங்கள் பலவற்றிலும் கணவனைத் தெய்வமாக வணங்கும் கற்புடைப் பெண்மையைப் பற்றியும் அக்கற்பின் காரணமாக மழை பெய்யும் என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. தமிழ்மொழியின் ஐந்து பெரிய காவியங்களான சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பவற்றுள் குண்டலகேசி என்பதைத் தவிர மற்ற நான்கு காப்பியங்களிலும் இந்தக் கருத்தே இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. குண்டலகேசி என்னும் காவியம் முழுதும் கிடைக்கவில்லை. கிடைத்தால் அதிலும் இக்கருத்து இருக்கலாம். சீவகசிந்தாமணியில்:

'காமனை யென்றும் சொல்லார் கணவர் கைதொழுது வாழ்வார்' என்று கற்புடைப் பெண்களைப் பற்றிச் சொல்லப்படுகிறது. இந்த அடிக்கு அர்த்தம்: கற்புடைப் பெண்கள் வெறும் காமவாழ்க்கை வாழமாட்டார்கள். கணவரைத் தெய்வமாகக் கைதொழுது வாழ்க்கை நடத்துவார்கள்—என்பது. மணிமேகலையில்:

'வான்தரு கற்பின் மனையுறை மகளிர்'

என்று சொல்லப்படுகிறது. இதன் பொருள்: மழையைப் பெய்விக்கிற கற்பினையுடையராக இல்லறம் நடத்தும் பெண்கள்—என்பது.

மீண்டும் அதே மணிமேகலை என்னும் காவியத்தில் திருக்குறளிலுள்ள பதங்களையே வைத்து:

'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்'

என்று சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருள்: பிற தெய்வங்களைத் தொழமாட்டாள். தன் கணவனையே

தெய்வமாகத் தொழுது எழுந்திருப்பாள். அப்படிப்பட்ட பெண் 'பெய்' என்று சொன்னுல் பெருமழை பெய்யு மென்று அந்தப் பொய்யாமொழிப் புலவனுகிய வள்ளுவன் சொன்ன பொருள் நிறைந்த சொல்லை நம்புவாயாக—என்பது. இந்தப் பாடல் திருவள்ளுவர் சொன்ன கருத்து இன்னதுதான் என்பதை சந்தேகத்துக்கிடமில்லாமல் தீர்மானிக்கிறது. வளையாபதி என்ற காவியத்தில் :

நாடும் ஊரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடுறும் மழை பெய்யெனப் பெய்தலும்
கூட வாற்றவர் நல்லது கூறுங்கால்
பாடல் சான்மிகு பத்தினிக் காவதே

என்ற விருத்தம் இருக்கிறது. இதன் பொருள் : நாடும் நகரமும் மிகவும் புகழ்ந்து கொண்டாடப் பெறுவதும் நன்மை உண்டாக்குகிற மழை, 'பெய்' என்றவுடன் பெய்வதும் கைகூடும்படிச் செய்யும் வல்லமை உண்மையாகச் சொன்னுல், அவை பத்தினிப் பெண்ணுக்கே உரியவை.

இனிக் கல்வியிற் பெரிய கம்பன் கோசல நாட்டின் பெருமைகளைச் சொல்லும்போது

.....................................மாதரார்
அற்பின் நின்றன அறங்கள் அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே

என்கிருன். இதன் பொருள்: (அந்த நாட்டில்) அறங்களெல்லாம் பெண்மக்களின் அன்பினுல் குறைவற நடந்து வந்தன. அவர்களுடைய கற்பின் பெருமையால் பருவ மழைகள் தவருமல் பெய்தன—என்பது இது. கற்புக்கும் மழைக்கும் உள்ள சம்பந்தத்தை (தமிழர்கள் நம்பியபடி) காட்டுகின்றது.

கற்புடைய பெண்களின் மனத் தூய்மையைப் பற்றிச் சொல்லும்போது கம்பன் :

தங்கள் நாயகரிற் றெய்வம் தவம்பிறி திலவென் றெண்ணும்
மங்கைமார் உள்ளம் போலத் தூயது..............

என்கிருன். இதன் பொருள் : தங்களுடைய கணவரைக் காட்டிலும் தெய்வமோ தவமோ வேருென்று இல்லை என்று எண்ணுகிற பெண்களின் மனம்போலப் பரிசுத்த மானது—என்பது. மேலும் கந்த புராணத்தில் :

காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுற கற்பினர்தம் மெய்யுரையில் நிற்கும்
ஈண்டையுள தெய்வதமும் மாமுகிலும் என்ருல்
ஆண்டகைமை யோர்களும் அவர்க்கு நிகரன்றே

என்பது ஒரு பாடல். இதன் பொருள்: (கண்ணுற் காண முடியாத பிற தெய்வங்களை விட்டு) கண்ணுக்கு முன்னுலிருக்கும் தம் கணவரைத் தெய்வமாக வணங்கும் கற்புடைய பெண்களின் சத்திய வாக்குக்கு உட்பட்டன வாகவே இங்குள்ள தெய்வீகமும் மழை தரும் மேகமும் ஏவல் கேட்கும் என்ருல் ஆண் மக்களும் அப் பெண் களுக்கு நிகராக மாட்டார்கள்—என்பது. பின்னும் பெரிய புராணத்தில்;

'மழைக்குதவும் பெருங்கற்பின் மனைவியார்'

என்ற வரி வந்துள்ளது. இதன் பொருள், மழை பெய் வதற்கு உதவி புரியும் பெருமையுடைய கற்புள்ளவர் களான மனைவிகள்—என்பது.

கணவனைத் தெய்வமாக வணங்கும் பெண்ணுக்கு மழையைப் பெய்விக்கும் சக்தி மட்டுமல்ல, அதற்கும் மேலான சக்திகளும் உண்டு என்பதைக் கம்பன் வெகு அழகாகக் காட்டுகிருன். அந்த அழகைப் பார்ப்போம்:

சீதா தேவியைத் தேடுவதற்காக இலங்கையிற் புகுந்த அனுமான் இலங்காபுரி முழுவதையும் தேடி விட்டுக் கடைசியாக அசோக வனத்தில் நுழைந்து அதன் பல பகுதிகளையும் பார்த்துக்கொண்டே போகும் பொழுது அங்கே ஓரிடத்தில் அநேக அரக்கப் பெண்கள்

ஆயுத பாணிகளாகக் காவல் புரிவதைக் கண்ணுற்ருன். மேலும் அதைத் தொடர்ந்து கவனிக்கிறபோது கரு நிறத்து அரக்கியர்களுக்கிடையில் மின்னற் கொடி போன்ற ஒரு பெண் இருப்பதை அறிந்தான். அந்தப் பெண்தான் சீதையாக இருக்குமோ என்று ஆராய்ந்து பார்க்கும்போது சீதையைப் பற்றி இராமன் சொல்லி யனுப்பிய அடையாளங்கள் எல்லாம் பொருந்திருப்பதை கண்டு அவள்தான் சீதை என்று அறிந்து ஆனந்த மடைகிருன். அவளுடைய நிலைமையை உற்று நோக்கு கிருன். சீதை தன் நாயகனைப் பிரிந்திருப்பதை நினைத்து நினைத்து அழுவதும் மயங்கி மயங்கி விழுவதும் மீண்டும் எழுவதும் இராமனைப் போற்றிப் போற்றித் தொழு வதுமேயன்றி வேருென்றும் செய்யமாட்டாதவளாய்த் தவித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிருன். தம்முடைய கணவரையே தெய்வமெனத் தொழுது தவம்புரியும் பெண்ணை விடப் பெரியது ஒன்றுமில்லையென்று தனக் குள்ளேயே வியந்து மகிழ்ந்த அனுமான்:

வெங்கனல் முழுகியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர் குலனில்வந்து இல்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ

என்று தனக்குள்ளேயே சொல்லுகிருன். இதன்பொருள் வெப்பம் மிகுந்த நெருப்பிடை இருந்தும் ஐந்து புலன் களையும் அடக்கியும் தண்ணீர் குடிப்பதையும் ஆகாரம் அருந்துவதையும் விட்டு விட்டுத் தவம் செய்கின்ற தவசிகள் இதற்கு எம்மாத்திரம்? நல்லகுலத்திற் பிறந்து இல்லறத்தின் பெருமையான கற்புடைய பெண்களின் மனத்தவத்தின் மகிமையை சொல்லவும் முடியுமா?— என்பது.

அவ்வளவு பயங்கரமான சூழ்நிலையில் சீதையைக் காத்து நிற்பது எந்த சக்தியோவென்று அனுமான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அங்கே இராவணன் வருகிருன். சீதையிடத்தில் காமப்

பேச்சுகள் பேசுகின்ருன். அதைக் கேட்ட சீதை இராவணனைத் துரும்புபோல் மதித்துக் கடிந்து பேசிப் புத்திமதிகள் சொல்லுகிருள். இராவணன் கோபித்துச் சீதையைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்துகிருன். அதற்குச் சீதை அஞ்சவில்லை. பிறகு இராவணன் தன்னிடம் சீதை ஆசை கொள்ளும்படி செய்யவேண்டுமென்று அரக்கியர்களுக்கு ஆணையிட்டுவிட்டுப் போய் விடுகிருன். அரக்கிமார்களும் சீதையைப் பலவாறு பயமுறுத்திவிட்டு ஓய்ந்துவிடுகிருர்கள். சீதை தனியே இருக்கிருள். சந்திப்பதற்கு அதுதான் சமயமென்றுணர்ந்த அனுமான் அரக்கியர்களெல்லாம் உறங்கி விடும்படி ஒரு மந்திரத்தை ஏவுகின்ருன். அரக்கியரெல்லாம் உறங்கி விடுகின்றனர். தூங்காத அரக்கியர்களும் தூங்கிவிட்டதைக் கண்ட சீதை ஏகாந்தமாக இராமனை நினைத்து வாய்விட்டுப் புலம்புகிருள். அவள் புலம்பலை அனுமான் கேட்டுக்கொண்டே மரச்செறிவில் மறைந்திருக்கிருன். பலவாருகப் புலம்பிவிட்டுத் தனது நாயகன் தன்னை வந்து மீட்டுக்கொண்டு போக மனமில்லாதவராகத் தன்னைத் துறந்து விட்டாரென்று நினைக்கிருள். இராமபிரானே துறந்துவிட்டபின் இனி உயிரை வைத்துக்கொண்டிருப்பதிற் பயனில்லை என்று தற்கொலை புரிந்து கொள்ளத் தீர்மானிக்கிருள். தன்னைத் தடுப்பார் எவருமில்லாததால் உடனே ஒரு மரச்செறிவான இடத்துக்குள் போய் மாதவி மரத்தைச் சுற்றிப் படர்ந்திருந்த கொடியைக் கழுத்துக்குச் சுருக்குப் போட்டுக் கொள்ளத் தயார் செய்து கொண்டு தன் கணவனைத் துதிக்கிருள், மரத்தைச்:

சுற்றிய கொடியொன்றைத் துணித்துத் தூயளோர்
பொற்றடங் கொம்பினிற் பூட்டிப் பூமியில்
நற்றவமுடையள் நாளுகில் நாயகன்
வெற்றிசேர் திருவடி மேவுவேன் என்ருள்.
என்றருந் ததிமனத் தெம்மையாளுடைத்
துன்றருங் கற்பினுள் சுருதி நாயகன்
பொன்திரு மலர்ப்பதம் வழுத்திப் பூங்கொடி

தன் தனிக் கழுத்திடைச் சார்த்து மெல்லையில்
கண்டனன் அனுமனும் கருத்தும் எண்ணினுன்
கொண்டனன் துணுக்கம் மெய்தீண்டாக் கூசுவான்
அண்டர் நாயகன் அருள் தூதன் யான்எனுத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினுன்.]

இவற்றின் பொருள் :

மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்த ஒரு கொடியைத் துணித்து அதை ஒரு அழகிய பெரிய மரக் கொம்பில் கட்டி விட்டு "இந்தப் பூமியில் இருந்தவரையிலும் பெண்களின் நற்றவமாகிய கற்புடையவளாக நான் இருந்திருப்பது உண்மையானுல் என் நாயகனுடைய வெற்றி தரக்கூடிய திருவருடிகளைச் சேர்வேன்" என்று அருந்ததியைப்போன்ற தூய மனமுள்ள நமது கற்புத் தெய்வமாகிய சீதை வேதநாயகனுகிய இராமனுடைய மலரடிகளைத் தொழுதுவிட்டு அந்தப் பூங்கொடியாலாகிய சுருக்கைத் தன் கழுத்தில் பூட்டப்போகிற சமயத்தில், பார்த்தான் அனுமான். அவளுடைய கருத்தை அறிந்தான். திடுக்கிட்டு உடனே மரத்தினின்றும் குதித்து உத்தமியின் தேகத்தைத் தீண்டி விலக்கக் கூசி 'அண்டங்களுக்கெல்லாம் நாயகனுகிய இராமச்சந்திரன் அனுப்பியருளிய தூதன் நான்' என்று சொல்லிக் கொண்டு சீதைக்கு முன்னுல் வந்து நின்ருன்—என்பது.

அனுமானைக் கண்ட சீதை அவன் உருமாறி வந்த அரக்கனே என்று ஐயப்படுகிருள். அனுமான் தன் வரலாற்றை சொல்லி இராமன் அடையாளமாக அனுப்பிய கணையாழியைக் கொடுத்து மகிழ்விக்கிருன். பிறகு இராம இலக்குமணர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி, சுக்ரீவனுடைய வானர சேனையின் பலத்தையும் தெரியப்படுத்திக் கடைசியாக அனுமான் சொல்லுகிருன் :

'தாயே ! அடியேன் சொல்லுவதைக் கோபிக்காமல் கேட்டருளவேண்டும். நீங்கள் இங்கே மிகவும் அபாய

மான சூழ்நிலையில் இருக்கின்றீர்கள். இராவணன் உங்களைக் கொன்றுவிடுவதாகச் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்படி ஏதேனும் நேர்ந்துவிட்டால் பிறகு இராமபிரான் வந்து இராவணனை வென்று தான் என்ன பயன்? ஆதலால் தங்களை இப்பொழுதே எடுத்துக்கொண்டு போய் இராமனிடத்தில் சேர்த்து விடுகிறேன். அரக்கியரெல்லாம் உறங்கிக்கிடக்கிற இது தான அதற்குத் தகுந்த சமயம். பஞ்சணை போன்ற என் தோளின்மீது அமர்ந்துகொள்ளுங்கள். கண் மூடிக் கண் திறப்பதற்குள் இராமபிரான் இருக்கிற குன்றின் மீது தங்களுடன் குதித்துவிடுவேன். அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்மடி அருள் புரியுங்கள். உடனே என் தோளின்மீது ஏறிக் கொள்ளுங்கள்'—என்று வணங்கி அடிபணிந்தான்.

அதைக் கேட்ட சீதை சொல்லுகின்ருள் :

'அப்பா! உனக்கு இது ஒரு பிரமாதமான காரியம் அல்ல. உன்னுடைய திறமைக்குத் தகுந்த காரியம்தான். ஆலோசித்துத்தான் சொல்லுகிருய். அப்படியே நீ செய்தும் முடிப்பாய். ஆனுலும் அது சரியான காரியம் அல்ல. நீ என்னைத் தூக்கிக்கொண்டு கடலைத் தாண்டும் போது அரக்கர்கள் தடுத்துப் போர் செய்தால் அப்போது நீ என்னைப் பாதுகாப்பாயா, அவர்களுடன் போர் புரிவாயா? மிகவும் தடுமாறவேண்டியிருக்கும். அன்றியும் இராமன் வந்து இராவணனை வென்று என்னை மீட்காமல் நீ வந்து எடுத்துக்கொண்டு போனுய் என்ருல் அது இராகவனுடைய வில்லாண்மைக்குப் பழிப்புண்டாக்கும். மேலும் அவர்கள்தாம் என்னைத் திருட்டுத்தனமாக வஞ்சித்துத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். அந்தத் திருட்டு வேலையை நீயும் நினைக்கலாமா? என் நாயகனே வந்து இராவணுதியரைக் கொன்று என்னை மீட்காவிட்டால் நான் நற்குடியிற் பிறந்தவள் என்பதையும் என் ஒழுக்கத்தையும் மாசுபடாத கற்புடையவள் என்பதையம் பிறருக்கு எப்படிக் காட்ட முடியும்? என்னுடைய நாயகனே வந்துதான்

OFFICE OF THE ... OF ARCHAEOLOGY 4823 5 JUN 1975

என்னை மீட்கவேண்டும் என்றுதான் இவ்வளவு துன்பங்களையும் சகித்துக்கொண்டு அவர் வரவை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறேன். இல்லா விட்டால்:

அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும்என்
சொல்லினுற் சுடுவேன் அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசுஎன்று வீசினேன்

கொடிய அரக்கர் வாழும் இந்த இலங்கையை மட்டுமா, எல்லை காண முடியாதனவாக உள்ள அண்ட கோளங்கள் அனைத்தையும் என்னுடைய சாபத்தால் எரித்துச் சாம்பலாக்கிவிடுவேன். ஆனல் அப்படி நான் செய்துவிடுவது பரிசுத்தனுகிய என் நாயகருடைய வில் லாற்றலுக்கு அபகீர்த்தி உண்டாக்குமென்று அதை விட்டொழித்தேன்—என்பது இதன் பொருள்; இதனுல் தன் கணவனையே தெய்வமாகத் தொழுது வாழும் கற்புடைய பெண்ணுக்குப் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற சக்தி மட்டுமல்ல; அதற்கும் மேலான சக்திகளும் உண்டு என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை. ஆம்; இது தமிழிலக்கியங்களில்தான் மிகவும் சிறப்பாகப் போற்றப் படுகிறது. கம்பராமாயணம் வான்மீகியின் வடமொழி இராமாயணத்தை ஒட்டிய கதைதான் எனினும் வட மொழி இராமாயணத்தில் சீதைக்கும் அனுமானுக்கும் நடந்த பேச்சுக்களில் மேற்சொன்ன பாட்டிலுள்ள கருத்து இல்லை.

இப்படியாகத் தன் கணவனைத் தெய்வமென வணங்கி வாழும் கற்புடைய பெண்ணுக்குத் தெய்விக சக்திகள் உண்டு என்பதைத் தமிழர்கள் தொன்று தொட்டுப் போற்றி வந்திருக்கிருர்கள். அந்த மரபை ஒட்டியே திருவள்ளுவர் 'தெய்வம் தொழாஅள் கொழு நற் றெழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்ற குறளைச் சொல்லியிருக்கிருர் என்பதில் ஐய மில்லை.

இப்படிக் கணவனைத் தெய்வமாகத் தொழுகின்ற பெண்ணுக்குத் தெய்விக சக்திகள் உண்டு என்று சொல்லுவதை மிகவும் அநாகரீக நம்பிக்கையென்று ஒதுக்கிவிட யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் அதையே சொல்லியிருக்கிற திருவள்ளுவருடைய குறளுக்கு வேறு பொருள் சொல்லுவது எப்படி? திருக் குறள் வேண்டுமென்றால் திருவள்ளுவர் கருதிய பொருளை ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லையானால் திருக்குறளைத் தள்ளிவிடவேண்டும். ஆனால் பகுத்தறிவு கொண்டு விஞ்ஞான ரீதியில் நவீன உரை காண விரும்புகின்றவர்கள் அப்படிச் செய்யாமல் திருக்குற ளுக்குத் திருவள்ளுவர் எண்ணாத உரையைத் திணிக்க முயல்கின்றார்கள்: அதனால் வழியில்லா வழிகளில் வெகு பாடுபட்டு என்னென்னவோ உரைகளைச் சொல்லு கிறார்கள். 'தெய்வம் தொழாஅள்' என்ற குறளில் சொல்லப்பட்டுள்ள இரண்டு விஷயங்களும் அவர் களுக்கு அழுவருப்பாக இருக்கின்றன. ஒன்று தினந் தினம் மனைவியானவள் கணவனைத் தெய்வமாகத் தொழுது எழவேண்டும் என்பது. இதில் பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கி விட்டதாகக் கருதுவது. இன் னென்று ஒரு பெண் சொன்னவுடனே மழை பெய்து விடுமா? அது அனுபவத்தில் நடக்கக்கூடிய காரியமா? என்பது.

இந்த இரண்டு பகுதிகளுக்கும் மாற்றுரை சொல்ல வேண்டும் என்பது இவர்களுடைய இச்சை. ஆனால் முதற் பகுதியாகிய 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' என்பதற்கு எப்படியெல்லாம் பதங் களைப் பிரித்துக் கூட்டிப் பாடுபட்டாலும் 'மனைவி கணவனை வணங்க வேண்டும்' என்பதைத் தவிர வேறு பொருள் சொல்லப் பதங்கள் இடங்கொடுப்பதில்லை. அதனால் அதை விட்டுவிட்டு, 'பெய்யெனப் பெய்யும் மழை' என்பதற்குப் 'பெய் பெய்யென்று பெய்கின்ற மழைக்குச் சமமானவள்'— அதாவது 'கொட்டு கொட் டென்று கொட்டுகின்ற பெருமழைக்குச் சமான மானவள்'— என்று பொருள் சொல்லி அதுதான் சரி

யான உரை என்று பிரசாரமும் செய்கிறார்கள். இப்படி உரை செய்ததில் என்ன நன்மை என்பதை இவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. கொட்டு கொட்டு என்று கொட்டுகின்ற மழை வீடுகளை இடிந்துவிழச் செய்து, வெள்ளப் பெருக்கை உண்டாக்கி, ஆற்றங் கரைகளை உடைத்து, ஊர்களிற் புகுந்து மக்களை மடியத்தான் செய்யும் என்பதையும் மறந்துவிடுகிறார்கள்.

இப்படிப் பல குறள்களுக்கு அறிவைப் புண்படுத்தும் முறையில் உரை பேசுகின்றார்கள். இவர்கள் வேறு வெறுப்புகளை மனதில் வைத்துக்கொண்டு விதண்டா வாதத்துக்காகச் செய்கின்றவர்கள். அந்த வெறுப்புகள் விலகுகின்றவரைக்கும் திருக்குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய உரைகளை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மற்றெல்லா விதத்திலும் மிகவும் விரும்பத்தக்க குணமுள்ளவர்களும் கூட இந்த வெறுப்பினால் விதண்டா வாத உரைகளையே விரிக்கிறார்கள்.

## திருக்குறளின் நோக்கம்

திருக்குறளின் நோக்கம் மக்கள் இல்லறத்தையே தான் நல்லறமாகக் கொள்ள வேண்டும் என்பதே. துறவறத்தையும் சொல்லியிருக்கிறார் என்றாலும் திருவள்ளுவர் சொல்லுகின்ற துறவறம் வீடு வாசல் மனைவி மக்களை வெறுத்துவிட்டுக் காட்டுக்குப் போக வேண்டும் என்ற துறவறம் அல்ல. நாடு நகரத்திலேயே வாழ்ந்தாலும் துறவு மனத்துடன் வாழ்ந்து பற்றுகள் அனைத்தையும் விட்டொழித்தவனாக இருந்தால் அப்படிப்பட்டவனும் தவசிகள் எந்த முத்தி வீட்டை நாடித் தவம் செய்கிறார்களோ அந்தப் பேரின்பத்தை அடைய முடியும் என்ற கருத்தை உள்ளடக்கித்தான் துறவறத்தைச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியிருக்கிற துறவு வீடு வாசல் மனைவி மக்களை விட்டு விலகிப் போய் தவம் செய்கிறவர்களுக்கும் வீடுவாசல் மனைவி மக்களுடன் இருந்தும் பற்றற்ற மனத்துறவுடன் கர்மயோகம் செய்கிற இல்லறத்தாருக்கும் பொதுவான அறிவாக-

இருக்கிறது. துறவறத்தின் கடைசிக் குறளில் துறவு நிலையின் பயன் முழுவதையும் அந்த ஒரு குறளில் சுருக்கிச் சொல்லிவிடுகிறார். அந்தக் குறள் :

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்

இதன் பொருள்: (எவ்வளவு அடங்கினாலும்) அடங்காத தன்மையுள்ளதான ஆசையை விட்டொழித்தால் அந்த நிலைதான் அசைவில்லாத பேரின்ப வீட்டைத் தருவது. இதற்கு மேற்கோளாகப் பரிமேலழகரும்:

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பிலதனை
[உணர்ந்து உணர்ந்து
சென்றாங் கின்பத்துன்பங்கள் செற்றுக் களைந்து
[பசையற்றால்
அன்றே அப்போதே வீடும் அதுவே வீடு வீடாமே

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை மேற்கோளாக மிகவும் பொருத்தமுறக் கூறுகின்றார்.

இப்பாசுரத்தின் பொருள்: நன்றாக ஞானத்தை உணர்ந்து, அதனையும் கடந்து மேற்சென்று நல்ல ஐந்து இந்திரியங்களையும் இழுத்து வசப்படுத்தி எல்லாப் பொருள்களும் அடங்கிய ஒரு பொருளாய்க் கிடக்கும் அருமை பெருமையுடையதாகி அழிவில்லாத மூலப் பிரகிருதியாகிய பரம்பொருளை நன்றாக உணர்ந்து பழகி, இன்ப துன்பங்களால் சலனப்படாமல் ஆசைகளை அடியோடு களைந்துவிட்டால் அன்றைக்கே அப்போதே முக்தி; அந்த நிலையே முக்தி—என்பது.

எனவே, நாட்டையும் வீட்டையும் துறந்து காட்டுக்குப் போகாமலும் ஆசைகளெல்லாம் அறவே நீங்கின அவனே வீடு பெற்றவன். நாட்டையும் வீட்டையும் துறந்து காட்டுக்குப் போனாலும் ஆசைகளெல்லாம்

மனதிலிருந்து அறவே நீக்கினாலன்றி துறவு பூண்டதன் பயன் கிட்டாது.

ஆசைகளை விட்டொழித்துப் பற்றற்றவனாகக் கர்மங்களைச் செய்கிற இல்லறத்தானும் அந்த வீட்டின்பத்தைப் பெறலாம் என்பதே திருக்குறளின் நோக்கம். இந்தக் கர்மயோகமே கிருஷ்ணபகவான் அர்ஜ்ஜுனனுக்கு உபதேசித்தது. பகவத் கீதையிலுள்ள அந்த சுலோகங்களின் கருத்தையே அதே உபமானத்தோடு திருவள்ளுவர் கூறியிருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கது. பகவத் கீதையில் பகவான் சொல்லுகிறார்: பார்த்தா! எப்படி ஒரு ஆமையானது தன்னுடைய (நான்கு கால்கள், ஒரு தலை ஆகிய ஐந்து) அவயவங்களையும் வெளியே போக விடாமல் தனக்குள் இழுத்து அடக்கிக் கொள்ளுகிறதோ அதைப்போல. எவனொருவன் தன்னுடைய ஐந்து ஆசைகளையும் அலையவிடாமல் தனக்குள் இழுத்து அடக்க வல்லவனோ அவனே திடமாக நிலைத்த அறிவுடையவன்.'

இதே கருத்தைத் திருவள்ளுவர் ஒருவன் தன்னைத் தானே அடக்கியாள வேண்டுமென்று சொல்லுகிற 'அடக்கமுடைமை' என்ற அதிகாரத்தில்:

> ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
> எழுமையும் ஏமாப் புடைத்து

என்கிறார். இதன் பொருள்: ஒருவன் இந்த ஒரு பிறப்பில், ஆமை எப்படித் தன் (நான்கு கால்களும் ஒரு தலையும் ஆகிய) ஐந்து அவயவங்களையும் தனக்குள் அடக்கி ஆள்கின்றதோ அதைப்போல, தன் ஐந்து இந்திரியங்களையும் அடக்கி ஆளும் ஆற்றல் பெறுவனாகின் அது இனிவரும் ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பளிக்கும்... என்பது.

காட்டுக்குப் போகாமல் மனைவி மக்களோடு வீட்டிலிருந்து இல்வாழ்க்கை நடந்துகிறவனும், தவசிகள் நாடுகின்ற பேரின்ப நிலையைப் பெறலாம் என்பதனைத்

தமது மாபெரும் செல்வத்தையும் மனைவியையும் துறந்தவராகிய பட்டினத்தடிகளும் :

காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி
ஓடே எடுத்தென்ன உள்ளன் பிலாதவர்? ஓங்கு செல்வ
நாடே யிடைமரு தீசற்கு மெய்யன்பர் நாரியார் பால்
வீடே இருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே

என்கிறார். இதன் பொருள் : காட்டுக்குச் சென்று அதில் அலைந்துதான் என்ன? கந்தல் துணியை உடுத்திக் கொண்டு கப்பரை எடுத்துப் பிச்சை வாங்கினால்தான் என்ன? உண்மையான பக்தியில்லாதவர்கள் அவற்றால் ஒரு பயனையும் அடையமுடியாது. ஆனால் மருதீசனுக்கு (பரமசிவனுக்கு) உண்மையான பக்தி செலுத்துகிறவர்கள் நாட்டுக்குள் மனைவியோடு வீட்டில் இருப்பவர்களானாலும் மெய்ஞ்ஞானப் பேரின்ப வீட்டை அடைவார்கள்—என்பது.

துறவறத்தை மேற்கொள்ளாமலும் வெறும் மனத் துறவுடன் கர்மயோகம் நடத்தும் இல்வாழ்வான் எப்படியிருப்பான் என்பதை மகாத்மா காந்தியின் வாழ்க்கை தெளிவாகக் காட்டும். காந்தியடிகள் தாம் நடத்திய அரசியல் போராட்டத்தில் சத்தியத்தையும் சாத்வீகத்தையும் சன்மார்க்க ஒழுக்கத்தையும் நிபந்தனைகளாகப் புகுத்திய ஆரம்ப காலத்தில் பெரும்பாலும் அரசியல் தலைவர்கள் அதை எதிர்த்தார்கள். சத்திய சாந்த சன்மார்க்கத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை யென்பது அவர்களுடைய வாதம். அவர்களில் ஒருவர் மகாத்மாவுக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதி, அதில் : "மகாத்மாவே! தாங்கள் மிகவும் போற்றத் தகுந்த தலைவர்தாம். ஆனால் தாங்கள் அரசியல் போராட்டத்தில் சத்தியம் சாந்தம் என்பனவற்றைப் புகுத்தி மக்களைக் கோழைகளாக்கி விடக்கூடிய நிலைமையை உண்டாக்குகிறீர்கள். சத்தியம் சாந்தம் என்பதெல்லாம் துறவிகளுக்குச் சொல்லவேண்டிய பாடங்கள். அதனால் ஒரு அரசியல் போராட்டத்தை நடத்தத் தாங்கள் அருகதை

யுடையவர் அல்ல. இந்தப் போராட்டத்தை மற்றவர்களிடம் விட்டுவிட்டுத் தாங்கள் காட்டுக்குப் போய்த் தவம் செய்வது நல்லது'' என்று எழுதினர். அந்தக் கடிதத்தை மகாத்மா காந்தி அப்படியே தமது 'யங் இந்தியா' என்ற பத்திரிகையில் வெளியிட்டு, அதற்குப் பதிலும் எழுதினர். அந்தப் பதில்: "இந்தக் கடிதம் மிகவும் குறிப்பிடத் தக்கது. இக்கடிதத்தை எழுதியிருப்பவருடைய அபிப்பிராயம்தான் பல படிப்பாளிகளிடத்தும் இருந்து வருகிறது. இப்படி சத்தியம், சாந்தம், சன்மார்க்கம் என்பனவெல்லாம் துறவிகளுக்குத்தான் வேண்டியது, மற்றவர்களுக்கு வேண்டியதில்லை என்ற பொய் வேதாந்தம் பரவி விட்டதால்தான் உலகத்தில் சமுதாய வாழ்க்கை சீரழிக்கப்பட்டு விட்டது. என்னைக் காட்டுக்குப் போய்விடும்படி இந்த நிருபர் சொல்லுகின்றார். காட்டுக்குப் போய் யாரிடத்தில் நான் சத்திய சாந்த சன்மார்க்கத்துடன் நடந்துகொள்ள வேண்டும்? காட்டுக்குப் போய்விடுவதுதான் துறவும் தவமும் என்று இந்த நிருபர் கருதுகின்றார். காட்டுக்குப் போயும் வீட்டை நினைத்துக்கொண்டு நிம்மதி பெருத துறவிகள் பலருண்டு. காட்டுக்குப் போகாமல் நாட்டிலிருந்து கொண்டே பல தொல்லைகளுக்கிடையிலும் நிம்மதியடைகின்ற தவசிகளும் உண்டு. அப்படிப்பட்ட தவத்தையே நான் முயல்கின்றேன். முக்தி என்பதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் செய்கின்ற காரியங்களும் அதைக் கருதியதல்ல. மக்களிடை சத்திய சாந்த சன்மார்க்கம் நிலவவேண்டும் என்ற ஒன்றே என் நோக்கம். அதில் நான் எவ்வளவு தூரம் வெற்றிபெற முடியும் என்பதை இனிமேல்தான் பார்க்கவேண்டும்''— என்பதே. இதே நோக்கத்துடன்தான் திருவள்ளுவரும் அறங்களை வகுத்திருக்கிறார். வள்ளுவர் வகுத்துள்ள துறவறம் இல்வாழ்வானும் கருதவேண்டிய மனத்துறவு தான் என்பதைக் காட்ட இதுவரையிலும் இங்கே சொல்லப்பட்ட நியாயங்களைச் சிலர் மறுத்தாலும் மறுக்கலாம். எப்படிப் பார்த்தாலும் வள்ளுவர் சொல்லுகின்ற துறவறம் வடமொழியில் வர்ணுச்சிரம முறைப்படி இல்வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம்

அனுபவித்துவிட்டுக் கிழட்டுப் பருவம் வந்தபின் வனததை நாடித் தவம் செய்யப் போகிற துறவறம் அல்லவென்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

அது எப்படி இருந்தாலும், மனிதருக்குத் துறவறத்தைவிட இல்லறம்தான் இயல்பானதென்றும் துறவறம் மேற்கொள்ளவேண்டிய தொல்லேயே இல்லாமல் மக்கள் வீடுபெற முடியும் என்பதும் திருவள்ளுவரின் தீர்ப்பு. அது :

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்

என்ற குறளில் : அறநெறியில் இல்வாழ்க்கை நடத்தினல் (இல்லறத்துக்குப்) புறம்பான துறவறத்துக்குப் போய் அடையக்கூடிய நன்மை என்ன இருக்கிறது? ஒன்றுமில்லே—என்றும்

இயல்பினு னில்வாழ்க்கை வாழ்வா னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலே

என்ற குறளில் : சரியான முறையில் குடும்ப வாழ்க்கை நடத்துகின்றவன் புலன்களே அடக்கித் தவம் செய்கிற எல்லாரினும் சிறந்தவன்—என்றும்

ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து

என்ற குறளில் : முறை தவருமல் ஒழுங்காக நடத்தித் தர்மங்களில் தவருத குடும்ப வாழ்க்கை, துறவு பூண்டு நோன்பிருந்து தவம் செய்கிறவர்களேவிடப் பெருமையுள்ளது—என்றும்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்ற குறளில் : பூலோகத்தில் வாழவேண்டிய முறைப்படி வாழ்ந்து இல்வாழ்க்கை நடத்துகிறவன் (அதற்

கென்று வேறுமுயற்சி ஒன்றும் செய்யாமலும்) வானத்தி லுள்ள தெய்வத்தோடு கொண்டுபோய்ச் சேர்க்கப் படுவான். (தெய்வத்தோடு கலந்துவிடுவான்—அதா வது பேரின்ப வீடு பெறுவான்) என்றும் சொல்லப்பட் டிருப்பதிலிருந்து உறுதியாகின்றது.

மேற்சொன்ன குறள்களில் உள்ளபடி, சரியான முறையில் குடும்ப வாழ்க்கை நடத்துகிறவன் துறவு பூண்டு தவம் செய்கிறவர்களைவிடச் சிறந்தவன் என்ற பொருளைச் சரியாகச் சொன்ன பரிமேலழகர், பின்னுல் இதற்கு முற்றிலும் முரணுன உரை செய்திருப்பது வருந்தத் தக்கது.

அந்த முரணுன உரை எங்குள தென்ருல் இல்லறப் பகுதியிலேயே 'பொறையுடைமை' என்ற அதிகாரத்தில்

துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ னோற்கிற் பவர்

என்பது ஒரு குறள். இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரை: இவ்வாழ்க்கைக்கண் நின்றேயும் துறந்தார்போலத் தூய்மையுடையார்; நெறியைக் கடந் தார் வாய் இன்னுத சொல்லைப் பொறுப்பவர்—என்பது.

இது சரியான உரை அல்ல. திருவள்ளுவர் கருதியது அதுவல்ல. பின் இந்தக் குறளுக்குச் சரியான உரை என்னவெனில்: நெறி கடந்து பேசுகின்றவர்கள் வாயிலிருந்து வருகிற வசைமொழிகளைப் பொறுத்துக் கொள்ளுகிறவர்கள் துறவிகளைவிடத் தூயவர்கள்—என்பதே. இதுதான் வள்ளுவரின் கருத்து. அது எப்படி யெனில் அடுத்த குறளில் அதை உறுதிப்படுத்துகிருர்.

உண்ணுது நோற்பார் பெரியர் பிறர் சொல்லு
மின்னுச் சொ னோற்பாரிற் பின்

இதன் பொருள்: உணவுகளை ஒடுக்கிப் பசி தாகத் தைப் பொறுத்துக் கொண்டு தவம் செய்கிற துறவிகள் பெரியவர்களே; ஆனுலும் அவர்களும் கூடப் பிறர்

சொல்லும் வசை மொழிகளைப் பொறுத்துக் கொள்ளு கிறவர்களுக்குப் பிற்பட்டவர்கள் தாம்.

இதனால் முன் குறளிலுள்ள 'துறந்தாரிற் றூய்மை யுடையர்' என்பதை 'துறந்தாரின் தூய்மை யுடையவர்' என்று பிரித்து 'துறந்தார்போலத் தூய்மையுடையார்' என்று பொருள் கொள்வது சரியானதல்ல. அச்சொற் றொடரை 'துறந்தாரில் தூய்மையுடையவர்' என்று கொண்டு 'துறந்தவர்களைவிடத் தூய்மையுடையவர்கள்' என்று பொருள் கொள்வதுதான் சரியானது. துறவி களை இல்வாழ்வானைவிடக் குறைத்துச் சொல்லக்கூடாது என்ற மரியாதையினால் பரிமேலழகர் அப்படி உரை செய்தார்போலும். ஆனால் திருவள்ளுவர் துறவிகளை யும்கூட, வசைச் சொற்களைப் பொறுத்துக்கொள்ளுகிற வர்களுக்கும் குறைந்தவர்களாகத்தான் . சொன்னார். அப்படிக் குறைத்துச் சொன்னதற்குச் சமாதானமாகத் தான்'உண்ணாது நோற்கின்ற துறவிகள் பெரியவர்கள்' என்பது உண்மைதான். ஆனால் அவர்களும்கூட வசை மொழிகளைப் பொறுத்துக் கொள்ளுகிறவர்களைவிடப் (பொறுத்துக்கொள்வது என்ற தன்மையில்) குறைந்த வர்களே'என்று அடுத்த குறளிற் சொன்னார். ஏனெனில் பசி தாகங்களைப் பொறுத்துக்கொள்வதைவிட மிகவும் கடினமானது வசைமொழிகளைப் பொறுத்துக்கொள் வது. மேலும் பசிதாகத்தைப் பொறுத்துக்கொள்வதில் தூய்மை ஒன்றுமில்லை. வசை மொழிகளைப் பொறுத்துக் கொள்ளத்தான் தூய்மையான மனம் வேண்டும்.

இந்தப் 'பொறையுடைமை' என்ற அதிகாரம் பிறர் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொண்டு இருந்து விடு வதை மட்டும் சொல்வதல்ல. பொறுத்துக்கொள்வது மட்டுமல்லாமல் அந்தத் தீமையை மன்னித்து மறந்தும் விடவேண்டும் என்பதைப் புகட்டுவது. இது இல்லறத் தான் கடைப்பிடிக்கவேண்டிய அறங்களில் மிகவும் முக்கியமானது என்பதற்காக.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்

என்று சொல்லப்பட்டது. இதன் பொருள்: நிறைந்த குணமுடையவன் என்று சிறப்பு நீங்காமலிருக்க வேண்டுமானுல் ஒருவன் பொறையுடைமை என்ற ஒழுக்கத்தைப் பாதுகாத்து நடந்து கொள்ளவேண்டும்— என்பது.

இப்படி யெல்லாம் நெறி தவருமல் நடத்தப்படுகிற இல்லறம் 'அறத்தாற்றின் ஆற்றும் இல்வாழ்க்கை' என்றும் 'இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பவனுடைய இல்வாழ்க்கை' என்றும், ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை' என்றும், 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் இல்வாழ்க்கை' என்றும் முன் நான்கு குறள்களிலும் குறிப்பிடப்பட்டபடி துறவற வாழ்க்கையினும் சிறந்தது. ஆகையினுல் 'துறந்தாரிற் றூய்மையுடைய ரிறந்தார் வாய் இன்னுச்சொல் நோற்கிற்பவர்' என்ற குறளுக்கு நெறிகடந்து பேசுகின்றவர் வாயினின்றும் வருகிற வசைச் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுகிறவர்கள் இல்லறத்தில் இருந்தாலும் துறந்தவர்களைப் போலத் தூய்மை யுடையவர்கள்' என்று பொருள் சொல்வது திருக்குறளின் நோக்கத்துக்கு முற்றும் முரணுனது. அவர்கள் துறவிகளைவிடச் சிறந்தவர்கள் என்பதே திருக்குறளின் நோக்கத்துக்கு ஒத்தது.

## சொல்லாட்சி

திருவள்ளுவருடைய சொல்லாட்சி மிகுந்த நயமுடையது. சொல்லாட்சி யென்ருல் சொற்களைப் பிரயோகம் செய்வது

திருவள்ளுவர் ஒரே சொல்லை வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அர்த்தத்தில் பிரயோகப்படுத்தியிருக்கிருர். அப்படிப் பிரயோகப்படுத்தியிருக்கிற சில இடங்களில் உரையாசிரியர்கள் ஒரே விதமான அர்த்தம் செய்து, அக்குறள்களின் பயன் குறைந்து போயிருப்பதும் குறிக்கத் தக்கது. ஒரே சொல் வெவ்வேறு இடங்

களில் வெவ்வேறு பொருளில் நிற்பதற்கு உதாரண மாக, 'உயிர்' என்ற பதத்தைச் சொல்லுவோம்:

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு

இதன் பொருள்: உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு, முட்டையின் ஓட்டினைத் தனியே விட்டுவிட்டு பறவைக் குஞ்சு பறந்து போய்விடுவதைப் போன்றது தான்—என்பது. அதாவது பறவைக் குஞ்சானது தான் இருந்த வீடாகிய முட்டைக் கூட்டை உடைத்துச் சிதைத்து விட்டு அதினின்றும் பறந்து விடுவது போல மனிதனுடைய உயிரும் தான் தங்கி யிருந்த உடம்பைச் சிதைத்து விட்டு ஓடிப்போகிறது. இந்தக் குறளில் 'உயிர்' என்பதற்கு வெறும் 'ஜீவன்' அல்லது 'ஆவி' என்பது பொருள். இனி,

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

இதன் பொருள்: எல்லா மனிதர்களும் பிறப்பில் சமான மானவர்கள்தாம். ஆனால் அவரவர்கள் செய்கிற காரி யங்களின் வேற்றுமையால் சிறப்பு ஒரே மாதிரியாக இருக்காது—அதாவது ஒவ்வொரு மனிதனும், மனிதன் என்ற முறையில் மற்ற மனிதர்களுக்குச் சமானம்தான். ஆனால் எல்லா மனிதரும் ஒரேவிதமாகச் சிறப்படைந்து விட முடியாது. அது அவனவனுடைய காரியத் திறமைக்குத் தக்கபடிதான் கிடைக்கும். இந்தக் குறளில் 'உயிர்' என்பதற்கு 'மனிதன்' என்று பொருள். இந்தக் குறள் மனிதனைப் பற்றிய 'பெருமை' என்ற அதிகாரத் தில் உள்ளதால் அதிலுள்ள சூழ்நிலையில் 'உயிர்' என்ப தற்கு 'மனிதன்' என்று மட்டுந்தான் பொருளாகும். ஆனால்,

மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை

என்ற குறளில், உலகத்திலுள்ள பிற உயிர்களைக் காத்து ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்து வாழ்கின்றவன்

தன்னுயிரைப் பற்றிக் கவலை கொள்ளமாட்டான்— என்று சொல்லப்படுகிறது. இங்கே 'உயிர்' என்பதற்கு உலகத்திலுள்ள எல்லா 'உயிர்ப்பிராணிகளும்' என்று அர்த்தம். இந்த உதாரணம், எப்படி 'உயிர்' என்ற ஓரே சொல்லுக்கு மூன்று வேறுபட்ட சூழ்நிலைகளில் மூன்று வேறுபட்ட பொருள் கொள்ளவேண்டிருக் கிறது என்பதைக் காட்டுவதற்கு மட்டும்தான் சொல்லப் பட்டது. இந்த இடங்களில் உரையாசிரியர்கள் சரி யாகவே உரை செய்திருக்கிறார்கள். அவர்கள் தவறு செய்திருப்பது வேறு இடங்களில் அதற்கு உதாரணம்:

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

என்ற குறள் 'அவையஞ்சாமை' என்ற அதிகாரத்தில் உள்ளது. அவையஞ்சாமை என்பது கல்வியாளன் சபையைக் கண்டு பயந்து விடாமல் பேச வேண்டும் என்பதையும் அப்படி அவன் சபையில் பேசும்பொழுது அவன் சொல்லுகிற எதற்காவது யாரேனும் ஆட்சேபம் செய்து, தர்க்கம் ஏற்பட்டால் அதனால் குலைந்து போகாமல் விடை சொல்லி விளக்க வேண்டிய அச்ச மின்மை இருக்கவேண்டும் என்பதையும் புகட்டுவது. கற்றவர்கள் கூடிய சபையில் பேசும்போது சபையைக் கண்டு நடுக்கம் வந்து விடுவதும், எதிர்ப்பு வந்தால் குலைந்து போவதும் நல்ல படிப்பாளிகளுக்கும் உண்டு. சபைக்கஞ்சாமல் பேசத் தெரிவதும் தர்க்கம் ஏற்பட்டால் அதற்காக அச்சமோ பதற்றமோ முரட்டுத் தனமோ இல்லாமல் பதில்சொல்லுவதும் எல்லார்க்கும் எளிதான தல்ல. அந்தத் திறமையில்லாத படிப்பாளி பயனற்றவன் என்பதையும் அதனால் படித்தவன் சபை நடுக்க மில்லாமல், தான் கற்றதைப் பிறருக்குச் சொல்லத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் வலி யுறுத்துவது இந்த 'அவையஞ்சாமை' என்னும் அதி காரம். இது முழுதும் கற்றவன் பேசவேண்டிய முறை யைப்பற்றியது என்பதை மனதில் வைத்துக் கொண்டு பின் வருவதைக் கவனிக்கவேண்டும்.

மேற்சொன்ன குறளுக்குப் பரிமேலழர் செய் திருக்கிற உரை: 'சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க; வேற்று வேந்தர் அவையிடை அஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரம் சொல்லுதற் பொருட்டு—என்பது. இந்த உரை இந்த அதிகாரத்தில் வள்ளுவர் கருதியிருக்கிற நோக்கத்துக்குப் பொருந்துகிறதா பாருங்கள். கல்வி கற்றவன் சபைக்கஞ்சாமல் பேசத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைமட்டும் சொல்ல வந்த இவ்வதி காரத்தில் 'வேற்று வேந்தருக்கும்', 'அமைச்சருக்கும்' என்ன வேலை?

மேலும் 'அளவறிந்து கற்க' என்பதில் 'அறிந்து' என்று சொன்ன பிற்பாடு 'கற்பது' எதற்கு? கற்பது அறிந்து கொள்ளத்தானே? அறிந்து கொண்டபின் எதைக் கற்பது? அத்துடன் கல்வி கற்றவன், தான் கற்றதைச் சபையில் சொல்லும் போது நடந்துகொள்ள வேண்டியதைக் கவனிக்க வேண்டியதை மட்டும் சொல்லுகிற இந்த அதிகாரத்தில், அவன் பேசுவதற்குச் சபையில் இருக்கிற சமயத்தில் அவனுக்குக் கற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் எங்கே? அளவை நூலைக் கையில் வைத்துக்கொண்டு அதைப் பார்த்துப் பேச முடியுமா?

கற்றவன் பேசத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது மட்டுந்தான் இந்த அதிகாரம் சொல்லுகிறது. சிரமத்தைப் பாராட்டாமல் இந்த அதிகாரத்திலுள்ள எல்லாக் குறள்களையும் பார்ப்போம்.

(1) வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

இதன் பொருள்: தொகுத்துச் சொல்லத் தெரிந்த சுத்தமான பேச்சாளர்கள் சொல்லவேண்டிய விஷயத்தின் வகையை அறிந்து, கல்வியில் வல்லவர்கள் கூடிய சபையில் சபையைக் கண்டு பயந்து வாய்குளறிப் பேசி விட மாட்டார்கள்—என்பது.

(2) கற்ருருட் கற்ரு ரெனப்படுவர் கற்ருர்முன்
கற்ற செலச்சொல்லு வார்

இதன் பொருள்: கற்றவர்க்கு முன்ஞல் தாம் கற்ற கல்வியறிவை, கற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி சொல்ல வல்லவர்கள்தாம் கற்றவர்கள் என்று சொல்லத் தகுந்தவர்கள்—என்பது

(3) பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்

இதன் பொருள்: யுத்த களத்துக்குச் சென்று அஞ்சாமல் இறந்து போகிறவர்கள் பலபேர் உண்டு; ஆனல் சபையில் நடுக்கமில்லாமல் பேசக் கூடியவர்கள் வெகு சிலரே—என்பது.

(4) கற்ருர்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்

இதன் பொருள்: கற்றவர்கள் சபையில் தாம் கற்றதைச் சபையோர் ஏற்றுக்கொள்ளும்படி சொல்லி, தம்மை விடக் கல்வியில் மிகுந்தவர்கள் தாம் அறியாததைச் சொன்னல் அதை ஒப்புக்கொள்ளவேண்டும்—அதாவது தம்மைவிட அதிகமாகக் கற்றவர்கள் தாம் சொன்னதில் ஏதேனும் குற்றம் கண்டால் (அவையஞ்சாமைக்காக) அதை எதிர்த்து வாதாடாமல் நியாயமானதை ஒப்புக் கொள்ள வேண்டும்—என்பது.

(5) ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

இந்தக் குறள்தான் இப்போது ஆராயப்படுவது. இதன் பொருளை மற்றுமுள்ள குறள்களையெல்லாம் பார்த்து விட்டுத் தீர்மானிப்போம்.

(6) வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை யஞ்சு பவர்க்கு

இதன் பொருள்: பகைவரைக் கண்டு அஞ்சும் தைரியம் இல்லாதவர்களுக்கு வாளாயுதத்தோடு என்ன வேலை? அதைப்போல அறிவுடையவர் கூடியுள்ள சபையைக் கண்டு அஞ்சும் கோழைகளுக்குக் கல்வியறிவு நூல்களோடு என்ன வேலை ?—என்பது.

(7) பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்

இதன் பொருள்: சபையைக் கண்டு நடுங்குகின்றவன் கற்ற கல்வி நூல்கள், பகைவரைக் கண்டு நடுங்குகிற பேடியின் கையிலுள்ள கூரிய வாளாயுதத்துக்குச் சமானந்தான்—பகைவரைக் கண்டு அஞ்சுகிற கோழையின் கையில் எவ்வளவு கூர்மையான வாள் இருந்தாலும் என்ன பயன்? அதைப்போல சபையைக் கண்டு பயந்து, பேசத் தடுமாறுகின்றவன் எவ்வளவு நூல்களைக் கற்றிருந்தாலும் என்ன பயன் ?—என்பது.

(8) பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்

இதன் பொருள்: நல்ல அறிவுடையவர்கள் கூடிய சபையில் அச்சபையிலுள்ளோர் ஏற்றுக்கொள்ளும்படி நன்ருகச் சொல்ல முடியாதவர்கள் பல நூல்களைப் படித்தறிந்தவர்களாக இருந்தாலும் பயனற்றவர்களே—என்பது.

(9) கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்

இதன் பொருள் : கல்வி கற்று அறிவுடையவர்களாக இருந்தும் நல்ல கல்வியறிவுள்ளவர்கள் கூடியுள்ள சபையில் பேச அஞ்சுகின்றவர்கள் கல்வியே இல்லாதவர்களைவிடத் தாழ்ந்தவர்களாகத்தான் கருதப்படுவார்கள்—என்பது.

(10) உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்

இதன் பொருள்: சபையைக் கண்டு பயந்து தாம் கற்றுள்ள கல்வியறிவைச் சபையோர் ஏற்றுக் கொள்ளும்படி சொல்லமாட்டாதவர்கள் இருந்தும் இல்லாததற்குச் சமானமே—என்பது.

உரை சொன்ன ஒன்பது குறள்களும், ஏற்கெனவே கற்றுள்ள ஒருவன் சபையைக் கண்டு நடுங்கிப் பேச முடியாதவனுக இருப்பதைப் பற்றிச் சொல்லுகின்றனவேயல்லாமல் எதையாவது இனிமேல் கற்கவேண்டும் என்பதைப்பற்றிச் சொல்லுகின்றனவா என்று பாருங்கள். மேலும் இந்தக் குறள்களில் எங்கேனும் மறைமுகமாகவேனும் அமைச்சனேயோ வேற்று வேந்தரையோ வருவித்தும் பொருள் கொள்ளவேண்டிய நியாயமோ அவசியமோ இருக்கின்றனவா என்றும் பாருங்கள். பின் ஏன் இந்த:

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

என்ற குறளுக்கு; வேற்று வேந்தர் அவையிடை அஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தரம் சொல்லுதற் பொருட்டு சொல்லிலக்கண நெறியானே அளவை நூலை அமைச்சர் உட்பட்டுக் கற்கவேண்டும்—என்று பரிமேலழகர் உரை சொல்லியிருக்கிருர்? இந்த அதிகாரத்தில் முன் சொல்லப்பட்ட குறள்களில் கூறப்படுகிற சபை வேற்றரசரின் சபையா? அல்லவே அல்ல. இந்த அதிகாரத்திற் சொல்லப்படுவது கற்றறிந்தோர் கூடிய சபை மட்டும்தான். அரசன் சபையுமல்ல; வேற்றரசன் சபையுமல்ல. அன்றியும் சபையில் அஞ்சாமல் பேசுவதற்கு என்று, கற்றுக் கொடுக்கக்கூடிய 'சொல்லிலக்கண நெறியானே அளவை நூல்' என்ற பேசக் கற்றுக் கொடுக்கிற நூல் ஒன்றுமில்லை.

ஏன் இந்தத் தடுமாற்றமான உரை ஏற்பட்ட தென்ருல் இந்தக் குறளிலுள்ள 'கற்க' என்ற பதத்திற்கு அது சொல்லப்பட்டிருக்கிற சூழ்நிலையைக் கருதிப் பொருள் கொள்ளாமற் போனதனுல்தான். 'கற்க' என்ற பதத்துக்கு 'கல்வி கற்றுக்கொள்' என்ற ஒன்று மட்டும் பொருளல்ல. 'கற்க' என்ற பதத்திற்குச் 'சொல்லுக' அல்லது 'பேசுக' என்ற பொருளும் உண்டு.

அந்தப் பொருளே அமைத்துப் பொருள் செய்வோம். இந்தக் குறளுக்கு வசன நடை : அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற் பொருட்டு ஆற்றின் அளவு அறிந்து கற்க. இப்போது பொருள் என்னவென்ருல்; சபைக்கு அஞ்சாமல் எதிர்மாற்றம் கொடுப்பதற்காக நெறிமுறையின் அளவை அறிந்து பேசுக—என்கிறது.

இதற்குக் கொண்டு கூட்டிச் செய்யவேண்டிய சரியான அர்த்தம் என்னவென்ருல்: சபையில் தர்க்கம் நேரிடுகிறபோது எதிர்வாதம் பேசுகிறவருக்கு அஞ்சாமல் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக நெறி தவறிப் பேசிவிடாமல் ஒழுக்க முறையால் எவ்வளவு பேசவேண்டுமோ அந்த அளவறிந்து பேசுக— என்பதே.

இதற்கு முந்திய குறளில் ஒரு எச்சரிக்கை செய்தார். இந்தக் குறளில் ஒரு எச்சரிக்கை செய்கிருர். இதற்கு முந்திய குறளில் :

> கற்ருர்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
>
> மிக்காருண் மிக்க கொளல்

என்று; கற்றறிந்தவர் கூடியுள்ள சபையில் தாம் கற்றவைகளே அச் சபையார் ஏற்றுக்கொள்ளும்படி சொல்லி, தம்மினும் கற்றவர்கள் தாம் சொன்னதில் குற்றங் கண்டு சொன்ஞல் தம்மினும் கல்வி மிகுந்தவர் சொல்லுகின்ற நியாயத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்—

என்று எச்சரித்தார். அதாவது அவை யஞ்சாமல் பேச வேண்டும் என்பதற்காகத் தம்மினும் கல்வி யறிவுடையார் சொல்லுவதை மறுத்து விதண்டா வாதம் செய்யக் கூடாது என்பது கருத்து.

இனி இந்தக் குறளில் அந்த எதிர்வாதம் பேசுவதைத் தொடர்ந்து, சபைக்கு அஞ்சாமல் பேச வேண்டும் என்பதற்காக நெறி முறை தவறிப் பேசிவிடாமல் அளவோடு பேசவேண்டும் என்று எச்சரிக்கிறார்.

இனி, 'கற்றல்' என்ற பதத்திற்கு 'சொல்லுதல்' என்ற பொருள் உண்டு என்பதற்கு ஒரு நல்ல உதாரணம் காட்டுவோம் :

இராமனுக்கும் இராவணனுக்கும் கடைசிச் சண்டை ஆகாயத்தில் நடக்கிறது. இராவணன் தரையில் இருந்து இராமனுடன் போர்புரிய முடியாமல் தன்னுடைய புட்பக விமானத்தில் ஏறிக்கொண்டு ஆகாயத்தினின்றும் பாணங்களைப் பொழிகின்றான். உடனே இராமன் இந்திரனுடைய புட்பக விமானத்தை இரவல் வாங்கிக்கொண்டு தானும் ஆகாயத்தில் சென்று போர் புரிகின்றான். இராமனுடைய பாணம் இராவணனுடைய மார்பில் ஊடுருவிச் சென்று அவனைக் கொன்றுவிடுகிறது. இராவணன் புட்பகத்திலிருந்து பூமியில் விழுந்து விடுகிறான். இராமனும் விமானத்தை இறக்கி இராவணனுடைய உயிர்போன உடலைக் கண்டு அதன் அழகையும் கம்பீரத்தையும் முகப் பொலிவையும் 'காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணாளன் தெரியக் கண்டான்' என்று கம்பன் செல்லுகிறபடி பார்த்தான். உடனே இராமனுக்கு இரக்கமும் வெட்கமும் வந்து, இராவணனைக் கொன்று விட்டதற்குத் தன்னைத் தானே நொந்து கொள்ளுகிறான் : "விபீஷணா! இவனைக் கொன்றதனால் இவன் ஆண்ட மூன்று லோகத்தையும் நாம் வெற்றியால் அடைந்துவிட்டோம் என்பது உண்மையானாலும் இவனைக் கொன்றதனால்,

புறங்கொடுத்து ஓடி முதுகில் அடி வாங்கின தழும்புள்ள வனைப்போல் நான் வெட்கப்படுகிறேன். இவனைக் கொல்லாமல் சிறை பிடித்திருந்தால் இவனுக்கும் புத்தி சொல்லி இவனையும் நல்லவனுக்கி யிருக்கலாம். கார்த்த வீரியன் என்ற ஒருவன் சிறைபிடித்துக் கட்டிப்போட் டிருந்த இவனை நான் கட்டிப்போட முடியாமல் கொன்று விட்டது எனக்கே வெட்கமாக இருக்கிறது. ஆகையினுல் நான் போரில் புறமுதுகிட்டு ஓடி முதுகில் அடிபட்ட தழும்புள்ள வனைப்போல் ஆகிவிட்டேன்"—என்று ஏங்குகிருன். இந்தக் கருத்தைக் கம்பன் :

''காரித்த வீரியனென்பானுல் கட்டுண்டா னென்னக் கற்கும்
வார்த்தையுண்டு; அதனைக் கேட்டு நாணுறும்
மனத்தினேற்குப்
போர்த்தொழில் பிறகிட்டேற்ற புண்ணுடைத்
தழும்புபோலாம்''

என்ற பாட்டில் சொல்லுகிருன். இதன் பொருள் இந்த இராவணன் கார்த்த வீரியன் என்பவனுல்(சிறைப் படுத்தப்பட்டு) கட்டுண்டான் என்று சொல்லும் வார்த்தை உண்டு. அதனைக் கேட்டு வெட்கப்படுகிற மனமுடையவனை எனக்கு இவனைக் கொன்றுவிட்டது போரில் முதுகிட்டு ஓடி அடிபட்ட புண்ணினு லுண்டான தழும்பைப் போன்றதே யாகும்—என்பது.

இதில் 'கட்டுண்டான் என்னக் கற்கும்' என்பதற்கு 'கட்டுண்டான் என்று சொல்லுகிற' என்பது பொருள். "கற்கும் வார்த்தயுண்டு அதனைக் கேட்டு" என்பதி லுள்ள 'அதனைக் கேட்டு' என்ற சொற்ருேடர் 'சொன்ன வார்த்தையைக் கேட்டு' என்ற பொருளை அழுத்தமாகக் காட்டுகிறது. எனவே 'கற்றல்' என்பதற்குச் 'சொல்லு தல் என்ற பொருள் உண்டு. இங்கே 'கட்டுண்டான் என்னக் கற்கும்' என்பதற்கு 'கட்டுண்டான் என்று கற்றுக்கொள்ளுகிற' என்று பொருள் சொன்னுல் பொருந்தாது. ஏனென்ருல் கற்றுக் கொள்ளுகிறதைக்

கேட்க முடியாது. சொல்லுவதைத்தான் கேட்க முடியும்.

இன்னொரு குறளில் உள்ள இதே 'கற்றல்' என்ற பதத்திற்கும் இப்படியே பொருந்தாத உரை செய்யப்பட்டிருப்பதைப் பாருங்கள் :

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதல் மாணர்க் கரிது

என்ற குறள் 'கூடா நட்பு' என்ற அதிகாரத்தில் உள்ளது 'கூடா நட்பு' என்பது சேர்த்துக்கொள்ளக் 'கூடவே கூடாது' என்ற முன்னெச்சரிக்கையுடன் விலக்கிவிட வேண்டிய கபடமானவர்களின் உறவு. முதலில் 'நட்பு' என்பதற்கு ஒரு அதிகாரம் சொல்லி, அதில் நல்ல நண்பர்கள் இருக்கவேண்டிய அவசியத்தையும்அப்படிப் பட்ட நட்பின் பெருமையையும் பயனையும் சொன்னார். பின் யாரோடும் நட்புகொள்ளுமுன் அவர்களைத் தீர ஆராய்ந்து பிறகு நம்பவேண்டும் என்பதற்காக 'நட்பாராய்தல்' என்று ஒரு அதிகாரம் சொன்னார். அதன் பிறகு 'பழமை' என்ற ஒரு அதிகாரத்தில் விலக்கிவிட முடியாதபடி பழகிவிட்ட பழைய நண்பர்களிடத்தில் தாட்சணியம் காட்டவேண்டியிருப்பதைப் பற்றிச் சொன்னார். அதன் பின் 'தீநட்பு' என்ற ஒரு அதிகாரம் வகுத்து, அதில் ஆராயாமல் செய்துவிட்ட நட்பு தீய குணமுள்ளதாக இருப்பதை அறிந்தபின் அதைச் சிறுகச் சிறுகவேனும் விட்டு விலகிவிட வேண்டும் என்பதைச் சொன்னார். கடைசியாகக் 'கூடா நட்பு' என்பதில் இதுவரையிலும் பகைவனாக இருந்த ஒருவன் திடீரென்று நட்புக் கொண்டாட வந்தால் அவனைச் சேர்த்துக் கொள்ளவே கூடாது என்பதை விளக்குகிறார். இந்த அதிகாரத்தின் முதற் குறள் :

(1) சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

இதன் பொருள் : இதுவரையும் பகைவராக இருந்து, திடீரென்று உறவு கொண்டாட வருகின்றவர்களை

உடனே நண்பராக ஏற்றுக்கொண்டு நம்பிவிட்டால் அச்செயல் தக்க தருணம் வாய்த்த போது அவர்கள் உன்னை வைத்து நசுக்கிவிடக்கூடிய பட்டடைக்கல் போன்றது—என்பது.

(2) இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

இதன்பொருள் : சினேகரைப் போல நடிக்கும் சிநேகர் அல்லாதவர்களுடைய உறவு, மனைவியைப்போல நடிக்கும் மனைவியல்லாத வேசியின் மனம்போல் வேறு வஞ்சக நோக்கமுள்ளதாக இருக்கும்—என்பது.

(3) பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க் கரிது.

இதுதான் ஆராயவேண்டிய குறள். இதற்குப் பரிமேலழகர் சொல்லுகின்ற உரை : நல்ல பல நூல்களைக் கற்ற விடத்தும் அதனுல் மனம் திருந்தி நட்பாதல் பகைவர்க்கில்லை—என்பது. இந்த உரை இங்கே பொருந்துவதுபோலத் தோன்றினுலும் திருவள்ளுவர் சொல்லுவது அதுவல்ல. இங்கே பகைவனுடைய கல்வி, கல்வியின்மையைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமேயில்லை. இங்குள்ள 'கற்றக் கடைத்தும்' என்பதற்குக் 'கல்வி கற்றிருந்தாலும்' என்ற பொருள் கொண்டு விட்டதால் இப்படித்தான் உரை சொல்ல வேண்டியதாயிற்று. இந்த 'கற்றக் கடைத்தும்' என்பதற்கு 'சொன்னவிடத்தும்' என்று பொருள் கொண்டால் எவ்வளவு நல்ல பொருள் கிடைக்கிறது என்பதைப் பாருங்கள் :

பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்ல
ராகுதல் மாணார்க் கரிது.

பல நல்ல வார்த்தைகளைச் சொன்னுலும் (உறவு கொண்டாட வந்த) பகைவர் நல்ல மனதுடன் வந்திருப்பார்கள் என்பது இருக்கமுடியாது—என்ற பொருள்

கிடைக்கிறது. அதாவது இதுவரைக்கும் பகைவராக இருந்து திடீரென்று நட்புக்கொண்டாட வருகிறவர்கள் எவ்வளவு நல்ல விஷயங்களை எவ்வளவு இனிமையாகச் சொன்னாலும்கூட அவர்கள் நல்ல எண்ணத்தோடு வந்திருக்கமுடியாது என்ற எச்சரிக்கை கொள்ளவேண்டும் என்பது கருத்து. வள்ளுவர் இதைத்தான் சொல்லுகிறார் என்பது பின்வரும் குறளால் உறுதிப்படுகிறது.

(4) முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.

இதன் பொருள்: (பகைவராக இருந்து திடீரென்று நட்புக்கொண்டாட வருகிறவர்கள்) முகத்தளவில் இனிமையாக சிரித்துப் பேசினாலும் அவர்கள் மனதில் வஞ்சக எண்ணத்தோடுதான் வந்திருக்கிறார்கள் என்பதை சந்தேகித்து எச்சரிக்கை கொள்ளவேண்டும் என்பது. இதிலுள்ள 'முகத்தினிய நகாஅ' என்பதற்கு 'இனிய முகத்தோடு சிரிப்பது' என்பது மட்டும் பொருளல்ல. 'இனிய முகத்துடன் சிரித்துப்பேசி' எனபது பொருள். மேலும் இதிலுள்ள 'அஞ்சப்படும்' என்பதற்கு 'பயப்படவேண்டும்' என்பது பொருளல்ல. 'சந்தேகிக்க வேண்டும்' என்பதே பொருள். ஆனால் வெறும் சந்தேகமல்ல, சிறிது அச்சமும் கலந்த சந்தேகம். அடுத்த குறள்:

(5) மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று

இதன் பொருள்: (திடீரென்று நட்புக்கொண்டாட வரும் பகைவர்) மனப்பொருத்தம் இல்லாதவரை அவர்கள் எப்படிப் பேசினாலும் அவர்கள் சொல்லும் வார்த்தைகளைக்கொண்டு நம்பவிடக்கூடாது—என்பது. அடுத்த குறள்:

(6) நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்

இதன் பொருள் (அவர்கள்) நண்பர்களைப் போலவே நல்ல வார்த்தைகளைப் பேசினாலும் அவர்கள் பகைவராக இருந்தவர்களானதால் அவர்கள் சொல்லுவதன் நோக்கத்தை விரைவில் உணர்ந்துகொள்ள முடியும்—என்பது. மேலும்:

(7) சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க
[வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.

இதன் பொருள்: வில் வணங்குவது அம்பை விட்டுக் கொல்லுவதற்குக் குறி வைத்துத்தான்; அதுபோல் மனதில் பகைமையுள்ளவர்கள் (பின்னால் ஒரு தீமையைச் செய்யும் குறியுடன்) வணங்கியும் பேசுவார்கள். அந்த வணக்கத்தை நம்பிவிடக் கூடாது—என்பது.

மேற்சொன்ன குறள்களால் 'பலநல்ல கற்றக் கடைத்தும் மனம் நல்லராகுதல் மாணார்க்கு அரிது' என்ற குறளில் உள்ள 'பலநல்ல கற்றக் கடைத்தும்' என்பதற்கு 'பல நல்லவைகளைச் சொன்னபோதிலும்' என்பதுதான் வள்ளுவர் கருதும் பொருள் என்பது தெளிவாகிறது.

## பெண் குலத்தை இழிவுபடுத்தல்

சில இடங்களில் பெண் மக்களை ஆண்களுக்கு மட்டமானவராக இழிவுபடுத்திப் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் பெண் பிறவி ஆண் பிறவியைவிடத் தாழ்ந்ததாகக் கருதுகிறார் என்று சொல்லத் துளிகூட இடமில்லை. இல்வாழ்க்கை நன்றாக நடந்து சமுதாயம் சமாதானமாக வாழவேண்டும் என்பதற்காகக் கற்புடைய பெண்கள் கணவனுக்கு அடங்கி நடப்பார்கள் என்பது முற்றிலும் வேறான விஷயம். அது பெண் மக்கள் தாமாகவே ஆண்

களுக்குக் கீழ்ப்படிந்து இல்லறத்தின் அதிகாரத்தைக் கணவனுக்கே உரிமையாக்கி அவனுக்குத் துணை புரிவது. அது ஆண் மக்கள் பெண் மக்களை மட்டமாகக் கருதுகிற காரணத்தால் நடப்பதல்ல. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள இயற்கை வேறு பாடுகளைத் தவிர சமுதாய வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சரி சமானமானவர்கள் என்பதே வள்ளுவருடைய உள்ளம். அது, பெண் ஆணுக்கு 'வாழ்க்கைத் துணை' என்று வள்ளுவர் பெயரிட்டிருப்பதிலிருந்தே நிச்சயமாகின்றது. 'துணை' என்பது 'உதவி' என்ற பொருளில் மட்டும் சொல்லப்பட்டதல்ல. ஒருவருக்கொருவர் இணை என்ற பொருளும் தருவது. இணை என்பது சமானம்—'துணைப்பதம்' என்றால் ஒன்றுக்கொன்று சமானமான தாக ஒரே காரியத்தைக் சேர்ந்து செய்யும் இரண்டு கால்கள் என்பது பொருள். அதைப்போலவே 'துணை' என்ற பதம் ஓரே காரியத்தைச் சேர்ந்து செய்கிற சமமான இரண்டு பொருள்கள் சேர்ந்த ஒரு ஜோடியைக் குறிக்கும். 'வாழ்க்கைத் துணை' என்றால், குடும்ப வாழ்க்கை நடத்துவதற்குப் பிரிக்க முடியாத ஆணும் பெண்ணுமான ஒரு ஜோடியின் சமபாதியான பெண் என்பது அர்த்தம்.

ஆமாம், திருவள்ளுவர் ஆணும் பெண்ணும் சரி சமானம்தான் என்று கருதினால் ஆணுக்குத்தானே பெண்ணை 'வாழ்க்கைத் துணை' என்று சொல்லுகிறார்? அதைப்போல பெண்ணுக்கு ஆணை 'வாழ்க்கைத் துணை' என்று கருதும்படி ஒரு இடத்திலும் சொல்லவில்லையே!—என்ற எண்ணம் உதிக்கலாம். ஏன் அப்படிச் சொல்லவில்லை யென்றால்: வாழ்க்கை என்று சொன்னது குடும்ப வாழ்க்கை மட்டுமல்ல. குடும்பம் நடத்தப் பொருள் தேடவேண்டும். பொருள் தேட வேறு ஊர்களுக்கும் வேறு நாடுகளுக்கும் போக நேரும். அத்துடன் நாட்டைக் காக்கப் போர் புரியவும் நேரும். அந்தப் பொறுப்புகளெல்லாம் ஆணை மட்டும்தான் சேர்ந்தவை என்பதும் அந்தப் பொறுப்புகளால் வரக்கூடிய துன்பங்களுக்குப் பெண்களை ஆளாக்கக் கூடா

தென்பதும் தமிழ் மரபு. வீட்டோடிருந்து, மக்களைப் பெற்று, விருந்தினரை உபசரித்து, ஏழைகளுக்கு உதவி, மனையறம் காக்க வேண்டிய மங்கலப் பொருளாக மாதரைக் கருதுவதே தமிழ் வழக்கு. எனவே, ஆண் நடத்துகின்ற உலக வாழ்க்கைக்குப் பெண் துணையாக இருக்கிறாள் என்பதுதான் முறை. இந்தக் காலத்தில் பொருள் தேட வெளியூர் போகிற பெண்களும் உண்டு. போர் முனைக்குப் போய் குழந்தைகளைக் குறி பார்த்து குண்டு போடுகின்ற பெண்களும் இருக்கலாம். இதெல்லாம் ஆணுக்கென்றும் பெண்ணுக்கென்றும் இறைவனோ அல்லது இயற்கையோ விதித்துள்ள இயல்புகளுக்கு விரோதமானவை. அதனால் உலக வாழ்க்கை நடத்தவேண்டிய பொறுப்புடையவன் ஆண்தான். அவனுக்கு உட்பட்டவளாக வீட்டோடிருந்து அவனுக்குத் துணை புரியவேண்டியது பெண்தான். இதுதான் திருவள்ளுவர் கருதுகின்ற வாழ்க்கைத் துணையும், அந்த வாழ்க்கை துணை, நலமாக அமைந்தால்தான் மற்றதெல்லாம். இந்த வாழ்க்கையும் ‘வாழ்க்கைத் துணை’ எனப்படுகிற பெண் பொதுவான அறிவுகளிலோ அல்லது தன் வீட்டுக் கடமைகளைச் செய்யும் ஆற்றலிலோ ஆணுக்குக் குறைந்தவளாக இருப்பவளல்ல. அப்படியிருந்தால் அவள் சரியான துணையாக முடியாது. பகலும் இரவும் போல ஆணும் பெண்ணும் வெவ்வேறு இயல்புடையவர்கள். பகலும் இரவும் சேர்ந்ததுதான் ஒரு நாள். அப்படியே ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. இயற்கையால் விதிக்கப்பட்ட வேறுபாடுகளைத் தவிர ஆணுக்குப் பெண் அறிவிலோ ஆற்றலிலோ குறைந்தவளாக வள்ளுவர் சொல்லவில்லை. அப்படியிருக்கச் சில குறள்களில் ஆணுக்குப் பெண் தாழ்வுடையவளாகத் திருவள்ளுவர் சொல்லியிருப்பது போல உரை செய்திருப்பது வள்ளுவர் பெருமைக்கு அநீதி செய்வதாகிறது. உதாரணமாக ‘மக்கட் பேறு’ அல்லது ‘புதல்வரைப் பெறுதல்’ என்ற அதிகாரத்தின் முதற் குறளாகிய :

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

என்ற குறளுக்குப் பரிமேலழகர் சொல்லும் உரை: 'ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவன அறி தற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை' என்பது பத உரை. இதில் 'அறிய வேண்டுவன அறிதற்குரிய' என்றதிலுள்ள 'உரிய' என்ற பதம் குறிப்பிடத் தகுந்தது. மேலும் இதற்கு விசேட உரையாக: 'அறிவதென்பது அறிதலைச் செய்வ தென அத்தொழின்மேல் நின்றது. காரணமாகிய உரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தே விடுமாதலான், அத்துணிவு பற்றி 'அறிந்த'வென இறந்த காலத்தாற் கூறினார். 'அறிவறிந்த' எனறதனால் 'மக்கள்' என்னும் பெயர் பெண் ஒழித்து நின்றது'—என்று விளக்கம் சொல்லுகிறார். இதனால், அறிய வேண்டியவற்றை அறிந்து கொள்ள ஆண்களுக்குத்தான் உரிமை உண் டென்றும் அவ்வுரிமை பெண்களுக்கு இல்லை யென்றும் அதனால் ' அறிவறிந்த மக்கள் ' என்பதற்குப்—'பெண் ஒழித்த—ஆண் மக்கள் ' மட்டும்தான் என்பது பொருள் என்றும் சொல்லுகிறார். அப்படியானால் ' புதல்வரைப் பெறுதல் ' என்ற அதிகாரப் பெயருக்குப் பொருளே 'ஆண் மக்களைப் பெறுவது ' என்றுதான் பொருளாகும். அப்படிப் பொருள் காட்டுவதற்கு எளிதாக இருக்க வேண்டுமென்றுதான் ' மக்கட் பேறு ' என்ற பெயருள் ளதாக வள்ளுவர் எழுதியிருக்கிற இந்த அதிகாரத் துக்குப் ' புதல்வரைப் பெருதல் ' என்று பெயர் மாற்றப் பட்டு விட்டதோ என்ற திடமான சந்தேகத்துக்கும் இடமாகின்றது. ஏன் எனில் ' புதல்வர் ' என்ற பதத்தை இந்த அதிகாரத்தில் எந்த இடத்திலும் வள்ளுவர் பிர யோகிக்க வில்லை. அவர் ' மக்கள் ' என்ற பதத்தைத்தான் பிரயோகித்திருக்கிறார். அதனால் அவர் ' மக்கட்பேறு' என்றுதான் இந்த அதிகாரத்துக்குப் பெயரிட்டிருந்தார் என்பது மிகவும் நியாயமான ஊகம். ஆனால் ' மக்கட் பேறு ' என்ற பெயரை வைத்துக் கொண்டால், 'மக்கள்'

என்ற பதத்திற்கு 'ஆண் பிள்ளைகள்' என்ற பொருள் காட்டுவது அவ்வளவு எளிதல்ல. 'புதல்வரைப் பெறுவ்' என்று வைத்துக் கொண்டால் தான் 'புதல்வர்' என்ற பதம் 'புதல்வன்' என்பதற்குப் பன்மை யென்று கொண்டு ஆண்பிள்ளைகளை மட்டும் சொல்லலாம்.

இனி, இப்படி 'மக்கள்' என்பதற்கு 'ஆண்மக்கள்' என்பது திருவள்ளுவர் உள்ளத்துக்கு ஒத்ததா என்பதைப் பார்ப்போம். 'மக்கள்' என்பது 'ஆண்மக்கள்' மட்டுமல்ல என்று வள்ளுவரே சொல்லுகிறார்.

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

என்று இந்த அதிகாரத்தில் பின்னுள்ள குறளின் பொருள்: தம்முடைய மக்கள் அவர்களுடைய சிறு கைகளைக் போட்டுக் குழப்பிய உணவு தேவாமிர்தத்தை விட மிகுந்த சுவையுள்ளதாக இருக்கும்—என்பது. இங்கே 'மக்கள்' என்பதற்குப் 'புதல்வர்' என்று கொண்டு ஆண் குழந்தைகள் குழப்புகின்ற உணவு தான் இனிமையாக இருக்கும், பெண் குழந்தைகள் குழப்பினுல் இனிமையாக இருக்காது என்று பொருள் கொண்டால் உண்மைக்குப் பொருந்துமா? இதற்கு அடுத்த குறள்:

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு

என்பது. இதன் பொருள்: தாம் பெற்ற மக்களுடைய உடம்பைத் தீண்டுதல் தம்முடைய உடம்புக்கு இன்பம் தரும். அவர்களுடைய பேச்சைக் கேட்பது காதுக்கு இன்பம் தரும் என்பது. இங்கேயும் 'மக்கள்' என்பது ஆண் மக்களை மட்டுந்தான் குறிக்குமா? இதற்கடுத்த குறள்:

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளா தவர்

இதன் பொருள்: தாம் பெற்ற மக்களின் குதலைப் பேச்சுகளைக் கேட்காதவர்கள்தாம் புல்லாங்குழலின் ஓசையும் வீணையின் நாதமும் இனிமையுள்ளனவென்று சொல்லுவார்கள் என்பது. இங்கும் 'மக்கள்' என்பது ஆண்மக்களை மட்டும் குறிப்பதா?

'மக்கள்' என்ற பதத்தை இங்கே நாம் பெற்றெடுத்த 'குழந்தைகள்' என்ற பொருளில்தான் வள்ளுவர் வைத்திருக்கிறார். மேலுள்ள குறள்களிற் சொன்னபடி, 'சிறு கைகளால் பெற்றோர் உண்ணும் உணவைக் குழப்புவதும்', 'பெற்றோருடைய உடம்பைத் தீண்டி இன்பந் தருவதும்'. 'குழலினும் யாழினும் இனிய மழலை பேசுவதும்' ஆண் பெண் என்னும் இருபால் குழந்தைகளுக்கும் பொதுவாகுமானால் 'அறிவறிந்த' என்பதுமட்டும் ஏன் பெண்ணுக்கும் பொருந்தாதது? 'அறிவறிந்த என்பதற்கு அறியவேண்டியவற்றை அறிந்த என்பதுமட்டும்தான் பொருள். அப்படியிருக்க, அறியவேண்டியதை அறிவதற்கு ஆண் மக்களுக்குத்தான் உரிமையுண்டு என்று சொல்வது நியாயமா? பெண் மக்கள் அறிவறியக் கூடாதா? அவர்களுக்கு அறிந்துகொள்ளக்கூடிய மூளை இல்லையா? அறியவேண்டியதை அறிந்துகொள்ளக் கூடிய புத்திக் கூர்மையில் ஆண்களுக்குப் பெண்கள் குறைந்தவர்களல்ல. சமானம் மட்டுமல்ல: மேம்பட்டவர்கள் என்று கூடச் சொல்லலாம். பெண்ணுலகம் இந்த உரையை ஏற்றுக்கொள்ளுமா? ஏற்றுக்கொள்ளும்படி கட்டாயம் செய்யலாமா? செய்யத்தான் முடியுமா? பின் எதற்காக இப்படி உரை செய்யப்பட்டது? பெண்களை இகழ வேண்டுமென்ற கருத்துடன் பரிமேலழகர் இப்படி உரை செய்தவரல்ல. பின் எதற்காகவென்றால்:

தந்தை தாயருக்கு அவர்கள் இறந்த பின் மகன் திவசம் செய்து தானதர்மங்களைச் செய்தால் அவர்களுடைய ஆன்மா நரகத்துக்குப் போகாமல் பாதுகாக்கப்படும் என்பது இந்து மதத்தினரின் நம்பிக்கை. அப்படிப்பட்ட திவசம் முதலாகிய கர்மங்களைச் செய்த்

தகுதியுள்ளவர்கள் ஆண் மக்களே யல்லாமல் பெண் மக்கள் அல்லவென்பதும் அந்த நம்பிக்கையைச் சேர்ந்தது. திவசம் செய்கிற உரிமை ஆண் மக்களுக்கே யாதலால் அந்த அறிவுக்கும் அவர்களே உரியவர்கள் என்றதை மனதிற்கொண்டு இந்த உரை செய்யப்பட்டிருக்கிறது. ஆண் பிள்ளையைப் பெற்றால்தான் நரகத்துக்குப் போகாமல் சொர்க்கத்துக்குப் போகலாம் என்பது இன்றைக்குப் பெரும்பாலும் இந்துக்களுடைய நம்பிக்கை. அதனாற்றான் அவர்கள் ஆண் பிள்ளை பெற வேண்டுமென்று யாத்திரைகளையும் தானதருமங்களையும் மேற்கொள்வது. அந்தத் திவசம் செய்கிற சடங்கு சம்பிரதாயங்களை மனதிற்கொண்டுதான் அதற்கான அறிவை அறிந்துகொள்ளும் உரிமை ஆண் மக்களுக்கே உண்டு என்று உரை சொல்லப்பட்டது. ஆண் மக்கள் திவசம் முதலிய கடன்களைச் செய்தால் தந்தை தாயருடைய ஆன்மாக்களுக்கு நல்ல கதி கிடைக்கும் என்ற நம்பிக்கை சரியா தப்பா என்பது கேள்வியல்ல. அது ஒரு மதத்தாரின் நம்பிக்கை; அவ்வளவுதான். ஆனால் இந்த நம்பிக்கை ஒரு மதத்தினருடைய நம்பிக்கையே யல்லாமல் எல்லா மனிதர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்த நம்பிக்கையைத் திருவள்ளுவர் எண்ணியிருப்பாரா என்பதுதான் இங்கே கேள்வி. திருவள்ளுவர் இதை எண்ணியிருக்க மாட்டார் என்பது தான் அதற்கு விடை. அவர் எண்ணியிருந்தால் திருக்குறள் எல்லா மதத்தினரும் ஏற்றுப் புகழ்ந்து போற்றும் 'பொது மறை' என்ற புகழ் பெற்றிருக்க முடியாது. திருவள்ளுவர் இப்படிப்பட்ட எந்த சடங்கு சம்பிரதாய நம்பிக்கையையும் இகழ்ந்து பேசுவது இல்லை யென்றாலும் மதச் சார்பான சடங்குகளைப் பொது அறிவாகப் புகுத்துவதில்லை. மதப் பற்றுடைய ஒவ்வொரு மதத்தினரும் திருவள்ளுவரைத் தங்கள் தங்கள் மதத்தைச் சேர்ந்தவர் என்று காரணமும் கற்பித்துச் சொல்லிக்கொண்டாலும் அவர் எந்த ஒரு மதத்தையும் சேர்ந்தவர் அல்லவென்பது திருக்குறள் காட்டுகின்ற உண்மை. ஆதலால் திருவள்ளுவர் 'அறிவறிந்த மக்கள்' என்ற சொற்றொடருக்கு 'அறிய

வேண்டிய நல்லறிவுகளை அறிந்த மக்கள்' என்று ஆண் மக்களையும் பெண் மக்களையும் சேர்த்துத்தான் சொல்லி யிருக்கிறார். 'அறிவறிந்த' என்பது இறந்த காலத்தில் இருப்பதற்கு விசேடப் பொருள் ஒன்றுமில்லை. அறிய வேண்டியதை அறிந்து நடந்துகொள்ளக்கூடிய மக்கள் என்பதுதான் பொருள். ஆண் மக்களுக்கே என்றாலும் தம்முடைய தாய் தந்தையருக்குத் திவசம் செய்யத் தெரிகிற அறிவு ஒன்றுதானா அவர்கள் அறியவேண்டிய அறிவு? தாய் தந்தையரும் கூட, தம் மகனுக்குத் தாம் இறந்த பிறகு தமக்காகத் திவசம் செய்யக்கூடிய ஒரு அறிவு இருந்தாற்போதும்; மற்ற அறிவுகள் எப்படி யிருந்தாலும் பாதகமில்லை என்று மகிழ்ந்து விடுவார் களா?

இப்படி, 'அறிவறிந்த' என்பதற்குள் திவசம் செய்கிற சடங்கைப் புகுத்தி, 'மக்கள்' என்பதற்குப் 'பெண்ணொழிந்த' ஆண் மக்கள் மட்டும் என்றும் பொருள் செய்யவேண்டிய தவறு எப்படி வந்தது என்பதை உணர்த்த இந்தக் குறளுக்கு அடுத்த குறளை யும் அதற்குச் சொல்லப்பட்டிருக்கிற உரையையும் ஆராயவேண்டும். அதையும் பார்த்துவிடுவது நல்லது. அடுத்த குறள் :

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

என்பது. இதற்குப் பரிமேலழகர் உரை : 'பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களுடைய புதல்வரைப் பெறு வானாயின் பிறக்கும் பிறப்பு ஏழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா' — என்பது பதவுரை. இதற்கு விளக்கமாக : 'அவன் தீவினை வளராது தேய் தற்குக் காரணமாகிய நல்வினைச் செய்யும் புதல்வரைப் பெறுவானாயின் என்றவாறாயிற்று. பிறப்பு ஏழாவன: ஊர்வன, நீர் வாழ்வன, பறப்பன, மிருகங்கள், மனிதர். தேவர், தாவரம் என்பன. தந்தை தாயர் தீவினை தேய் தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யும்

தான தருமங்கட்கு அவர் நற்குணம் காரணமாதலின், பண்பென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது" என்பது பரிமேலழகரின் விசேட உரை.

இதில் 'பழிபிறங்காப் பண்புடை மக்கள் பெறின்' என்பதிலுள்ள 'பண்பு' என்பதற்கு, 'தந்தை தாயர் தீவினை தேய்தற் பொருட்டு அவர்களை நோக்கிப் புதல்வர் தானதருமங்களைச் செய்யும் நற்குணம்' என்று பொருள் விரிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பொருள் வருவித்துக் கொண்டதன் காரணம் 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' என்பதற்கு இறந்த பின்வரக்கூடிய ஏழு துன்பங்கள் வந்து சேரமாட்டா என்ற பொருள் இருப்பதனுல் தந்தை தாயருக்கு இனி வரும் ஏழு பிறவி களினிலும் துன்பம் வராமலிருப்பதற்கும் புதல்வருக்கும் சம்பந்தம் உண்டாக்குவதற்கு, இப்படி 'பண்பு' என்ப தற்கு 'தந்தை தாயரின் நல்லகதிக்காகத் தான தருமங் களைப் புதல்வர் செய்யும் நற்குணம்' என்று பொருள் செய்ய வேண்டியதாயிற்று. இதற்கு இப்படிப் பொருள் விரித்துக் கொண்டால்தான் முன் குறளிலுள்ள 'அறிவறிந்த மக்கள்' என்பதற்குத் தாய் தந்தையரை நோக்கித் திவசம் செய்யும் அறிவுடைய ஆண் மக்கள் என்ற பொருள்கூற முடியும். மேலும் இந்தக் குறளுக்கு உரை செய்யப்பட்டிருக்கிற முறையும் சரியல்ல. எப்படி யெனில் :

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்கா
பண்புடை மக்கட் பெறின்

என்பதற்குப் பொருள் : பழிபாவங்களுக்கு ஆளாகாத. நற்குண செய்கைகளையுடைய மக்களைப் பெற்ருல் இனிவரும் ஏழு பிறவிகளுக்கும் துன்பங்கள் அணுக மாட்டா என்பது. 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' என்பதற்கு 'இந்தப் பிறவியில் நேரடியான இன்பங் களும் இனிவரும் ஏழு பிறப்புக்களுக்கும்கூட நற்கதி கிடைக்கக்கூடிய ஆன்ம சாந்தியும் கிடைக்கும்' என்ற கருத்தில் சொல்லப்பட்டதே யன்றி திவசம் முதலான

தான தருமங்களை ஆண் மக்கள் செய்வதனுல் துன்பம் வராது என்ற கருத்தில் சொல்லப்பட்டதல்ல.

பரிமேலழகர் சொல்லுகிறபடி, புதல்வர் பெற்ருேரை நோக்கிச் செய்கிற தான தருமங்களால் பெற்ருேர் இனிப் பிறக்கிற எழுவகைப் பிறவிகளிலும் துன்பங்கள் அடைய மாட்டார்கள் என்பது தத்துவங் களுக்குப் பொருந்தாது. திவசம் தான தருமங்கள் முதலியவற்றைச் செய்கிற நோக்கத்துக்கும் பயனற்றது. ஏனெனில் அவர் சொன்னபடி எழுவகைப் பிறவிகள்—தேவர், மனிதர், விலங்குகள், ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, மரம் செடி கொடிகளாகிய தாவரம். மனிதப் பிறவிகளாக இருந்து வாழ்ந்து இறந்துபோன தாய் தந்தையருக்கு நல்லகதி கிடைக்க 'அவர் தீவினை வளராது தேய்ந்துபோக' வேண்டுமென்றுதானே தான தருமங்களைச் செய்வதாக நம்பப்படுகிறது? அப்படியானுல் அந்தத் தான தருமங்களின் பயனுக அவர்களுடை தீயவினை தேய்ந்து அவர்கள் ஒன்று பிறப்பற்றவர்களாகப் பேரின்பம் பெறவேண்டும் அல் லது தேவராக வேண்டும். இந்த இரண்டு கதிகளும் தீவினை தெய்தலால் பெறக்கூடியவை தீவினை தேயா விட்டாலும் வளராமலிருக்கவேனும் அந்த தான தருமங் கள் பயன்படவேண்டும். அப்படியானுல் மீண்டும் மனிதப் பிறவியேயாவது கிடைக்கவேண்டும். இந்த மூன்றும் இல்லாமல் விலங்காகவாவது, ஊரும் பிராணி யாகவாவது, பறவையாகவாவது, மரமாகவாவது பிறவி கிடைக்குமானுல் அந்தப் பிறவிகளே தீவினை மிகுவதால் வரக்கூடியவைகளாயினவே! அப்படியிருக்க அந்தப் பிறவிகளிலும் 'தீயவை தீண்டா' என்பது எப்படிப் பொருந்தும்?

இறந்துபோன தந்தை தாயரை நோக்கித் தான தரும திவசம் நடத்துகிற சடங்கைப் புகுத்த 'அறிவறிந்த மக்கள்' என்பது ஆண்—மக்களை மட்டும்தான் குறிக்கும் என்பது பெண் குலத்துக்குப் பெரும் பிழை செய்வதாகும். இதைப் போலவே இதே அதிகாரத்தி

லுள்ள இன்னொரு குறளுக்கும் அறிவறியும் தன்மையில் ஆண் இயல்புக்குப் பெண்ணியல்பு குறைந்ததாகச் சொல்லப்பட்டிருப்பது போல உரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குறள் :

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

என்பது. இதற்குப் பரிமேலழகர் சொல்லும் உரை : தன் மகனைக் கல்வி கேள்விகளா னிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய், தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும்—என்பது. அத்துடன் இதற்கு அவர் எழுதியுள்ள விசேட உரையில், “பெண்ணியல்பால் தானாக அறியாமையிற் ‘கேட்ட தாய்’ எனவும் கூறினார்” என்கிறார். இதனால் ஒரு பெண், தன் மகன் சான்றோனாக இருப்பதை அவளாக அறிந்துகொள்ள முடியாது, அதை அறியக் கூடிய அவுடையோர் சொன்னால்தான் அவளுக்குத் தெரியும் என்பது பெறப்படுகின்றது. இதுவும் பெண் குலத்துக்குப் பிழை செய்வதாகும். திருவள்ளுவர் உள்ளத்துக்கும் இது ஒத்ததாகாது.

இந்தக் குறளுக்குப் பொருள் : தன்னுடைய மகன் அறிவொழுக்கங்களாற் சிறந்த நல்லவன் என்று ஊரார் சொல்லுவதைக் கேட்கும்போது தாயானவள் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைவிட அதிகமான பூரிப்பை அடைவாள்—என்பது. இங்கே, சொல்லுகின்றவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்த அறிவுடையோராகத்தான் இருக்க வேண்டுமென்றி கட்டாயமில்லை. அத்துடன் ‘சான்றோன்’ என்பதற்கு இங்கே ‘கல்வி கேள்விகளால் நிறைந்தவன்’ என்பதும் சரியானதல்ல. ஏன் எனில் ‘சான்றாண்மை’ என்பதற்குத் திருவள்ளுவர் கொண்டுள்ள பொருள் கல்வி—கேள்வி நிறைந்தவராக இருப்பதல்ல! சான்றாண்மை என்பதற்கு வள்ளுவர் கொண்டுள்ள ஒரே பொருள் என்னவென்றால் :

குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ள தூஉ மன்று

என்பது. இதன் பொருள் : குணத்தில் நல்லவர்களாக இருப்பதுதான் சான்றோரின் சிறப்பு: மற்றச் சிறப்புகளெல்லாம் எந்தச் சிறப்பு வகையிலும் சேர்ந்தவனல்ல—என்பது. ஆதலால் தாயானவள் தன்னுடைய மகன் மிக நல்ல குணமுள்ளவன் என்று பிறர் சொல்லுவதைக் கேட்கும்போது அவனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைவிட அதிக மகிழ்ச்சியடைவாள் என்பதுதான் சரியான பொருள். ஒருவன் கல்வி கேள்வி நிறைந்தவனு யிருப்பதற்குக் கல்வி கேள்வி யுள்ளவர்கள் மகிழலாம். அவனுடைய தந்தையும் மகிழலாம். ஆனுல் வெறும் கல்வி கேள்வியுடையவன் என்பதற்காகப் பெண் மனம் மகிழ்ந்து விடாது. கல்வி கேள்வி மட்டும் குண நலம் ஆகிவிடாது. கல்வி கேள்வி மிகுந்தும் குணக்கேடு உள்ளவர்கள் பலர். அவன் நல்லவன் என்று பல பேரால் புகழப்படுவதைக் கேட்கிறபோதுதான் பெண்ணுகிய தாய் மனம் மகிழும். அந்தப் பெண்ணியல்பின் இரக்கக் குணத்தைப் பற்றியே, குறிப்பாக இந்த மகிழ்ச்சியைத் தாய்க்குமட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. மகனுடைய கல்வி கேள்வியைப் பற்றிய விசாரமும் அதைப் பற்றிய மகிழ்ச்சியும் தாயைவிட தந்தைக்குத்தான் அதிகச் சம்பந்தப்பட்டவை என்று காட்டுதற் கென்றே சொன்னதுபோல :

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்

என்ற குறள் அமைந்திருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கது. இந்தக் குறளின் பொருள் : தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய நல்ல காரியம் என்னவென்ருல், அவன் கற்ருேர் சபையில் முதல் வரிசையில் இருக்கும்படி செய்து வைப்பதுதான். அதாவது மகன் கல்வி கேள்வி நிறைந்தவனுக இருக்கும்படி அதற்காவன

செய்வதுதான் ஒரு தகப்பன் மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை. அப்படிப்பட்ட மகன்றன் கல்வி கேள்வி நிறைந்தவர் கூடியுள்ள சபையில் முன்னணியில் இடம்பெறுவான்—என்பது.

அதனால், தன் மகன் சான்றோனாக இருப்பதை ஒரு தாயானவள் அவளுடைய பெண்ணியல்பால் தானாகவே அறிந்துகொள்ள முடியாதவள்; அறிவுடையோர் சொன்னால்தான் அறிவாள் என்று தோன்றும்படி செய்திருப்பது பெண் இனத்துக்குப் பிழை செய்வதாகும்.

## பொதுமை

திருக்குறள் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்துகின்ற பொதுவான அறிவைப் போதிக்கின்றது. அதுமட்டுமன்று; அது எல்லா நிலையிலும் உள்ள எல்லாருக்கும் பயன்படக்கூடிய முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. உலகிலுள்ள அறிவையெல்லாம் வடித்தெடுத்தது போன்றது திருக்குறள். குறிப்பாக இன்னாருக்கு என்று சொல்லப்படுகிற குறள்களைத் தவிர எல்லாக் குறள்களும் எல்லா மனிதருக்கும் பொதுவானவை. உதாரணமாக 'செங்கோன்மை', 'கொடுங்கோன்மை', 'வெருவந்த செய்யாமை', என்ற அதிகாரங்கள் அரசனுக்கும் அரசாட்சிக்கும் மட்டும்தான் என்பது அதிலுள்ள பதங்களே காட்டும். ஆனால் அதே அரசியல் பகுதியில் மேற்சொன்ன மூன்று அதிகாரங்களுக்கும் அடுத்துவரும் 'கண்ணோட்டம்' என்ற அதிகாரம் அரசியலில் சொல்லப்பட்டிருந்தாலும் அரசனுக்கு மட்டும் சொல்லப்பட்டதல்ல என்பது அதிலுள்ள பதங்களும் கருத்துக்களும் காட்டும். அதே மாதிரி 'அங்கம்' என்ற பகுதியில் 'அமைச்சு' என்ற அதிகாரம் மந்திரிகளுக்கென்றே குறிப்பாகச் சொல்லப்பட்டுள்ளது. அந்த 'அமைச்சு' என்ற அதிகாரத்துக்கு அடுத்த அதிகாரம் 'சொல்வன்மை' என்பது. இது அமைச்சருக்கு

மட்டும் சொல்லப்பட்டதல்ல என்பதை அதிலுள்ள குறள்கள் காட்டும். இப்படியே மற்றப் பகுதிகளிலும்.

மேலும் 'இல்லறம்', 'துறவறம்' என்பனவற்றிலும் அதிகாரத்தின் நோக்கமறிந்து அது அது யாருக்குச் சொன்னது என்று அறியவேண்டும். இல்லறத்திற் சொல்லப்பட்ட எதுவும் துறவறத்தானுக்கல்ல என்று சொல்லிவிட முடியும். ஆனால் துறவறத்தானுக்குச் சொல்லப்பட்டுள்ளவற்றில் அநேகம் இல்லறத்தானுக் கும்நல்லது. உதாரணமாகப்'புலால்மறுத்தல்' (மாமிசம் உண்ணாமை) 'கள்ளாமை' (திருடாதிருப்பது) வாய்மை (சத்தியம் பேசுவது' 'வெகுளாமை' (கோபங் கொள் ளாமை) 'இன்னா செய்யாமை' பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமை), 'கொல்லாமை' (பிற உயிரைக் கொல்லாதிருப்பது) முதலிய அதிகாரங்களிலுள்ள கருத்துகளெல்லாம் துறவறப் பகுதியில் இருந்தாலும் எல்லா மக்களுக்கும் பொதுவாகவே சொல்லப்பட்டிருப் பது, அவை சொல்லப்பட்டிருக்கிற விதத்திலிருந்தே விளங்கும்.

ஆனால் உரையாசிரியர்கள் பல இடங்களில் எல்லா மக்களுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட குறள்களுக் கும் அவை சிலருக்கே சொல்லப்பட்டன போன்று உரை செய்திருப்பதால் திருக்குறளின் சிறப்பும் பயனும் குறைந்துவிடுகின்றன. ஒரு உதாரணம் பார்ப்போம்.

'கள்ளாமை' என்ற அதிகாரம் துறவறப்பகுதியில் உள்ளது. 'கள்ளாமை' என்றால், 'பிறர்பொருளைத் திருடிக்கொள்ளாதிருப்பது' என்று அர்த்தம். திருடக் கூடாது என்று சொல்லும்போதே அது எல்லா மக்க ளுக்கும் வேண்டிய நல்லறிவு என்பது தோன்றும். அப்படியிருக்க பரிமேலழகர் இல்லறத்தான் திருடினாலும் திருடலாம். ஆனால் துறவறத்தான் திருடக்கூடாது என்று பொருள் கொள்ளச் செய்கிறார். அதிகாரத்தின் பெயராகிய 'கள்ளாமை' என்பதை அதிகார ஆரம் பத்தில் விளக்குகிறார். அந்த விளக்கம்: “அஃதாவது,

பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை. கருதுதலும் லெய்தலோடு ஒத்தலின், 'கள்ளாமை' என்றார். இல் வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின் அதனைக் கருதிய வழியும் பெரியதோ ரிழுக்கமாம். ஆகலின், இது துறவறமாயிற்று. புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர் மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலே யன்றி, அது தன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோர் இழுக் காதல் அறிக: இவ்வாறு 'வாய்மை' முதற் 'கொல் லாமை' யீறாய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்ற தாகலின் இது காமம் பற்றி நிகழ்வதாய 'கூடவொழுக் க'த்தின் பின் வைக்கப்பட்டது"—என்பது 'கள்ளாமை' என்ற அதிகாரத்திற்கு விளக்கமாகப் பரிமேலழகர் சொல்லும் முன்னுரை.

இதில் பல குழப்பங்கள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் எடுத்துரைக்க இடம் போதாது. சொல்லப் புகுந்ததை மட்டும் சொல்வோம். 'கள்ளாமை' என்ற அதிகாரம் துறவிகளுக்கு மட்டும்தான் சொல்லப்பட்டது என்பதை நிலைநாட்டிக் கொள்வதற்காக இல்வாழ்வான் திருடிக்கொண்டாலும் குற்றமில்லை என்று சொல்லு கிறார். அதுமட்டுமின்றி 'வாய்மை' என்ற அதிகாரம் முதல் 'கொலலாமை' என்ற அதிகாரம் முடியத் துறவி களுக்கு மட்டும்தான் சொல்லப்பட்டன என்று கொள்ளும்படி கட்டாயப் படுத்துகிறார். அப்படிக் கொள்வது திருவள்ளுவரின் உள்ளத்துக்கு ஒத்ததா? இந்த அதிகாரங்களிலுள்ள குறள்களில் உள்ள பதங்கள் அப்படி நினைக்க இடம் தருகின்றனவா? என்பனவற்றை சிறிது ஆராய்வோம்:

இந்தக் 'கள்ளாமை' என்ற அதிகாரத்தின் முதற் குறள் :

எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு

இதன் வசன நடை : எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும் தள்ளாமை தன் நெஞ்சு காக்க—என்பது.

இதன் பொருள் ; பிறரால் இகழப்படாமலிருக்க விரும்புகின்றவன் எந்த ஒரு பொருளையும் திருடிக் கொள்ளத் தன்மனம் நினையாமல் இருப்பதைக் காக்க வேண்டும்—என்பது. இதில் 'எள்ளாமை வேண்டுவான் என்பான்' என்ற சொற்றொடர் 'இகழப்படாமல் இருக்க விரும்புகின்ற ஒவ்வொருவனும்' என்ற பொருளில்தான் நிற்கிறது. அதுதான் இயல்பாகத் தோன்றுகிற பொருள். இந்தக் குறளில் உள்ள எந்தப் பதமாவது துறவியை இழுத்துப் போட்டுப் பொருள் கொள்ள இடங்கொடுக்கின்றதா என்று பாருங்கள். இல்லை.

ஆனால் பரிமேலழகர் இந்த அதிகாரம் முழுதும் துறவிகளுக்கு மட்டும்தான் சொல்லப்பட்டதென்று தீர்மானம் செய்துகொண்டதால் அதற்கிணங்கப் பொருள் கூட்ட வேண்டியதாகிவிட்டது. அதற்காக இந்தக் குறளுக்கு அவர் தந்துள்ள உரை என்ன வெனில் :

(இ—ள்) எள்ளாமை வேண்டுவான் என்பான்= வீட்டினை இகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவான் : எனைத்தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க=யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்க—என்பது. அதாவது 'மோட்ச வீட்டை இகழாது விரும்புகின்ற துறவி இவன்' என்று

மற்றத் துறவிகளால் நன்கு மதிக்கப்படுகிற ஒரு துறவி எதையும் திருட நினைக்காமல் தன் மனதை அடக்க வேண்டும்—என்பது இவர் சொல்லுகின்ற பொருள். இது சரியாகுமா? அப்படியும் மற்றத் துறவிகள் நன்கு மதிக்க வேண்டுமென்று ஒரு துறவி திருடாமல் இருக்க வேண்டும்? அப்படியானல் இந்தத் துறவி திருடுவது துறவிகளிடத்திலிருந்தா? அப்படியும் திருடுவதற்கு மற்றத் துறவிகளிடத்தில் என்ன இருக்க முடியும்? அவர்களுடைய கந்தல் துணியையும் கப்பரையையும் தான் திருட வேண்டும். மேலும் 'கள்ளாமை' என்பதற்கு இவர் வரையறுக்கிறபடி 'வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை கருதுதலும் செய்தலோடு ஒத்தலின் 'கள்ளாமை' என்றார் என்பது மட்டும் பொருளானல் ஒருவன் திருடுவதையே நினையாமலிருப்பதையும் நினைப்பதையும் மற்றவர்கள் எப்படி அறிய முடியும்? எதைக் கொண்டு மற்றவர்கள் இவனை நன்கு மதிக்க முடியும்? 'வீட்டினை இகழாது விரும்புகிறவன் இவன் என்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவது' எப்படி?

இந்தக் குறள் துறவிகளுக்குமட்டும் சொன்னதாகப் பொருள் சொல்லவேண்டிய அகத்தியத்தால் 'எள்ளாமை வேண்டுவான்' என்பான் என்பதற்கு 'வீட்டினை இகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப் படுவான்' என்று பொருள் செய்து விட்டதால் இனி இந்த 'வீட்டினை இகழாது' என்று சொன்னதை விளக்க வேண்டியதாயிற்று. அந்த விளக்கமாகப் பரிமேலழகர் மேலும் சொல்லியிருப்பது இன்னும் குழப்பத்தை அதிகப்படுத்துகிறது. அந்த விளக்கம் என்னவென்றால் :

'வீட்டினை யிகழ்த'லாவது காட்சியே அளவையாவது என்றும், நிலம், நீர், தீ, வளி எனப் பூதம் நான்கே என்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு மதுவின்கண் களிப்புப்போல் வெளிப்பட்டு அழியும் என்றும், இறந்த உயிர் பின் பிறவாதென்றும்,

இன்பமும் பொருளும் ஒருவனுல் செய்யப்படுவன என்றும் சொல்லும் உலோகாயதம முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து, அவற்றிற் கேற்ப ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின் அதுவுங் களவாமாகலின், 'எனைத் தோன்றும்' என்ருர். நெஞ்சு கள்ளாமற் காக்கவெனவே துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக் கருது தல் என்பது பெற்றும்—என்பது.

இது வெறும் சமயவாதம். இங்கே வேண்டாத விஷயம். இதை இங்கே வருவித்துப் பேசுவது திருவள்ளுவருடைய உள்ளத்திற்கு ஒரு சிறிதும் ஒவ்வாது. ஏன் எனில் திருவள்ளுவர் சமயவாதங்களுக்கு இடமளிக்கக்கூடிய எதையும் சொல்லுவதில்லை. வீடு என்று சொல்லப்படுகிற முத்தி, மோட்சம், பேரின்பம் என்பனவற்றைப் பற்றிய நம்பிக்கையை அவரவர் அவரவருடைய மனதுக்கேற்றபடி தெரிந்து கொள்ள விட்டுவிட்டார். அதனுல்தான் அவர் அறம், பொருள், இன்பம், வீடு—என்ற நான்கு பொருள்களில் வீடு என்பதைப்பற்றிப் பேசவே இல்லை. ஆனுல் வீடுபெற முடியும் என்ற நம்பிக்கையை மட்டும் அங்கங்கே குறிப்பிடுகிருர்.

அதுபோக, இந்த விளக்க உரையில் 'ஞானத்துக்கு ஏதுவாய மெய்ந்நூற் பொருளையேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக்கொள்ளின், அதுவும் களவாம் ஆகலின் 'எனைத் தோன்றும் என்ருர்' என்பதும், 'துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதல் என்பது பெற்றும்' என்பதும் மிகவும் குழப்பமுண்டாக்குவன. 'ஞானத்துக்கு ஏதுவாகிய மெய்ந்நூற்பொருளை ஆசிரியனை வஞ்சித்து எடுத்துக் கொள்வது எப்படி? அறிவைத் திருடிக்கொள்ளு வதோ திருடிக் கொள்ள நினைப்பதோ எப்படி?

இவ்வளவு குழப்பத்துக்கும் காரணம் இந்த 'கள்ளாமை' என்ற அதிகாரம் துறவிகளுக்கு மட்டும்

தான் பொருந்தும் மற்றவர்க்கல்ல என்று எண்ணி விட்டதுதான். இது மட்டுமன்றி 'வாய்மை', 'வெகுளாமை', 'இன்னு செய்யாமை', 'கொல்லாமை' என்ற நான்கு அதிகாரங்களும்கூட துறவிகளுக்குத்தான் சொல்லப்பட்டது என்று சொல்லுவது சரியல்ல என்பதை அந்தந்த அதிகாரங்களிலுள்ள குறள்களின் பதங்களே காட்டும். உதாரணமாக 'வாய்மை' என்ற அதிகாரத்தில்:

மனத்தோடு வாய்மை மொழியிற் றவத்தோடு
தானஞ்செய் வாரிற் றலை

இதன் பொருள் பரிமேலழகர் சொல்லுகிறபடியே ஒருவன் தன் மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானுயின் அவன் தவமும் தானமும் ஒருங்கு செய் வாரினும் சிறப்புடையன்—என்பது. இது பரிமேலழகர் வாக்கு. இதில் 'தவம்' செய்வது யாரைச் சேர்ந்தது? துறவறத்தானுக்கே சொன்னதல்லவா தவம்? பின் 'தவம் செய்வாரினும் சிறப்புடையன்' என்ருல், எவன் 'தவம் செய்வாரினும் சிறப்புடையன்? அவன் 'இல்லறத் தான்' என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது. அதனல் இந்தக் குறளின் விரிவுரை: ஒருவன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானுயின் அவன் தவம் செய்கிற துறவியை விடவும் தானம் செய்கிற செல்வவானை விடவும் சிறப்புடையவன்—என்பதுதான். 'வாய்மை' என்ற அதிகாரம் துறவிகளுக் குத்தான் என்ருல் இங்கே இல்வாழ்வான் தவம் செய்யும் துறவியை விடச் சிறப்புடையன் ஆனது எப்படி?

இப்படி 'கள்ளாமை', 'வாய்மை', 'வெகுளாமை', 'இன்னு செய்யாமை', 'கொல்லாமை' ஆகிய ஐந்து அதிகாரங்களும் துறவிகளுக்கு மட்டும்தான் சொல்லப் பட்டன வாகப் பொருள் கூறப் புகுந்ததனல் உரையில் பல பிழைகள் படிந்து விட நேர்ந்தது. இன்னொரு உதாரணம்:

சொல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்

என்றது 'வெகுளாமை' என்ற அதிகாரத்தின் முதற் குறள். வெகுளாமை என்பது கோபங்கொள்ளாமல் இருப்பது. இந்த நல்ல குணம எல்லா மனிதர்களுக்கும் இருப்பது நல்லது என்றுதான் எண்ணம் உதிக்கிறது. இந்த அதிகாரத்திலுள்ள குறள்கள் எல்லாவற்றிலும் உள்ள பதங்களும் அவற்றின் அமைப்பும் அப்படித்தான் காட்டுகின்றன. மேலேயுள்ள முதற் குறளிலுள்ள பதங்கள் நமக்கு என்ன பொருள் தருகின்றன வென்பதைப் பாருங்கள். அந்தப் பொருள்; ஒருவன் தன்னுடைய கோபம் யாரிடத்தில் செல்லுமோ அவரிடத்தில் கோபத்தைச் செலுத்தாமல் அடக்கிக் கொண்டால் அவன்தான் கோபத்தை அடக்கினவனுவான்: தன்னுடைய கோபம் செல்லாது என்ற இடத்தில் அதை அடக்கினுலென்ன அடக்காவிட்டாலென்ன?—என்பது இங்கே துறவியை இழுத்து வைத்துப் பொருள் சொல்ல இதிலுள்ள எந்தப் பதமும் இடங்கொடுக்காது, பரிமேலழகர் சொல்லுகின்ற பத உரையிலும் அப்படிச் சொல்ல இடம் காணுமல் ஒரு அவசியமில்லாத சொல்லே வருவித்துக் கொள்ளுகிருர். அவர் சொல்லும் உரை. தன் சினம் பலிக்குமிடத்து அதனை யெழாமல் தடுப்பானே அருளால் தடுப்பானுவான். ஏனைப் பலியாத விடத்துஅதனைத்தடுத்தாலென், தடாதொழிந்தாலென்? —என்பது. இது துறவிக்கு மட்டும் சொன்னது என்றதை உறுதிப் படுத்துவதற்காக அருளால் என்ற சொல்லே வருவித்துக் கொள்ளுகிருர். இதை விளக்கப் பின்னுல் சொல்லியிருக்கிற விசேட உரை: 'செல்லிடம்' அல்லிடம்' என்றது தவத்தால் தன்னின் மெலியாரையும் வலியாரையும்........................................என்பது. இதனுல் இந்தக் குறளுக்கு அர்த்தம்: 'துறவியானவன் தன்னிலும் தவவலிமையில் குறைந்தவர்கள்மீது தன்னுடைய கோபத்தைச் செலுத்தாமல் அடக்கிக் கொண்டால்தான் அது கோபத்தை அடக்கிக்கொண்டதாகும்; அப்படியல்லாமல் தன்னிலும் தவவலிமையில் மிகுந்தவ

னிடத்தில் தன் கோபத்தைச் செலுத்தாமல் அடக்கினு லென்ன அடக்காவிட்டாலென்ன?, என்றுதான் ஆகி றது. இது சரியானதா? இது திருவள்ளுவருடைய உள்ளத்துக்கு ஓத்ததாகுமா?

பின்னும் இதே துறவறப் பகுதியில் 'புலால் மறுத் தல்' என்ற அதிகாரமும் துறவிக்குமட்டும் என்று சொல் லப்பட்டதல்லவென்பதை அந்த அதிகாரத்திலுள்ள :

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனில் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்

என்ற குறள் காட்டும். இதன் பொருள் : உலகத்தில் மாமிசம் உண்பதற்காகப் பிராணிகளைக் கொல்லுவது இல்லையானால் மாமிசத்தை விலைக்கு விற்பவர்களும் இருக்கமாட்டார்கள். அதாவது மாமிசத்துக்காகப் பிராணிகளைக் கொல்லுவதான காரணம் உலகத்தில் மாமிசம் உண்பவர்கள் இருப்பதுதான். உண்பவர்கள் இல்லாவிட்டால் பிராணிகளைக் கொன்று மாமிசத்தை விலைக்கு விற்பவர்களும் இருக்கமாட்டார்கள்—என்பது. இந்தக் குறளை எப்படியெல்லாம் பிரித்துக் கூட்டிப் பொருள் சொன்னாலும் இது உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் சொன்னதேயன்றித் துறவிக்கு மட்டும் சொன்னதாகக் காட்ட முடியாது.

தமிழ் மக்களின் நன்றிக்கும் வணக்கத்துக்கும் மிக மிகவும் உரியவரான பரிமேலழகரும் இப்படிப் பல இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்குப் பொருந் தாத உரைகளைச் செய்ய நேரிட்டது அவருடைய காலத்திலிருந்த சூழ்நிலைகள் காரணமாக இருக்கலாம். முக்காலத்தையும் உணர்ந்து, எக்காலத்துக்கும் அழி வில்லாத சத்தியங்களின் அடிப்படையில் எழுதப் பட்டுள்ளது திருக்குறள். அந்த உண்மையை சமய வாதங்களும் சடங்கு சம்பிரதாயங்களும் மிகுந்திருந்த அக்காலத்தில் முழுதும் உணர முடியவில்லை போலும்.

இந்திய நாட்டின் ஞான நூல்களில் மறைந்து கிடந்த சாந்த—சத்திய—சன்மார்க்க வாழ்வின் பெரு

மையை மகாத்மா காந்தியவர்கள் தோன்றி வாழ்ந்து காட்டுகிற வரையிலும் மக்கள் உணரவும் முடியவில்லை; நம்பவும் முடியவில்லை. மகாத்மா காந்தியின் ஒவ்வொரு சொல்லும் எழுத்தும் செயலும் எனக்கு ஒவ்வொரு குறளை விளக்கியது. எக்காலத்துக்கும் அழியாத சத்தியங்களையே தழுவி அவர் நடத்திய வாழ்க்கை திருக்குறளின் பெருமையைத் தெளிவாகக் காட்டியது. அதுதான் காந்தியைப் போலவே வாழ்க்கை நடத்திய வள்ளுவரின் உள்ளத்தை உணரச் செய்தது. அந்த உணர்ச்சியின் உழைப்பும் பயனுமே எளியேனுடைய 'திருக்குறள் புதுஉரை'. என்னுடையது புது உரையின் கையெழுத்துப் பிரதிகளை படித்து மகிழ்ந்து பாராட்டிய நண்பர்களிற் சிலர் நான் காந்தீயக் கண்கொண்டு குறளுக்கு உரை கண்டிருப்பதாகப் புகழ்ந்தார்கள். ஆனால் அது சரியல்ல. நான் எனது உரையில் காந்தி யடிகளின் பெயரைக்கூடச் சொல்லவில்லை. காந்தியடி களின் அற்புத வாழ்க்கைதான் திருக்குறளின் பெரு மையை நான் உணர்தற்கு உதவியது என்றாலும் நான் அறிந்து கொண்ட உண்மை என்னவென்றால் திருக் குறளிலுள்ள ஞானந்தான் காந்தியாக வடிவெடுத்து வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டியது என்பதே. ஏனெனில் காந்தி மகான் வந்ததும் வாழ்ந்ததும் நேற்று நடந்தவை, ஆனால் திருக்குறளிலுள்ள மெய் யறிவு எல்லையற்ற காலந்தொட்டு இந்நாட்டில் இருந்து வருவது. ஆம்.

*

5 JUN 1975

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

Jacket Printed at
The Progressive Printers, Madras-1.